சுதேசமித்திரன்

11—7—48

விலை 4 அணா

THE SWADESAMITRAN ILLUSTRATED WEEKLY



தாய்மார்கள் அறிவர்

:: உட்வார்ட்ஸ் க்ரைப் வாட்டரின் ::
மதிப்பு தாய்மார்களுக்குத் தெரியும்.
அது குழந்தைகளை நன்கு பாதுகாக்கும்

WOODWARD'S
GRIPE WATER

keeps baby well

I-WW108-111 W. WOODWARD LTD LONDON. ENGLAND

10 I.T.L. பெயர் பெற்ற தயாரிப்புகள்

1. காட்லிவர் ஆயிலுடன் கூடிய மால்ட் எக்ஸ்ட்ராக்ட்: வயது வந்தவர்களுக்கும் குழந்தைகளுக்குமான போஷாக்களிக்கும் டானிக்.
2. கிரைப் ஸிரப்: குழந்தைகளின் ஜீரண சக்தி கோளாறுகளை நிவர்த்தி செய்யும் சிறந்த ஔஷதம்.
3. ஐடியால்: விஷமற்ற, கறைபடாத, கழ மணமுள்ள அரிக்காத சிறந்த கிருமி நாசினி.
4. ஜெகோரால்: லைம் & ஹைபோ பாஸ்பேட் சேர்ந்த காட்லிவர் ஆயில் எமெல்ஷன்.
5. ரெடிகுலின்: லிக்விட் எக்ஸ்ட்ராக்ட் ஆப் லிவர். ரத்தசோகைக்கு கைகண்ட ஔஷதம்.
6. ஸெடேடின்: எலிக்ஸிர் ஹைட் ராஸ்டிஸ் காம்பௌண்ட், ஸ்திரீகளுக்கான சிறந்த ஔஷதம்.
7. விடோபெரின்: போஷாக்களிக்கும் டானிக். அயம், A & D விடமின், மற்ற உலோகப் பொருள் சத்துக்கள், சேர்ந்தது.
8. க்ளூகோனேட்-D: கால்ஷியம் குறைவான எல்லா வியாதிகளுக்கும் குணமளிக்கவல்ல ருசியான மருந்து.
9. விடோமால்ட்: விடமின் சத்துக் குறைவுக்கு ஏற்ற மருந்து. விடமின் A, B, C & D யுடன் மால்ட் எக்ஸ்ட்ராக்டும் சேர்ந்தது.
10. ஹைபர்-D காட்லிவர் ஆயில்: விடமின் A & D சேர்ந்த சுத்தமான காட்லிவர் ஆயில்.

பெங்களூர், மல்லேஸ்வரம், மைசூர் இண்டஸ்ட்ரியல் & டெஸ்டிங் லாபரேடரி லிமிடெட்டாரால் தயாரிக்கப்பட்டவை.

விற்பனை ஏஜன்டுகள்.

பெஸ்ட் அண்ட் கம்பெனி லிமிடெட்,

தபால் பெட்டி 63, சென்னை.

DJK 75 TM

கதா மோகன ரஞ்சிதம்

3-பாகங்கள் **விலை ரூ. 2-8-0**

தபாற் செலவு பிரத்யேகம்.

மானேஜர்: ''சுதேசமித்திரன்'' புத்தகசாலை, மவுண்ட்ரோட், சென்னை

A. V. S. டாப்பியோக்கா கிழங்கு மாவுகள் சுத்தமாயும், சுகாதார முறைப்படியும் நீண்டநாள் அனுபவத்தில் தயாரிக்கப்பட்டவை. அவைகள் கலப்பில்லாதவையென்பதற்கு அத்தாக்ஷி மைக்ருஸ்கோப் என்னும் கண்ணாடி மூலம் பரிசோதனை செய்து நாணயமான டாப்பியோக்கா மாவு என்று ஸர்ட்டிபிகேட் பெற்றிருக்கிறோம். போண்டா, பஜ்ஜி, முறுக்கு, ஓமப்பொடி, சர்க்கரை சேவு, தோசை, ஹல்வா, மைசூர்பாக்கு, பால்கோவா, பிஸ்கட், கேக், உப்பிட்டு சேமியா, ஜவ்வரிசி, மிட்டாய் தினுசுகளும் இன்னும் வேண்டிய தின்பண்டங்களும், பலகாரங்களும் தயாரிக்கலாம்.

எங்களிடம் முதல்தரமான ஜவ்வரிசி ஈரோடு, சேலம் மஞ்சள் ரகங்கள், நெ. 1. மஞ்சள் தூள், கடலை எண்ணெய், சுருட்டுக்கும், பீடிக்கும் வேண்டிய உயர்தரமான புகையிலை ரகங்கள் மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும். 4 அந்தர் எடைபோடக்கூடிய பைபீல்ட் வேயின் மெஷின் தராசும் சப்ளை செய்கிறோம். கேட்லாக் வேண்டுவோர் எழுதவும்.

ஜவ்வரிசி தயாரிக்கும் முறை அடங்கிய புத்தகம் வேண்டுவோர் ரூ. 1. அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். மற்ற விவரங்களுக்கும் சாம்பிளுக்கும் எழுதவும்.

A. V. சுப்ரமணியம்,

A. V. S. டாப்பியோக்கா பிளவர் மில்ஸ், அண்டு மஞ்சள் எண்ணெய் சப்ளையர்கள், புகையிலை ஹோல் சேல் லைசென்ஸ்தாரர்கள் ஈரோடு. (S. I. R.) தந்தி: INSAF.

சிறந்த கூந்தல் உணவு

உங்கள் சரீரத்திற்கு நல்ல உணவு அவசியமானதுபோல் கூந்தலுக்கும் நல்ல உணவு அவசியமாகும். உங்கள் கூந்தலின் வசிகரம் நீங்கள் உபயோகிக்கும் கூந்தல் தைலத்தைப் பொறுத்ததே.

காமினியா ஆயில் (ரெஜிஸ்டர்ட்)

மூளைக்குக் குளிர்ச்சியூட்டி கூந்தல் வளர அவசியமான பலவித சத்துக்கள் சேர்ந்தது. மயிர்க்கால்களுக்கு அவசியமான போஷாக்கு அளிக்கையில் ஆரோக்யமாக வளரவும் உதவுகின்றது. பொடுவன்களைப் போக்கி, கூந்தல் உதிர்வதை நிறுத்தும்.

ஆயிரக்கணக்கானவர்கள் காமினியா ஆயில் உபயோகித்துப் புகழ்ந்துள்ளனர்.

இன்றே பரீக்ஷித்து திருப்தி அடையுங்கள்.
எல்லா ஸ்டோர்களிலும் விற்கப்படுவது.
எப்பொழுதும் உபயோகியுங்கள்.

ஆடோ டில்பஹார் (ரெஜிஸ்டர்ட்)

இணையற்ற வாசனையுள்ளது. நீடித்த நறுமணம் உள்ளது. தபால் முதலிய சார்ஜிற்கு 4 அணு ஸ்டாம்பு அனுப்பி சாம்பிள் வாங்கிப் பாருங்கள்.

Sole Agent:—ANGLO INDIAN DRUG & CHEMICAL CO., 285, Jumma Musjid, P.O. Box 2085, Bombay 2.

வைத்தியரத்ன யு. ராமநாத சாஸ்திரிகளின்

ஸித்தமகரத்வஜம்
(தங்கம் சேர்ந்தது.)

அங்கங்களையும் நரம்புகளையும் பலப்படுத்தும். திடசாலியாயும் யௌவனமாயும் இருக்கலாம். 80 மாத்திரை சீசா 1-க்கு ரூ. 7

மஹாபில்வாதி லேகியம்

பித்தம் அஜீரணம், மலபந்தம் முதலிய வயிற்று கோளாறுகளை உடனே கண்டித்து விடும். ஒரு சேர் டப்பி 1-க்கு ரூ. 4.

ஸ்ரீ தன்வந்திரி கவசம்

வியாதி, மனோவிசாரம், தரித்திரம், இவைகளை விலக்கி உத்தியோக வியாபார லாபங்கள், காரிய ஸித்தி, ஜனவசியம் இவைகளை அளிப்பதில் அபாரமான சக்தி உள்ளது. இதில் வசீகரண மூலிகை பிரதி ஸரஸ்வத்ரம் ஸ்ரீதன்வந்தரி யந்திரம், இவைகளை மந்திர பூர்வமாய் ஸதாபிக்கப்பட்டு இருக்கிறது கவசம் 1-க்கு ரூ. 3

ஆனந்த படை நிவாரணி

எல்லாவிதமான படைகளையும் திரும்பி வராமல இருக்கும்படி ஓரே வேளையில் போக்கிவிடும். டப்பி 1-க்கு ரூ. 1.

ஆனந்த பற்பொடி

(40 வருஷங்களாக புகழ்பெற்றது.)

சென்னை ஹைக்கோர்ட்டில் உரிமை பெற்றது. இந்தியாவில இது ஒன்றுதான் சிறந்தது. எங்கும் கிடைக்கும். கேட்லாக் இனாம்.

ஸகலத்துக்கும் வி. பி. பிரத்யேகம்

வைத்திய ஸித்தாச்ரமம்
பஜார் ரோட், மைலாப்பூர், மதராஸ்

S.A.H
TRADE MARK

Rgd. No. 2221.

28 வருஷமாய் தென்னாடு முழுவதும் பிரசித்தி பெற்று வரும்

சேலம் மூன்று தாமரை பீடிகளை

உபயோகித்து சந்தோஷமடையுங்கள்.

Prop: S. அஹமத் உசேன், கோட்டை, சேலம் - *S.I.R*



எல்லாவிதமான எலக்டிரிக் சாமான்கள் கண்டிரோல்விலைக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும்.

***M. R.* பார்த்தசாரதி ஐயங்கார்,**
28, துளசிங்கப் பெருமாள் கோவில் தெரு,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

இந்த முக்கிய அறிவிப்பை நீங்கள் அவசியம் படிக்கவேண்டும்!

லக்ஷக்கணக்கானவர்களுக்கு இது உதவியளிக்கும்.

பிரிய வாசகர்களே. நான் ஒரு நாட்டு வைத்தியனோ அல்லது இங்கிலீஷ் டாக்டரோ அல்ல ஆனால், என் துர் நடத்தைகளின் பலனை அனுபவிக்க நேர்ந்த ஒரு துர்பாக்கியன் நான் கேவலமான எனது கெட்ட செய்கைகளின் பயனாய் பல கஷ்டங்கள் ஏற்பட்டு முடிவில் எனது வலிமை முழுதும் இழக்க நேரிட்டது.

நாளுக்கு நாள் நான் மிகவும் பலவீனமடைந்து வந்தேன். ஹிருதயத் துடிப்பு அதிகரித்தது அடிக்கடி கிறுகிறுப்பும் மயக்கமுமாக வந்தது அந்தரங்கமாக ஆயிரக் கணக்கான டாக்டர்களிடம் சிகிச்சை செய்துகொண்டு பார்த்தேன். ஒருவித குணமும் ஏற்படவில்லை இந்த துன்பமயமான வாழ்வு வாழ்வதைவிட இறப்பதே மேல் என்று நான் நினைக்க ஆரம்பித்தேன்

அதிர்ஷ்டவசமாக வேலை நிமித்தம் நான் பெஷாவர் செல்ல நேர்ந்தது அங்கு ஒரு மஹாத்மாவைச் சந்திக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. சோகமே உருவாகத் தோன்றிய என்மேல் அவர் கருணை கொண்டு என்னைப்பற்றி விசாரித்தார். சஞ்சலத்தில் மூழ்கிக் கிடந்த என் மனம் மஹாத்மாவிடம் உண்மையைச் சொல்லும்படி தூண்டியதால் அவரிடம் மறைக்காமல் என் தேக நிலையின் உண்மையைத் தெரிவித்தேன் மஹாத்மா என்மேல் பச்சாதாபம்கொண்டு உள்ளுக்கு ஒன்றும் வெளியே பூசுவதற்கு ஒன்றுமாக இரு மருந்துகள் தயாரிக்கும் முறையை எனக்குக் கற்பித்தார் அவர் போதனையின்படி அவர் முன்னிலையிலேயே மூலிகைகளை சேகரித்து இந்த இரு மருந்துகளையும் தயாரித்த பிறகு சாப்பிட ஆரம்பித்தேன்,

பிரிய வாசகர்களே! நான் கடவுள் சாட்சியாகக் கூறுகிறேன். 7-வது தினமே எனக்கு இளமை திரும்பி விட்டது எனது வலிமையைப் பற்றி நான் இப்பொழுது பெருமை கொள்ளுகிறேன் சில டோஸ்கள் சாப்பிட்டதுமே வியாதி சற்று குறைந்தாலும் மஹாத்மா சொன்னபடி நான் மருந்தை 21 தினங்கள் சாப்பிட்டேன். என்னால் தினம் 4 சேர்பால் ஜீரணிக்க முடிந்தது என்கண்கள் பிரகாசம் பெற்றன. முகத்திற்கு அலாதி ஜோஸ் ஏற்பட்டது தேகத்தில் புதிய பலமும் தேக திடமும் உண்டாயிற்று ஊருக்குத் திரும்பியதும் இதை நான் அநேகருக்குக் கொடுத்துப் பரீக்ஷித்ததில் வலிமையின்மையைக் குணமாக்குவதில் இது ஓர் நிகரற்ற டானிக் என்பது ருஜுவாயிற்று.

பொதுமக்களின் நன்மைக்காக இதை நான் விளம்பரம் செய்கிறேன் தேகதிடம் இழந்து ஆயிரக் கணக்கில் செலவழித்தும் குணம் பெருதவர்கள் இதை உபயோகித்தால் உடனே குணம் பெறுவது திண்ணம். இதன் விலையோ மிகவும் குறைவு அயல் நாடுகளிலிருந்து வரும் ஆர்டர்களுடன் முன் பணம் அனுப்ப வேண்டும்.

இளமை யளிக்கும மாத்திரைகள் 21 தினங்களுக்கு	ரூ. 5-0-0
மேலே பூசுவதற்குத் தைலம்	ரூ. 5-8-0

இதில் ஹானி பயக்கத்தக்க சரக்குகளின் சேர்க்கை கிடையாது. கிழவர்கள் யுவர்கள் யாவருக்கும் ஏற்றது சொந்தலாபத்திற்கு விளம்பரம் செய்யவில்லை. மனித சமூகத்தின் நன்மைக்கே விளம்பரம் செய்யப்படுகின்றது. வெளி நாட்டு ஆர்டர்களுடன் முன் பணம் தேவை

குணத்திற்கு உத்தரவாதம் இந்த மருந்தினால் உங்களுக்கு குணமேற்படாவிட்டால் மருந்தின் கிரயத்தை நான் வாபஸ் செய்கிறேன் ஆயிரக் கணக்கான டாக்டர்கள் இதை சிபார்சு செய்கிறார்கள் எந்தக் காலத்திலும் உபயோகிக்கலாம்.

முக்கிய அறிவிப்பு: நரம்புத்தளர்ச்சி வலிமையின்மை இவைகளால் வருந்துபவர்களுக்கு மட்டும்தான் இம்மருந்து. மேக வியாதிகளினால் ஏற்படும் பலஹீனத்திற்கு அற்புதமான நிவாரணி மேலும் இது நல்ல ரத்த விருத்தியளிக்கிறது

ஆங்கிலத்தில் எழுதவும்: **THE MANAGER.**

Dar-Ul-Shafa - Golian (Regd)

Batala, East Punjab.

மானேஜர்: தார்-உல்-ஷபா கோலியான் (ரிஜிஸ்டர்டு)

படாலா, கிழக்கு பஞ்சாப்.

மதராஸ் பெங்களூர் ஸ்டாகிஸ்டுகள்:—(1) மெஸர்ஸ் ராகவன் & கோ., ஸ்ரீ நரஸிம்ம ராஜா ரோட், பெங்களூர் ஸிடி. (2) மெஸர்ஸ் ஆல்பட் & கோ., 182, மவுண்ட்ரோட், மதராஸ். (3) மெஸர்ஸ் வாஸன் டிரக் ஸ்டோர்ஸ், ஹைக்கோர்ட்டுக்கு எதிரில் மதராஸ். (4) மெஸர்ஸ் மில்டன் & மில்லர், 157, பிராட்வே, மதராஸ்.



(பான்ஸ கோல்டு.)

பெண்களுக்கு சந்தோஷத்தை அளிக்கும் இந்த நகைகளைப் பிரதிதினமும் உபயோகித்தாலும் நிறம் மாருது. பார்ப்பவர்கள் அசல் தங்கஆபரணங்கள் என்றே எண்ணுவார்கள். கியாரண்டி உள்ளவை. 4 ஆபரணங்கள் உள்ள வெல்வெட் பெட்டியுடன் போட்டியின் பயனுக ரூ. 5-12-0க்கு அனுப்பப்படும். நகைகளின் விபரம்:- (1) நெக்லஸ் செயின் (2) இரு ஜதை வளையல் (3) லோலக் ஒரு ஜதை (4) ரேடியோ கட்டிங் மோதிரம் ஒன்று. (பேபி செயின் ஒன்று இனும்.)

அமேஜான் டிரேடிங் கம்பெனி,
1/6 சாம்பய்யர் தெரு.
சௌகார்பேட்டை, மதராஸ்.



தந்தி விலாசம்: "சுகந்தம்."

சுக வாழ்விற்கு சுகந்தம் நிறைந்த
"3001" ஜவ்வாது பத்திகள்
இன்பம் தரும் இனிய மணம் நிறைந்த
"301" ஜவ்வாது பத்திகள்
நறுமணத்திற்கு நற்கியாதி வாய்ந்த
"31" ஜவ்வாது பத்திகள்
ஆரோக்கிய வாழ்விற்கு
"ஆசாத்" பாக்கட் பத்திகள் &
"ஆசாத் ரிங்க்" குழாய்பத்திகள்

S. V. முருகேசன் & பிரதர்ஸ்,
நெ. 39, லெக்ஷிமிபுரம், 6-வது தெரு, மதுரை.
பிராஞ்சு:— நெ. 147, பழைய கஸ்ஸாய் ரோடு, பெங்களூர் சிடி.
டிபாசிட் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை.

குகன் சோப்புகள்
சுதேசி தயாரிப்பு சலவைக்கு மிகவும் சிறந்தது.



குகன் இண்டஸ்ட்ரீஸ்... திருப்பூர். S.I.

ஸ்ரீ சாயிநாதய நம:

அனுபவத்துடனும், ஆராய்ச்சியுடனும் பலன்கள் சொல்லப்படும்.

ஒரு வருஷ பலன்	ரூ. 5.
விவரமான ஒரு கேள்விக்கு பலன் எழுத	„ 1.
விவாக பொருத்தம்பார்க்க	„ 3.
ஆயுள் பலன் எழுத	ரூ. 100.

THE SOUTH INDIAN ASTROLOGICAL BUREAU,
229, Walltax Road, Madras 3.



குலதனம்

போலக் கேசதனமும், சில குடும்பங்களில் பரம்பரையாக வருவதுண்டு. கேசதனம் படைத்தவர், அது நஷ்டமாகாமல் கேசவர்த்தினியைக்கொண்டு காப்பாற்றுங்கள். படைக்காதவர் கேசவர்த்தினியைக் கொண்டு அதை அடையுங்கள். சிறுவயது முதல் கேசவர்த்தினி ஒன்றையே உபயோகித்து வருவதால், இளநரை வழுக்கைகளைத் தடுத்துக் கேச ஆரோக்கியத்தையும் கேச சம்பத்தையும் தவறுமல் பெறுங்கள்.

மெலிந்து இளைத்த சிறுவனும் தேகப்பயிற்சி ஆகாரங்களால் பருத்து அழகிய சதைக்கட்டைப் பெறுவது போல, அற்ப கூந்தல் படைத்தவரும் கேசவர்த்தினியைக்கொண்டு அபரிமிதமான கூந்தலைப் பெறலாம்.

குழந்தையின் கூந்தலைக் கேசவர்த்தினி கொண்டே விருத்தி செய்யுங்கள்.

கேசவர்த்தினி

கூந்தலைக் காப்பது; விருத்தி செய்வது; அழகுபடுத்துவது வி'லை அண 14. தபால் செலவு தனி.
எல்லா கடைகளிலும் கிடைக்கும்.
தயாரிப்பவர்:
தென் இந்திய ரஸாயன சாலை,
"ஆச்ரமம்", க்ராஸ்கட் ரோட்,
பவர் ஹவுஸிற்கு அடுத்தது
கோயமுத்தூர்.

ஆனந்த குஸுமாகர லேகியம்

துர்ப்பழக்கத்தால் சரீரம் மெலிந்து அங்கங்கள் உலர்ந்து, கைகால்கள் அயர்ந்து கண் பார்வை குன்றி கஷ்டப்படும் அன்பர்களே!

இந்த லேகியத்தை முறையே ஒரு மண்டலம் சாப்பிட்டு வருவீர்களாயின் மூத்திர சம்பந்தமான சகல வியாதிகளும் நீரில் சர்க்கரை இருத்தல் உஷ்ண சம்பந்தமான சகல வியாதிகளும், நரம்புத்தளர்ச்சி, பசியில்லாதிருத்தல், மலச்சிக்கல், ஞாபககுறைவு, பித்தம், காசம், க்ஷயம் போன்ற எல்லா வியாதிகளையும் கண்டித்து சரீர புஷ்டியும் உற்சாகமும் தரக்கூடிய சிறந்த ஒளஷதம். பெண்களும் அருந்தக் கூடியது. பத்தியமில்லை. 20 நாட்கள் உபயோகிக்கும் டின் விலை ரூ. 2—8—0

வி. பி. பார்சலில் தேவையுள்ளோர் தபால் சிலவு அணு 14 முன் பணம் அனுப்பி பெற்றுக்கொள்ளலாம். விபரமான காட்லாக் இனும்.

மலையாள மெடிகல் ஹால்

H. O. TRIVANDRUM

189 வக்கீல் புதுதெரு- P. B. No 27, மதுரை.

கிளை ஸ்தாபனங்கள்:— 207 நாகேஸ்வரர் வடக்கு வீதி, கும்பகோணம் 20 கோவிந்தப்பநாயக்கன் தெரு, சென்னை. G. T. 58 E தர்மராஜா கோவில் தெரு, பெங்களூர் 179 SEA ST., COLOMBO.

ஸ்தாபிதம் 1924.

பிரபல ஜோதிஷர்



மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ. 5. ஷை பலனை வாரா வாரம் விவரமாக எழுத ரூ. 10. ஆருடம் 3 கேள்விகளுக்கு ரூ. 2. மேல் கேள்வி 1-க்கு அணு 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. ஜ்யோதிஷ ஞான போதினி. ஜாதக யோகங்கள் என்னும் புத்தகம் விலை ரூ. 2—8—0. வி. பி. சார்ஜ் பிரத்யேகம்.

பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்,
"தபோநிதி" தியாகராயநகர், மதராஸ் 17.



கலியாண வெகுமதிகளுக்கு
பல ஊர்
பட்டு & நூல்
ஜவுளி ரகங்கள் சாசமாய்
கிடைக்கும் இடம்

ராம விலாஸ்

S.N.ராமஸ்வாமி செட்டி & பிரதர்ஸ், கடை வீதி, சேலம்.

விநோத கதா மஞ்சரி

விலை ரூ. 1—0—0
(தபால் செலவுபிரத்யேகம்)

சுதேசமித்திரன் புத்தகசாலை, சென்னை.

கோல்டன் தங்க ஆபரணங்கள்

4 ஆபரணங்கள் பெட்டியுடன்
விலை ரூ. 5—8—0.
தபாற்செலவு அணு 12.



இந்தப்படத்தில காட்டிய நகைகள் யாவும் பெண்களுக்குச் சந்தோஷத்தை தரக் கூடியவை. பார்ப்பவர்கள் அசல் தங்க ஆபரணங்கள் என்றே எண்ணுவார்கள்.

நகைகளின் விவரம்:—1 ஜதை சினிமா ஸ்டார் என்னும் புதுமாதிரி லோலக், 1 ஜதை டைமண்ட் கட் வளையல், 1 புது மாதிரி லேடி நெக்லேஸ், 1 பிரபாத் கட் மோதிரம் இவை யாவும் கண்ணைக்கவரும். சீக்கிரம் முந்துங்கள்.

தி போட்டோ ஏஜன்ஸி, (S)
18, பீட், ஜி. டி., மதராஸ்.

தேவை

★

மந்திரி குமாரி என்ற படத்தில் நடிக்க அழகும், வசீகரமும் வாய்ந்த நடிக, நடிகையர் தேவை. முன் அனுபவம் இருப்பின் நலம். இல்லாவிடினும், செலக்ஷனில் எடுத்துக்கொள்ளப்படும். போட்டோ, போஸ்டு ரிப்ளேயுடன் விண்ணப்பித்துக் கொள்ளவும்.

மானேஜர்,
பராசக்தி பிலிம்ஸ்,
கண்டமனூர் P. O.
மதுரை Dt.

ஜாதகம் ! ஆருடம் !!

இன்றே எழுதுங்கள். பிறந்த தேதி, நேரம் அல்லது ஜாதக நகல் தேவை. ஜாதகம் இல்லாதவர் கடிதம் எழுதும் நேரம் குறிக்கவும்.

கட்டண விவரம்:- 1 முதல் 3 உமது எதிர்கால கேள்விகட்கு ரூ. 2. 3-க்கு மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஒரு வருட பலன் 8 பிரிவுகளில் எழுத ரூ. 5. ஆயுள் பூராவுக்கும் பலன் சுருக்கமாக எழுத ரூ. 35.

குறிப்பு:—வெளிநாட்டுக்கு இரட்டிப்புக் கட்டணம்.

Lt. Col. M. N. C. ஸர்ஜன் ஜெனரல் மதராஸ் கூறுவதைக் கவனியுங்கள்:-தாங்கள் அனுப்பிய ஜாதக பலன் வியக்கத்தக்கது. எனக்குத்திடீரென்று ரூ. 35,000 கிடைக்கும் என்று தாங்கள் கூறியபடியே எதிர்பாராமல் எனக்கு ரூ. 35,000 கிடைத்தது.

மானேஜர், வீனஸ் அஸ்டிரோலாஜிகல் ப்யூரோ,
தெப்பக்குளம் P. O. (தென் இந்தியா)

"பீம-வீர்" பூர்வகால ஆயுர்வேத முறைப்படி மூலிகை சத்துக்களாலும், பஸ்பங்களாலும் தயாரிக்கப்பட்டது. ரத்தத்தை சுத்திசெய்து, சாஸ்வதமான யௌவனத்தையும், ஞாபக சக்தியையும் உண்டாக்கி, தேக புஷ்டியையும், வலுவையுங் கொடுப்பதில் நிகரற்ற அவுஷதம்.

40–நாள் மருந்து ரூ. 3-12-0.

பாக்கிங்கு, தபால்சார்ஜ் கிடையாது

ஜமதக்னி ஔஷதாலயா,
26, வடக்குமாடவீதி, மயிலாப்பூர், சென்னை

45-வருஷமாக புகழும் நற்சாட்சிகளும் பெற்றுவரும் மருந்துகள்

தங்க பஸ்பம்

ஒரே வேளையில் உங்களை பிரமிக்கச் செய்யும். இது ஒரு வரப்பிரசாதமான மருந்து. தேகபலமும் வாழ்வில் சந்துஷ்டியும் அளித்து, ஊக்கத்தையும் உற்சாகத்தையும் தந்து, நரம்புகளை வலுவாக்கி, வயோதிகனும் வாலிபனுடைய வலிமை பெற செய்கிறது. அனுபானம் பெரிய காமகேசரி லேகியத்துடன்

50 வேளை ரூ. 25.

வைத்தியபதி ***R. M.*** *நாராயணசாமி பிள்ளை,*

தன்வந்திரி வைத்தியசாலை, பழனி (S. I.)

வாரியர்

பிருங்காமலகாதி

தைலம்

குளிர்ச்சிமிக்க ஸ்நான தைலம். கறுப்பான காந்தி மிக்க கூந்தல் தாராளமாக வளரச் செய்யும். அரிப்பு, பொடுகு, தலைவலி, அதி உஷ்ணம், நித்திரையின்மை, கண் எரிச்சல், அதிகப்படிப்பினாலோ வேலையினாலோ ஏற்படும் மந்தம், ஞாபக மறதி, மூளைக்கொதிப்பு முதலியவைகளில் மிகவும் உபயோகமானது.

16 அவுன்ஸ் புட்டி ரூ. 4.

(பாக்கிங், தபால் செலவு வேறு.)

ஆர்ய வைத்தியர்

கே. எஸ். வாரியரின்

அஷ்டாங்க
ஆயுர்வேதசாலா

தெப்பக்குளம், திருச்சி.

(ஸ்தாபிதம்: 1936.)

அழகிய பித்தளை, தாமிர, வெண்கல பாத்திரங்களுக்கு கோவையில் சிறந்த இடம்.

பள்ளிக்கூட ஹாஸ்டல்கள், காண்டீன்கள் இன்னும் சர்க்கார் இதர ஸ்தாபனங்களுக்கும் சப்ளை செய்பவர்கள்

K. இராமச்சந்திரன்,

பாத்திர வியாபாரம்,

பெரிய கடை வீதி, கோயமுத்தூர்.

வாழிய செந்தமிழ்! சுதேசமித்திரன் வாழ்க நற்றமிழர்!
வாரப்பதிப்பு

Vol. XIX | ஸர்வதாரி௵ ஆனிமீ 28௳ ★ 1948-௵ ஜூலைமீ 11௳ No 21

காஷ்மீரக் கமிஷன் வேலை

காஷ்மீரம்பற்றிய ஐ. நா. கமிஷனின் கோஷ்டியார் டில்லிக்கு வந்துவிட்டார்கள். அவர்களைத் தொடர்ந்து அந்தக் கமிஷனும் வந்து சேருகிறது. ஆனால் அதன் அலுவல் திட்டமென்ன? குறிப்பாக அது இந்திய சர்க்காருடன் கலந்து பேசவிருக்கும் விஷயங்கள் யாவை? இவற்றைத் தெரிவிக்கும்படி இந்திய சர்க்கார் ஏற்கெனவே அக்கமிஷனைக் கோரியிருந்தார்கள். ஆனால் கமிஷனின் தலைவர் ஒன்றன்பின்னொன்றாக இதுவரை பல தந்திகள் அனுப்பியிருக்கிறாராயினும் ஒன்றிலாவது கோரிய தகவலில்லை. ஆனால் இக்கமிஷனின் அமைப்பையும் இது உருவான வரலாற்றையும் அறிந்தவர்கள் இதைக் கண்டு விசேஷ ஆச்சரியமடைவதற்கில்லை.

இந்தக் கமிஷனை சிருஷ்டித்த பந்தோபஸ்து சபையில் ஆதிக்கமுள்ள கூட்டத்துக்கு இப்பிரச்னையில் நியாயா நியாயத்தைப்பற்றிக் கவலையில்லை. தனது சுயநலத்தை முன்னிட்டு இதில் பாகிஸ்தானின் அக்கிரமத்தை ஆதரிப்பதையே அது தனது தொழிலாகக் கொண்டு வந்திருக்கிறது. பிறர் சொத்தைக் கள்ளத்தனமாகக் கவரவந்த கொள்ளையரிடம் நேரிடையாகவே அதைக் கொடுத்துவிட வழிசெய்யவேண்டுமென்பதுதான் அச்சபையில் இறுதியாக நிறைவேறிய தீர்மானத்தின் சாரம்! இந்த நியாயமற்ற தீர்ப்புக்குத் தாங்கள் ஒருபோதும் உடம்பட முடியாதென்று ஏற்கெனவே இந்திய சர்க்கார் தெளிவாக உணர்த்திவிட்டனர். காஷ்மீர் மக்கள் விஷயத்தில் இந்திய சர்க்காருக்குள்ள பொறுப்பு திட்டமானது. அதை நிறைவேற்றி வைப்பதற்கு இடையூறாக இருக்கக்கூடிய எந்த ஏற்பாட்டையும் தாங்கள் ஏற்கமுடியாதென்று இந்திய சர்க்காரின் பிரதிநிதிகள் பந்தோபஸ்துசபையில் தெளிவாக்கியிருக்கின்றனர். எப்படியும் காஷ்மீரத்தின் எதிர்காலத்தை அங்குள்ள மக்கள் தங்கள் இஷ்டம்போல் தாராளமாக முடிவுசெய்துகொள்ள விடவேண்டுமென்பதே இந்திய சர்க்கார் கருத்து. இதில் மட்டுமல்ல; தகராறுக்குள்ளான எந்த சமஸ்தானத்தின் விஷயத்திலும் அவர்கள் ஒரேமாதிரியாக வற்புறுத்தி வரும் கொள்கை இதுதான்.

காஷ்மீரப்பிரச்னையில் பாதுகாப்புசபையும் இக்கொள்கையை ஒப்புக்கொண்டதாயினும் இதை அடியோடு பாழாக்கும் முறையிலேயே அதன் இறுதியான தீர்மானம் அமைந்திருக்கிறது. உண்மையில் அதிலுள்ள அருவருக்கத்தக்க பகுதிகள் பல. இத்தீர்மானத்தை அடியோடு நிராகரித்துவிட்டு இந்தக் கமிஷனை தங்கள் நாட்டுக்குள்ளேயே அனுமதிக்கப்போவதில்லை என்று இந்திய சர்க்கார் அறிவித்திருந்தாலும், அதற்காக நேர்மையுள்ள யாரும் அவர்களைக் குறைகூற முடியாது. எனினும் இந்திய சர்க்கார் தாங்கள் ஏற்கெனவே வெளியிட்ட கருத்துக்குப் பாதகமற்ற முறையில், கூடியவரை ஐ. நா. கமிஷனுடன் ஒத்துழைக்கத் தயார் என்று கூறியிருப்பதானது அவர்களது அபாரமான பெருந்தன்மையை, சாதாரணமாக மற்ற தேசங்களிடை காணமுடியாத மிக உன்னதமான ஒரு மனோபாவத்தைக் காட்டுவதாகும்.

ஆனால் ஒன்றுமட்டும் மிகத் தெளிவான விஷயம். காஷ்மீரத்தின் இணைப்பைப்பற்றி அங்குள்ள மக்களிடையே வாக்குக் கணக்கு எடுக்குமுன், அங்கு சண்டை அடியோடு நின்று அமைதி நிலவுவது அத்தியாவசியம். அதாவது வாக்குக் கணக்கு எடுப்பதற்கான வழிவகைகளைப்பற்றி ஐ. நா. கமிஷன் இந்திய சர்க்காருடன் பேசப் புகுமுன் அது காஷ்மீரில் போரை நிறுத்தத் தக்க நடவடிக்கை

—அடுத்த பக்கம்



அமெரிக்க ஜனாதிபதி ஸ்தானத்துக்கு குடியரசு அபேட்சகராக நியமனம் செய்யப்பட்ட தாமஸ் டூவேயும் அவரது மனைவியும் ஜனங்கள் பாராட்டுதலை வணக்கம்செய்து ஏற்றுக்கொண்டபோது எடுத்த படம்.

எடுத்துக்கொண்டாகவேண்டும். அங்கு அக்கிரமமாகப் புகுந்த பாகிஸ்தானியரும், அவர்களது கையாட்களும் வாபஸாகிவிட்டால், அடுத்த நிமிஷமே அங்கு அமைதி ஏற்பட்டுவிடும்.

காஷ்மீரத்தின் மீது மலைஜாதியைச் சேர்ந்த கொள்ளை, கொலை வெறியர்களை ஏவிவிட்டது பாகிஸ்தான் அதிகாரிகள்தான். இந்த வெறியர்களுக்குப் பாகிஸ்தான் உதவாமலிருந்திருக்குமாயின், அவர்கள் முன்பே சிதறடிக்கப்பட்டிருப்பார்கள். ஆனால் பாகிஸ்தான் அவர்களுக்குப் பூர்ணமாக உதவியும் அதனால் சிறிதும் பயன்படாத ஒரு நிலைமை ஏற்பட்டுவிட்டது. இதைக் கண்டு சென்ற சிறிது காலமாக பாகிஸ்தான் படைகளே நேரடியாக காஷ்மீரத்துக்குள் புகுந்து போராடி வருகின்றன. ஆனால் இவைகளும் இப்போது காஷ்மீர்-இந்திய சர்க்கார் துருப்புகளின் முன்னேற்ற வேகத்தைத்தடுக்க முடியவில்லை. ஐ.நா.கமிஷன் அங்கு செல்லும்போது, காஷ்மீரில் கொள்ளையரும்,பாகிஸ்தான் படைகளுஞ்சேர்ந்து ஆக்கிரமித்துக்கொண்டுள்ள பகுதி சிறிதாவது பாக்கியிருக்குமா என்பது தெரியவேண்டும்.

ஆனால் இக் கமிஷன் காஷ்மீருக்குள் பிரவேசித்ததும் ஒன்றுமட்டும் அதன் கண்களில் விசேஷமாக உறுத்துவது நிச்சயம். அதாவது ஷேக் அப்துல்லா சர்க்காருக்கு அங்குள்ள மக்கள் அளித்துவரும் மகத்தான ஆதரவு இந்த சர்க்காரைக் கவிழ்க்கத்தான். பாகிஸ்தானியர் வேலை செய்கின்றனர் என்ற ஒரு உண்மையே நியாயம்எந்தத்தரப்பில்இருக்கிறதென்பதை யோக்கிய சித்தமுள்ளவர்களுக்கு வெட்ட வெளிச்சமாக்குவதாகும். ஆனால் காஷ்மீர் பிரச்னைபற்றி பந்தோபஸ்து சபையில் விவாதம் நடக்கையில் ஷேக் அப்துல்லா சர்க்கார் அடியோடு அலட்சியம் செய்யப்பட்டுவிட்டது அனைவருக்கும் தெரியும். இது இந்தியாவையும், பாகிஸ்தானையும் பொறுத்த ஒரு ப்ரச்னையாகவே அச்சபை மதித்த அவகேடு ஏற்கெனவே தெளிவான விஷயம். உண்மையில் மேற்குறித்த இருதரப்புகளையும் விட, ஸ்தல மக்களின் பேராதரவைப்பெற்ற அப்துல்லா சர்க்காரே இதில் நேரடியாக சம்பந்தப்பட்டவர்கள்; அவர்களுடைய கருத்துக்கு எதிராக யாரும் ஒன்றும் செய்வதற்கில்லை என்ற உண்மையை இப்போது இக் கமிஷனும், இதன் மூலம் பாதுகாப்பு சபையும் உணர்வது திண்ணம்.





சென்ற மாதம் 30-ந்தேதியன்று நாகுடி நரசிங்க காவேரி கால்வாயை சென்னை சர்க்கார் மராமத்து மந்திரி ஸ்ரீ பக்தவத்சலம் திறந்துவிட்ட போது எடுத்த படம்.

(கீழ்)

புதுக்கோட்டையில் குடி அசுரன் இம்மாதம் 1-ந்தேதி குழிதோண்டிப் புதைக்கப்பட்டன. ஸ்ரீபக்தவத்சலம் அங்கு மதுவிலக்குத் திட்டத்தை ஆரம்பித்துவைத்தார். படத்தில் காண்பதுபோன்ற 'கள்ளாசுரன்' கொடும்பாவி, பெருந்திரளானமக்கள் முன்பாக கொளுத்தப்பட்டது.



ஆப்த நண்பர்கள்!

—ஸ்வாமிநாதன்—

ஆப்த நண்பர்கள் என்றால் ஆபத்து நண்பர்கள் என்று அர்த்தம் சொல்லலாம்! அதாவது ஆபத்துக் காலங்களில் ஆத்மார்த்தமாக உதவி உபகாரம் செய்யும் ஆபத்பாந்தவர்களைத்தான் அந்த அர்த்தம் குறிப்பிடுகிறது. ஆனால் என்னுடைய ஆப்தநண்பர்களோ, நான் சுகமாக இருந்தாலும் என்னிடம் ஏதாவது ஆபத்தைக் கொண்டுவந்து விடுவார்கள், அல்லது என்னை இழுத்துக் கொண்டுபோய் ஆபத்தில் மாட்டி விடுவார்கள். நான் சிக்கா விட்டால் என்னுடைய பர்சிலிருக்கும் துட்டிலிருந்து பக்கத்து வீட்டுக்காரரிடமிருந்து இரவல் வாங்கிய பத்திரிகை வரை, ஏதாவதொன்றை தங்கள் சூழ்ச்சியில் சிக்க வைப்பார்கள். ஆகவே என்னுடைய நண்பர்கள் எல்லோரும் நிஜமாகவே ஆபத்து நண்பர்கள் தான். ஆபத்திலிருந்து கைதூக்கிக் காப்பாற்றுவதற்குப் பதிலாக அதில் கழுத்தளவுவரை அமுக்கும் நண்பர்கள்! ஹரிஹரனுக்கு நான் வாங்கும், பத்திரிகை, சஞ்சிகை, புஸ்தகம் இவைகள் மீது கண். நாராயணனுக்கு என் நடவடிக்கைகள், பொழுது போக்கு, முதலியவற்றின் மீது குறி. சீமாச்சுக்கு என்னுடைய பர்ஸின் மீது நாட்டம். கணேசனுக்கு என்னுடைய சைக்கிள் மீது அபிமானம். பெரிய அரசியல் தலைவர்கள், கவர்னர்கள், பிரதமர்கள் முதலியோரின் வருகை, புறப்பாடு, தூக்கம், விழிப்பு, எல்லாம் எப்படி பத்திரிகைகளில் அடிபடுமோ அதே மாதிரி என்னுடைய அலுவல்கள் என் நண்பர் குழாமில் பிரமாதமாக அடிபடும்!

“சார் வந்து விட்டார்! அவர் கையிலே இருப்பது ‘துரியோதனன்’ வருஷ மலரேதான்! அதைப் படித்து முடித்தால்தான் எனக்குச் சாப்பாடு வேண்டியிருக்கும்” என்று சொல்லிக்கொண்டே என் வீட்டிற்குள் நுழைவான் ஹரிஹரன். அப்போதுதான் ஒரு நிமிஷத்திற்குமுன், நான் வீட்டிற்குள் வந்து செருப்பைக் கழற்றிவிட்டு நாற்காலியில் உட்கார்ந்திருப்பேன். ஹரிஹரனைப் பின் தொடர்ந்தவாறே திரிலோக சஞ்சாரியான நாரதரின் மறு உருவான நாராயணன் வந்து சேருவான். அப்படி வரும்போதே ஐந்து கட்டை சுருதியில் “டேய் ஹரி! அவரைத் தொந்திரவு பண்ணாதேடா! ஆனந்தபவானில் இப்போதுதான் புருட்சாலடிலிருந்து புடலங்காய் பஜ்ஜிவரை ஒரு இழுப்பு இழுத்துவிட்டு வந்திருக்கார். கொஞ்சம் சிரமபரிகாரம் பண்ணிக்கொள்ளட்டும்” என்பான் எகத்தாளமாக. அவன் பேச்சில் ஒவ்வொரு வார்த்தையும் ஸ்பஷ்டமாக சமையலறையிலிருக்கும் என் சகதர்மிணியின் காதில் நன்றாய் விழும். இவர்களெல்லாம் போனபிறகு அவள் ஒரு பெரிய மகாயுத்தத்திற்கு அடிகோலுவாள். ஏனென்றால் குடும்ப பட்ஜெட்டைச் சமாளிப்பதற்காக நான், வீட்டில் டிபன் சாப்பிட்ட நாட்களில் ஹோட்டலுக்குப் போவதில்லை என்ற நிபந்தனைக்கு ஒப்புக்கொண்டிருந்தேன். நாராயணனுக்கு இந்த நிபந்தனைகளெல்லாம் தெரியும். அப்படியிருந்தும் அசடு மாதிரி உளறி ஓர் குடும்பப்போருக்கு அஸ்திவாரக்கல் நாட்டுவான். அமெரிக்க ஜனாதிபதியின் பேச்சிலிருந்து அடுத்த உலக யுத்தம் வருமா, வராதா என்று சொல்லி விடமுடியாது. ஆனால் நாராயணனின் பேச்சிலிருந்து எங்கள் வீட்டில் அடுத்த மகாயுத்தம் நிச்சயமாய் வரும் என்று சொல்லலாம்! நான் நிபந்தனையை மீறியதற்காக அவளும் ‘இந்த மாதம் ஜம்பர்கள் கேட்கவில்லை’ என்ற நிபந்தனையை மீறுவாள். கடைசியில் ‘கொழுக்கட்டை தின்ற பிள்ளையாருக்கு குருணி...... தட்சிணை’ என்பதுபோல், நான் டிபன் சாப்பிட்ட செலவிற்கு சிகரம் வைத்தாற்போல் நாலு ஜம்பர் வாங்கித்தர வேண்டி நேரிடும்.

“டேய்! நாராயணா! மெதுவாய் பேசடா!” என்பேன் கீழ்ஸ்தாயியில். உடனே அசரீரி கேட்பது போல் சமையலறையிலிருந்து “காதிலே எல்லாம் விழுந்தது” என்று நூறு டிகிரி செண்டிகிரேட் உஷ்ணத்தில் வார்த்தைகள் வெளிவரும். நாராயணனை மனதார சபிப்பேன். முட்டாள்! அவன் கட்டை பிரம்மச்சாரி! என் நிலைமை அவனுக்குஎப்படித் தெரியும்?

இந்த சமயத்தில் சீமாச்சு வருவான். “அண்ணா! ரேஷன் அரிசி வாங்க இரண்டு ரூபாய் வேண்டுமென்று கெஞ்சினேனே! அதற்கு ரூபாய் கொடுக்க மனமில்லாமல் இப்போது நாலு ரூபாய்க்கு ‘துரியோதனனை’ வாங்கி தூக்கிக் கொண்டு வந்திருக்கிறீர்களே” என்று வழக்கமான பஞ்சப் பாட்டைப்பாட ஆரம்பிப்பான். ‘சீமா! உனக்குச் சாப்பாட்டில் எவ்வளவு பிரியமோ அவ்வளவு பிரியம் எனக்குப்பத்திரிகை மேல். இந்தா! பத்திரிகையைப்பார்த்

துக் கரிக்காதே! அப்புறம் 'துரியோதனனை' கடத்திச் செல்ல எந்த பீமனாவது வரப்போகிறான்? இந்தா இரண்டு ரூபாய், எடுத்துக்கொண்டு போ!" என்று ரூபாயை அவன் கையிலே கொடுப்பேன். இந்த ரகளையில் கணேசன் தலைபோகும் அவசரத்தில் வருவான். "டென் மினிட்ஸ்! கொஞ்சம் சைக்கிள் கொடுங்கோ. டாக்டரை அழைத்துக்கொண்டு வரவேண்டும்" என்பான். அவன் வார்த்தைகளின் வேகத்தைப் பார்த்தால் யாரோ உயிருக்கு மன்றாடிக்கொண்டிருப்பது போலவும், டாக்டர் வருகைக்காக அந்த உயிர் காத்துக்கொண்டிருப்பது போலவும் தோன்றும். நம்மால் அந்த உயிருக்கு இடைஞ்சல் வேண்டாமென்ற நோக்கத்துடன் அவனுக்கு சைக்கிளை எடுத்துப் போகும்படி சைகை செய்வேன். சைக்கிளைத் தூக்கிக்கொண்டு அவன் சிட்டாய் பறந்துவிடுவான்.

"டேய் சீமா! நீ கணேசன் வீட்டிற்குப் பக்கத்திலிருப்பவனாயிற்றே! ஏதாவது டேன்ஜர் கேஸா?" என்று கேட்பேன். சீமாச்சு சாவகாசமாக பொடியை இழுத்துக்கொண்டு 'கணேசன் அப்பா, சீட்டுக் கச்சேரிக்கு ஒரு கை குறைவாயிருக்கிறதென்று அடுத்த தெரு டாக்டர் மாமாவை அழைத்துக்கொண்டு வரச்சொன்னார். வேறு ஒன்றுமில்லை. நானும் இப்போது அங்கேதான் போகிறேன். அங்கே ஆட்டம் ஆரம்பமானால், பெரிய அசம்பிளி படும் பாடுதான் படும்!' என்று சொல்லிக்கொண்டே சீமா கிளம்புவான். என்னை ஏமாற்றிய கணேசனை வைதுகொண்டே சட்டையை கழற்றும் போது ஹரிஹரன் பூனை போல் 'துரியோதனனை' கிளப்பிக்கொண்டு போய் விடுவான்.

ஆகக்கூடி ரூபாய் சைக்கிள், புஸ்தகம் மூன்றும் வெளியே போய்விட்டன. அவைகளுடன்கூடவே, அசட்டுச் சிரிப்புச் சிரித்துக்கொண்டு நாராயணனும் நகருவான். அந்த சகுனிதான் பெரிய மகாபாரதப் போருக்கு ஏற்பாடு பண்ணிவிட்டான! அவன் தலை மறைந்தவுடன் காட்சிதிடீரென்று மாறும். என்சகதர்மிணியிடம் நான்'எக்ஸ்பிளனேஷன்' கொடுத்து, இன்று ஹோட்டலுக்குப் போனதிற்காக அவள் சலுகைகளுக்கு சம்மதித்து சமாதான உடன்படிக்கையில் கையெழுத்துப் போடுவதற்குள், புஸ்தகம், ரூபாய், சைக்கிள் நாராயணன் முதலியவற்றுடன் என் பிராணனும்போய்விடும். உடனே என்னை ஒருவரும், 'ஹென்பெக்டு' என்றோ 'மனைவி கைபொம்மை' என்றோ எண்ணிவிடக்கூடாது. நான் அவளுக்குச் சம உரிமை கொடுத்துவிட்டேன். அவள் ஒரு டொமினியன். நான் ஒரு டொமினியன்! இரு டொமினியன்களுக்குமிடையே எவ்வளவோ உடன்படிக்கைகளும், கட்டுப்பாடுகளும் உண்டு. ஏதாவது கட்டுப்பாடுகள் மீறப்பட்டால் நாங்களே அதை சமரசமாகத் தீர்த்துக் கொள்வோம். பந்தோபஸ்துக் கவுன்சிலில் புகார் செய்துகொள்வதில்லை!

சாவகாசமாக யோசித்தால் என் நண்பர்கள்மீது ஆத்திரம் ஆத்திரமாக வரும். எல்லோரும் தீவட்டி தடியன்கள்மாதிரி என் கழுத்தை அறுக்கிறார்கள்! எல்லோர் சினேகத்திற்கும் நிர்தாட்சண்யமாய் முற்றுப்புள்ளிவைக்க வேண்டும் என்று நினைத்துக் கொள்வேன். ஆனாலும் அவர்கள் இல்லாமல் எனக்குப் பொழுது போகாது. ஒரு நாள், இரண்டு நாள் அவர்கள் வரும்போது நான் மாடியில் இருந்துகொண்டு நான் இல்லையென்று தெரிவிக்கும்படி செய்து அவர்களை அனுப்பிவிடுவேன். அந்த நாட்களெல்லாம் ஏதோ 'சப்' என்று கழியுமே தவிர, அவர்களுடன் செலவழிக்கும் நாட்களைப்போல் அவ்வளவு குஷியாக இருக்காது. அவர்கள் தொல்லை எல்லாம் வேண்டித்தானிருந்தது. இன்பத்தொல்லைகளாகவே தோன்றின.

ஒரு நாள் மாலை நான் வெளியே கிளம்பிக்கொண்டிருந்தபோது என் மனைவி முழ நீளக்காகிதத்தில், தனக்கு வேண்டிய டாய்லட் சாமான் ஜாபிதாவை எழுதி, அவைகள் எல்லாம் அன்றைக்கே வாங்கியாகவேண்டும் என்ற கண்டிஷனுடன் நீட்டினாள். மாதக் கடைசியாதலால் அவள் லிஸ்டில் கண்ட சாமான்களுக்கான பணம் என் கையில் இல்லை. இருந்தாலும், முகத்திலடித்தாற்போல் இப்போது முடியாது என்று சொல்வதைவிட வேறு காரணம் சொல்லி வாங்காமல்திரும்பலாம் என்ற நினைப்புடன் அந்த லிஸ்டை வாங்கிபாக்கெட்டில் போட்டுக்கொண்டேன். அந்த சமயத்தில் தபால்காரன் நான் வெகுநாட்களாக தவம் கிடந்து எதிர்பார்த்த "இந்திரஜித்" ஏகாதசி மலரைகொண்டு வந்து கொடுத்துப்போனான். மலர் கண்ணைப் பறித்தது. அப்போதே உட்கார்ந்து படித்து



முடித்துவிடவேண்டுமென்று எண்ணினேன். அப்படி உட்காருவதிலும் ஓர் ஆபத்து இருந்தது. என் மனைவி நினைத்து, நினைத்து அந்த சாமான் ஜாபிதாவில் சாமான்களை சேர்த்துக்கொள்ளச் சொல்லுவாள். ஆஞ்சநேயர்வால் போல் அந்த ஜாபிதா நீண்டுகொண்டேபோகும். ஆகையால், மலரை இரவில் வீடு திரும்பிய பிறகு படித்துக்கொள்ளலாமென்று மேஜையின்மீது வைத்துவிட்டுக்கிளம்பினேன்.

அப்போது அவசரம் அவசரமாக கணேசன் வந்தான். 'அப்பா பர்ஸை மறந்து வைத்துவிட்டு ஜட்காவிலே கடைத்தெருவிற்குக் கிளம்பிட்டார். ஒரு நிமிஷம் சைக்கிளைக்கொடுங்கள். பர்ஸை கொண்டுபோய்கொடுத்து விட்டு ஓடி வருகிறேன்" என்றான். நானும் அப்போது சைக்கிளில் தான் கிளம்ப நினைத்திருந்தேன். இருந்தாலும்,என் இளகியமனது! பர்ஸ் எடுத்துக்கொள்ளாமல் புறப்பட்ட கணேசனின் தகப்பனார் என்ன திண்டாட்டங்களுக்கு உள்ளாவாரோ என்று பரிதவித்தது. "சரி! சைக்கிளை எடுத்துக்கொண்டு போ! நானும் கடைத்தெருவிற்குத்தான் கிளம்பிக்கொண்டிருக்கிறேன். மெதுவாக நடந்து வருகிறேன். நீ பர்சைக் கொடுத்துவிட்டு, வேகமாகவே திரும்பி, வழியில் என்னை சந்தித்து சைக்கிளைக்கொடுத்துவிடு, என்று சொல்லி, அதை அவன் கையில் ஒப்படைத்துவிட்டு நடையில் கிளம்பினேன். கிளம்பும் போதே திரும்பி வந்தவுடன் சரசுவிற்கு என்ன பதில் சொல்வதென்றும் தீர்மானித்துக்கொண்டேன், "இன்றைக்கு கடைத்தெருவிற்கே போகவில்லை! வழியிலுள்ள பார்க்கிலேயே உட்கார்ந்துவிட்டேன். ஆகையால் நீ கேட்ட சாமான்களை வாங்கமுடியவில்லை" என்று சொல்லிவிட திட்டமிட்டேன்.

நான் நடந்துபோய்க்கொண்டே இருந்தேன் ஆனால் சைக்கிளுடன் கணேசன் எதிரில் வருவதாகத் தென்படவில்லை. கடைசியில் பொறுமையை இழந்து பஸ்ஸில் ஏறி வெளியேபோய் சுற்றிவிட்டு எட்டு மணிக்கு வீடு திரும்பினேன் ஆவலுடன் என்னை எதிர்பார்த்திருந்த சரசுவிடம் முன்னேற்பாடாக தயாரித்திருந்த பச்சைப்பொய்யைச் சொன்னேன். பேதைப் பெண் அதை நம்பிவிட்டாள். ஹாலின் மற்றொருபாகத்தில் ஏதோ வீட்டுக்காரியத்தைப் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

சட்டையைக் கழற்றிவிட்டு ஆவலுடன் 'இந்திரஜித்தை'ப் படிக்க மேஜைக்குப்போனேன். எனக்குப் பகீரென்றது மேஜை காலியாக இருந்தது. 'இந்தர்ஜித்' எப்படியோ மாயமாய் மறைந்துவிட்டிருந்தது, அப்போது மேஜை ஓரத்திலிருந்து ஓர் துண்டுக்கடிதம் என் கவனத்தைக் கவர்ந்தது. எடுத்துப்பார்த்தேன். "மலரை நான்தான் எடுத்துப் போயிருக்கிறேன். அது நாளை திருப்பி வரும்—ஹரிஹரன்" என்று அதில் எழுதப்பட்டிருந்தது. எனக்கு வந்த கோபத்தில் அப்படியே நரசிம்மாவதாரம் எடுத்து அவனை ஹிரண்யன்போலாக்க வேண்டுமென்று தோன்றியது. "சரசு! நான் போன பிறகு ஹரிஹரன் வந்தானா?" என்றேன் "நீங்கள் வாசற்படி இறங்கி இரண்டு நிமிஷத்திற்கெல்லாமே வந்தார். நீங்க வெளியே போயாச்சுன்னு இங்கிருந்தே சொன்னேன், உடனே போய்விட்டார்" என்று பதிலளித்தாள் சரசு. அவன் வீடு ஒரு மைலுக்கப்பால் இருந்தது. இல்லாவிட்டால்உடனேயேபோய் அதைக் கொண்டு வந்திருப்பேன்.

என் கோபம் அடங்குமுன்பே சுப்பாமணி மெதுவாய் தலையை நீட்டினான். "அண்ணா உங்களுக்காகத்தான் காத்துக்கொண்டிருந்தேன் சாயங்காலத்திலிருந்து. இரண்டு ரூபாய் அர்ஜண்டாக வேண்டியிருக்கு. குழந்தைக்குப் பால்புட்டி வாங்கணம், நாளைக்கு சாயங்காலம் பணம் வந்துவிடும், திருப்பித்தருகிறேன் என்றான் ஏகப்பட்ட அபினயத்துடன். சுப்பாமணி பெரிய கபந்தன். எனக்கு எதிர்வீட்டில் குடியிருப்பவன். அவனிடம் போன ரூபாயெல்லாம் குழந்தையின் வாய்க்குள் போன பெப்பர்மெண்ட் மாதிரிதான்! ஓரிரண்டு அனுபவங்களுக்குப் பிறகு நான் அவனிடம் நிர்தாட்சண்யமாகத்தான் நடந்துவந்தேன் மேலும். இன்று அவன் பால்புட்டிக்காகப் பணம் கேட்கவில்லை என்று நிச்சயமாய் தெரியும். ஏதோ ஒரு பாடாவதி சினிமாப்படம் இன்று கடைசி நாளாக ஓடுகிறது. அதற்குப் போகத்தான் பணம் கேட்கிறான். ஆகையால் அவனுக்கு உதவி செய்ய எனக்குக் கொஞ்சம்கூட இஷ்டமில்லை. "சுப்பாமணி! என்னிடம் ஒரு பைசாகூட கிடையாது. எனக்குக் கொடுக்கவேண்டியவர்கள் ஒழுங்காகத் திருப்பிக் கொடுத்தால்தான் காசு! வேறு எங்கேயாவது பார்த்துக்கொள்" என்றேன் இரக்கமில்லாத குரலில்.

"அப்படிச்சொல்லக்கூடாது" என்று கையைப் பிசைந்து நின்றான் அவன்.

முற்றிலும் எதிர்பாராவிதமாக படபடவென்று 'ஜீப்' வருவது போல அப்போது பிரசன்னமானான் சீமாச்சு! "அன்றைக்கு இரண்டு ரூபாய் ரேஷனுக்கு வாங்கிக்கொண்டு போனேனே, ஞாபகமிருக்கா? இதோ அந்த ரூபாய்! திருப்பிக்கொடுத்தாச்சு! மறந்துடாதிங்கோ! பத்திரம்! பத்திரம்! சுந்தா காத்துக்கொண்டிருக்கிறான் வாசலில், நான் போகிறேன்" என்று படபடவென்று பட்டாஸ் வெடிப்பது போல் பேசிவிட்டு இரண்டு ரூபாய் நோட்டை என் கையில் திணித்துவிட்டு அந்தர்தியானமாகிவிட்டான் அவன்.

சுப்பாமணியின் முகத்தைக் கடைக்கண்ணால் பார்த்தேன். அவன் கழுகுபோல் என் கையிலுள்ள கரன்ஸி நோட்டைப் பார்த்துக்கொண்டிருந்தான். இந்த சமயத்தில்தானா சீமாச்சு வந்து தன் கடனை திருப்பித்தரவேண்டும்? கொஞ்சம்கூட சந்தர்ப்பம் தெரியாத பயல்! சுப்பாமணியிடம் இனிமேல் சாக்குப்போக்கு சொல்லமுடியாது என்று தெரிந்தது. ஆத்திரத்துடன் அந்த இரண்டு ரூபாயை அவனிடம் விட்டெறிந்தேன். ஒரு மாதத்து ரேஷன் அரிசியை ஒரே தடவையில் வாங்கின சந்தோஷத்துடன் அவன் வெளியே போனான்.

மலர்போன கோபத்துடன், சுப்பாமணி தன் காரியத்தை ஜெயித்துக்கொண்டதாலேற்பட்ட கோபமும் சேர்ந்தது. சர்க்கஸ் புலிபோல் உறுமிக்கொண்டிருந்த என்னுடைய கண்களுக்கு எதிர்த்தாப்போல் சுவரில் மாட்டியிருந்த நாட் குறிப்பு தென்பட்டது. அன்று ஒன்பதுமணி வண்டியில் என் சகோதரியின் கணவன் எங்கள் ஊர் ஸ்டேஷனைக் கடந்து கல்கத்தா போகிறான். அவனை ஸ்டேஷனில் சந்



த்து வரவேண்டும் என்று குறிப்பு எழுதி வைத்திருந்தேன். நல்ல வேளையாக மறுநாள் பார்க்காமல் போனேனே! கடிகாரத்தைப் பார்த்தேன். மணி எட்டேமுக்கால்! ஆறு பர்லாங்கிலிருக்கும் அந்த ஸ்டேஷனுக்கு சைக்கிளில் உடனே புறப்பட்டால்தான் ரயிலைப்பிடிக்கலாம். ஆனால் அந்த பாழும் கணேசன் தான் சாயங்காலமே எடுத்துக்கொண்டுபோன சைக்கிளை இன்னும் கொண்டு வரவில்லையே! அவன் அகராதியில் ஒரு நிமிஷம் என்றால் ஒரு யுகம் போலிருக்கிறது! நடந்துபோனால் நான் ஸ்டேஷனை அடைவதற்குள் என் சகோதரி புருஷன் கல்கத்தாவிற்கே போயிருப்பான்! நமக்கு வாய்க்கும் நண்பர்கள் எல்லாம் இப்படியா வாய்க்கவேண்டும். ஒவ்வொருவராலும் நமக்கு இடைஞ்சல்தான் என்று நினைத்தபோது எனக்குத் துக்கம்துக்கமாகவந்தது. அந்த துக்கத்தையும் அமுக்கிக்கொண்டு கோபம் ரௌத்திராகாரமாய் கிளம்பிக்கொண்டிருந்தது. அதிக கோபம் வந்தால் மானசிகமாக ஒன்று, இரண்டு, மூன்றுவரை எண்ணினால் கோபம் குறையும் என்று யாரோ சொல்லியிருப்பது நினைவிற்கு வந்தது. அப்படியே எண்ண ஆரம்பித்தேன் சரசு சாப்பிட வரச்சொல்லி கூப்பிட்டுக்கொண்டிருந்தாள்.

நான், ஆயிரத்துநூற்று நாற்பத்தியெட்டாம் நெம்பருக்கு வந்தபோது நாராயணன் வந்து சேர்ந்தான். நாராயணனை நான் அன்று பூராவாகவும் சந்திக்கவில்லை! அவனும் என்னைப்பார்த்திருக்கமாட்டான் என்று தான் நினைத்தேன். ஆனால் அவன் 'ராபணா' என்று ஆரம்பித்தான். "என்ன! ப. தா. ஜவுளிக்கடை வாசலில் ஏதோ பெரிய உபன்யாசம் பண்ணிக்கொண்டிருந்தீர்களே! சினிமா விமர்சனமா?" என்றான். எனக்குத் தூக்கிவாரிப்போட்டது. நான் கடைத்தெருவில் ஆபீஸ் நண்பர்களுடன் ரேஷனைப்பற்றி விவாதித்துக்கொண்டிருந்தது வாஸ்தவம் தான்! அதை இந்த நாரத நாராயணன் கவனித்திருக்கிறான் என்று நான் கண்டேனா? அப்படி கவனித்திருந்தாலும், இப்போது அதைப் பற்றித்தானா கேட்க வேண்டும்? பேசுவதற்கு வேறு விஷயமா இல்லை? ஓரக்கண்ணால் சரசுவைப்பார்த்தேன். அவள் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்க ஆரம்பித்திருந்தன. நான் கொஞ்சம் சமாளித்துக்கொண்டு "நாராயணா! யாரையாவது பார்த்துவிட்டு என்னைப்பார்த்ததாகச் சொல்லாதே! நான் இன்று கடைத்தெருவிற்கே போகவில்லையே!" என்று கூசாமல் ஒரு போடு போட்டேன். என் முகத்தைக் கவனிக்காமல் அவன் மேலும் ஆரம்பித்தான். "என்ன சார்! புதுக் கதையாக இருக்கிறது? என் கண்களுக்கு நீங்கள் என்ன புதிதா? அதுதான் போகிறது. கோமளபவான் வாசலில் பாலுவிடம் கூட தோடுகா தாய் பேசிக்கொண்டிருந்தீர்களே! அதுவும் நீங்கள் இல்லையோ?" என்று கிரிமினல் கேசில் கிராஸ் பண்ணுவதுபோல் ஆரம்பித்தான். கிணறு வெட்ட பூதம் கிளம்பிய கதையாகி விட்டது! எனக்கு வந்த ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு 'நாராயணா! எனக்கு இப்போ கோப வேளை! நீ வீட்டிற்குப் போய்விட்டு அப்புறம் வா!' என்று கண்டிப்பு த்வனிக்கும் முறையில் சொல்லி எங்கள் பேச்சிற்கு முற்றுப் புள்ளி வைக்க விரும்பினேன். இவ்வளவு நாழிகையாக யுத்தத்தை எப்படித் துவக்குவது என்று விழித்துக்கொண்டிருந்த சரசு இந்த சந்தர்ப்பத்தை உபயோகித்துக் கொண்டாள். "ஆமாம்! உள்ளதைச் சொன்னால் கோபம் வராதோ? ஹரிச்சந்திர மகாராஜா பாழை போகிறார்! சாமான் வாங்கித் தர இஷ்டமில்லை என்றால் இஷ்டமில்லை என்று சொல்ல! அதற்காக கடைத் தெருவிற்கே போகவில்லை என்று சொல்லி முழுப் பூஷணிக்காயை சோற்றில் மறைப்பானேன்?" அதற்குமேல் அவளால் பேச முடியவில்லை. பேச்சு வேகம் துக்க வேகமாக மாறி அழவே ஆரம்பித்துவிட்டாள். நாராயணன் பயந்து போய், விஷயம் தெரியாமல் மெதுவாக நழுவிவிட்டான். முட்டாள்! என் குட்டை உடைத்து வீட்டில் நிலவி இருந்த அமைதியைக் குலைத்துவிட்டான் ஹரிஹரன். சீமா கணேசன், இவர்கள் மீது வந்த கோபத்தைவிட நாராயணன் மீதுதான் எனக்கு அதிகக் கோபம் வந்தது. ஆனால் என்ன பண்ணுவது? நம் கிரகசாரம்! இவர்களா என் நண்பர்கள்! எல்லோரும் பரம விரோதிகள்! இந்தப் பரந்த உலகில் நமக்கு ஆப்த நண்பன் என்று ஒருவருமே கிடையாது என்றுநினைத்தபோது என் மனம் ஏங்கியது!

சரசு, தசரதரை எதிர்பார்த்திருக்கும் கைகேசிபோல படுத்திருந்தாள். எவ்வித எக்ஸ்பிளனேஷ

னும் இந்த சமயத்தில் அவ ளைச் சமாதானப்படுத்தா தென்று தெரியும்! தேள் கொட்டினால் எவ்வித மருந்து போட்டும் சுமார் இருபத்தி நாலு மணி நேரம் வரை வலி இருக்கும் என்பது போல், சரசு, மறுநாள் வரை முகத்தைத் தூக்கிகொண்டுதானிருப்பாள்! என் மனம் நிம்மதியில்லாமலிருந்தது. பேசாமல் உள்ளே போய் வேண்டியதை நானாகவே எடுத்து சாப்பிட்டுவிட்டு, சட்டையை மாட்டிக்கொண்டு "சினிமாவிற்குப் போகிறேன். கதவைச் சாத்திக்கொள்" என்று சுவரைப் பார்த்து சொல்லிவிட்டு (சரசுவிடம்தான்!) கிளம்பினேன்.

நான் கொட்டகையை அடைந்த போது ஆட்டம் ஆரம்பமாகிவிட்டது. இருந்தாலும் உள்ளே சென்றேன். ஏகக்கூட்டம். ஒரே புழுக்கம். இருட்டில் தட்டுத்தடுமாறிக் கொண்டே ஓரமாக உள்ள நாற்காலி ஒன்றில் உட்கார்ந்தேன். மின்சார விசிறியின் வசதி உள்ள இடங்களெல்லாம் ஏற்கனவே அபகரிக்கப்பட்டிருந்தன வாகையால், நான் இருந்த இடத்தில் உஷ்ணமும் புழுக்கமும் அதிகமாக இருந்தன. துட்டைச் செலவழித்து உள்ளே வந்தபிறகு, வீடு திரும்ப மனது வருகிறதா? ஆகையால் படம் பார்ப்பதில் கவனத்தைச் செலுத்தினேன்.

நான் உட்கார்ந்த சில நிமிஷங்களுக்கெல்லாம், வேறு யாரோ ஒரு ஆசாமி என் நாற்காலிக்கு அடுத்த நாற்காலியில் வந்து உட்கார்ந்தார். இருட்டில் அவர் யார் என்று தெரியாத போனாலும் முன்னேற்பாடாக அவர் கையில் ஓர் ஓலை விசிறியைக் கொண்டு வந்தது நன்கு தெரிந்தது. உட்கார்ந்தது முதல் அவர் தனக்கு விசிறிக்கொள்ள ஆரம்பித்தார். அவர் மேல் காற்று பட்டதோ என்னவோ, அவர் விசிறி எழுப்பிய காற்று முழுதும், அடுத்தாற்போல் உட்கார்ந்திருந்த என்மேல் வீசியது. அவரும் கைசளைக்காமல் முக்கால்மணிநேரமாக



காலேஜ் ப்ரொபஸர்:—"என்ன, ராமநாதய்யர்வாள்! உங்க பையன் 'அட்மிஷ'னுக்காக போன ஜூன் மாதம் வந்தவர், மறுபடியும் இப்போதான் வரேள்! அடுத்த பையனுக்கு காலேஜ்லே 'ஸீட்டு'க்கு ரொம்ப லேட்டான்னு வந்திருக்கேள்......"

ராமநாதய்யர்:—"இல்லேன்னு! என் ரெண்டாவது பையன் இந்த வருஷந்தான் எஸ். எஸ் எல். ஸி. பரிக்ஷைக்கு போறான். அடுத்த வருஷம் அட்மிஷனுக்கு இப்போவே ஒங்க காதுலே ஒரு வார்த்தை போட்டு வைக்கலாம்னு வந்தேன்......"

மௌனமாகப் படத்தை அனுபவித்துக்கொண்டே விசிறிக்கொண்டிருந்தார். எனக்குப் பிரமானந்தமாக இருந்தது. அந்தக் காற்று இன்பத்தில் படங்கூடப்பார்க்கவில்லை. மனிதர் என்றால் இவர் அல்லவா மனிதர்! என்ன பரோபகாரசிந்தை! ஆப்த நண்பர் என்று மார்தட்டி பெருமைப்படக்கூடிய லாயக்குள்ளவரல்லவா இவர்! என்ன கைங்கர்யம்! இருக்கிறார்களே நாராயணனும், ஹரிஹரனும் உபத்திரவ சிகாமணிகள்! என்மனம் ஆனந்தத்தில் நெகிழ்ந்தது. அருகில் உட்கார்ந்து ஆயாசமடையாமல் விசிறும் ஆப்தநண்பருக்கு ஆத்மார்த்தமான நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ள என் உள்ளம் துடித்தது. இண்டர்வல்வேளைக்காக காத்திருந்தேன்.

இண்டர்வலுக்காக விளக்குப்போட்ட விநாடியிலேயே அருகிலிருந்தவரின் கைகளைப் பிடித்துக்குலுக்கிவிட்டு "சார்! நீங்கள் தான் என் ஆப்த நண்பர் உங்களுக்கும் உங்கள் விசிறிக்கும் ரொம்ப கடமைப்பட்டிருக்கிறேன்! ஆஹாஹா! மனுஷ்யர் என்றால் நீங்கள்தான் மனுஷ்யர்!" என்று உணர்ச்சி பொங்க மடமடவென்று சொல்லிவிட்டு முதல் தடவையாக அவர் முகத்தை ஏறிட்டுப்பார்த்தேன்.....ஐயய்யோ! அவர் எங்கள் ஆபீசிற்குப் புதிதாக வந்திருக்கும் மானேஜர்! எனக்குப் பேய், பூதம், முதலியவற்றைக்கண்டதுபோல் ஓர் உணர்ச்சி! இந்த மனுஷ்யனை யார் என்பக்கத்து நாற்காலியில் வந்து உட்காரச் சொன்னார்கள்?

அப்படியே சடாரென்று முகத்தைத் திருப்பிக்கொண்டு அந்த மனிதர் பதில்பேசுவதற்குள் ஜன சந்தடியில் மறைந்து படத்தின் பிற்பகுதியைப் பார்க்காமலேயே வீட்டிற்குத் திரும்பிவிட்டேன். அவர் இந்த சம்பவத்தை மறக்கு மட்டும் ஆபீசில் தலைகாண்பிக்கக் கூடாது என்பதற்காக மூன்று நாள் காஷுவல் லீவு போட்டுவிட்டேன்!

நல்ல ஆப்தநண்பர் வந்து சேர்ந்தார்! அதைப் பார்த்தபோது நமது ஆபத்து நண்பர்களே தேவலை என்று தோன்றிற்று.

ஞாபகப்படுத்துகிறோம்

★

"சுதேசமித்திரன்" வாரப் பதிப்பில் வெளிவரும் கதைகள், கட்டுரைகள், கவிதைகள் இவற்றில் வரும் பெயர்கள், சம்பவங்கள் முதலியன எவரையும் குறிப்பிடுவன அல்ல. அவை முற்றிலும் கற்பனையே.

—ஆசிரியர்.



காலையில் ராமனுதன் ஸீதாராமனின் ரூமுக்கு வந்து முதல் நாள் ராத்திரி பார்த்த ஸினிமாவைப்பற்றி உற்சாகமாகப் பேசினுன்.

“நீ வராமல் போய்விட்டாயே ஸீதாராமா?”

“ஸந்நியாசியின் மகள்” தானே! நாமிருவரும் முன்ஞெருமுறை பார்த்திருக்கிருேமே! அதே படமா இன்னமும் ஓடுகிறது? அதைத்தான் பார்க்கப்போனீர்களா? வேறு சிலாக்கியமாய் உங்களுக்கு ஒன்றும் தென்படவில்லையா—நான் வராமலிருந்தது நல்லதாய்ப்போயிற்று—அந்தக் குப்பைக் களஞ்சியத்தை இன்னுமா ஜனங்கள் பார்த்துக்கொண்டிருக்கிருர்கள்!”

“ஆம். நான் முன்ஞெருமுறை பார்த்திருக்கிறேன். நீயும் அன்று பார்த்தது இப்போதுதான் ஞாபகம் வருகிறது. அந்தப் படத்திற்கு என்ன? நன்ருயில்லை என்ரு சொல்கிருய்?”

“நன்ருயிருந்தால் நீ முதல் தடவை பார்த்ததை மறந்துபோயிருப்பாயோ?”

“நான் மறக்கவில்லை. நீ என்னுடன் வந்தது ஞாபகம் இல்லை என்றுதான் சொன்னேன்.”

“நான் வராமல் நீ தனியாகவும் போவதுண்டோ.”

“இல்லை. நீ இல்லாமல் பாட்டு, கதைகளுக்குப்போவதில்லைதான். ஸினிமாவுக்குப் பலதரம் நீ வர நிராகரித்திருக்கிறபடியால் சில சமயம் நான் தனியேபோக நேரிட்டிருக்கிறது.”

“வாஸ்தவம் — அதற்கெல்லாம் உனக்கு வேறு ஸகாக்கள் இருக்கிருர்களல்லவா?”

“இருக்கிருர்கள்” என்ருன் ராமனுதன் சிரித்துக்கொண்டு.

“நேற்று நீங்கள் பார்த்த படம் உன் மாமாவுக்குப் பிடித்திருக்கிறதாக்கும்.”

“கடைசியில், ஸீதாராமா, நேற்று மாமாவுடன் நான் ஸினிமாப் பார்க்கவில்லை.”

ஸீதாராமன் “ஏன்?” என்று வினவினுன் ஆச்சரியத்துடன்.

“இரண்டாம் “ஷோ”வுக்குத்தான் போனேன்.”

“அடாடா—அவர்கள்?”

“அவர்கள் முதல் ‘ஷோ’ பார்த்துவிட்டு வந்து விட்டார்கள்—நேற்று கூட்டம் நெரிந்தது. டிக்கட்டு வாங்குவது வெகு சிரமமாகி விட்டது. நான் எனக்குத் தெரிந்த பேர்வழி ஒருவனிடம் பணத்தைக் கொடுத்து நான்கு இரண்டாம் கிளாஸ் வாங்கச் சொன்னேன். அவன் மூன்று டிக்கட்டுகளைமட்டும் வாங்கி வந்தான். தவறிக் குறைத்து வாங்கிவிட்டதற்காகத் தன் மூன்ரும் கிளாஸ் டிக்கெட்டை எனக்குக் கொடுப்பதாய்ச் சொன்னுன். நான் அவனிடம் அனுதாபப்பட்டு என் மூன்று டிக்கெட்டுகளைமட்டுமே பெற்றுக்கொண்டேன். மறுபடி டிக்கெட்டு வாங்கப் பிரயத்தினப்படுவது அசாத்யமென்று நினைத்து, மாமாவையும், இரு பெண்களையும் உள்ளே அனுப்பிவிட்டு, நான் வெளியே நின்றேன். அடுத்த ‘ஷோ’வுக்குத்தான் போக முடிந்தது. அந்தக்கூட்டத்தில் மறுபடி அவர்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை. நான் ராத்திரி வீடு வரும்பொழுது அகாலமாகிவிட்டது. மாமாவை இன்னும் ஸினிமாவைப்பற்றிக் கேட்கவில்லை. அவர், பெண்ணின் புஸ்தகம் நோட்டுகளைப் பரிசோதனை போட்டுக்கொண்டு, அவள் படிப்பு விஷயமாய் விசாரித்துக் கொண்டிருக்கிருர்.”

“உனக்கு ராத்திரி தூக்கமில்லாதது முகவாட்டத்திஞல் நன்ருகத் தெரிகிறது.”

“முகவாட்டமா?” என்ருன் திடுக்கிட்டதுபோல் ராமனுதன்.

“வாட்டம் மட்டுமா? முகம் வெளுத்ததுபோலல்லவா தெரிகிறது? எங்கேயாவது பயந்துகொண்டாயா என்ன?”

“செட். பயமாவது, மண்ணுங்கட்டியாவதுடா?” ஒய்யாரமாய் நிமிர்ந்து பார்த்தான் ராமனுதன்.

“ராமனுதா! உன் ரிஸ்ட்வாட்சு எங்கே?”

“கூட்டத்தில் இடிபட்டதில் கண்ணுடி உடைந்துபோய்விட்டது. உடனே வாட்சு ரிப்பேரரிடம் கொடுத்துவிட்டேன்.”

“யாரிடம்?”

"கன்னுசாமி அன்டு ஸன்ஸில் கொடுத்திருக்கிறேன்."

"தங்கச் சங்கிலியைக் கையில் எடுத்துக்கொண்டுவிட்டாயல்லவா?"

"அதைக் கொடுப்பேனு?"

"உன் வைர பட்டன் ஸெட்டைக் கழற்றி வைத்திருக்கிருயா, என்ன?" என்று வினவினுன் ஸீதாராமன், மீண்டும் கவனித்து.

"அதை அந்தக்கூட்டத்தில் போட்டுக்கொண்டு போகாதது நல்ல யோசனையாய் போச்சு. இல்லாவிட்டால் அதையும் பறிகொடுத்துவிட்டால் யாரைக் கேட்க முடியும்?"

"மோதிரம்?"

"எல்லாவற்றையும் உள்ளே பீரோவில்தான் வைத்திருக்கிறேன். உன்னிடத்திலிருந்து இந்த முன் ஜாக்கிரதையெல்லாம் கற்றுக்கொண்டிருக்கிறேன். அது கிடக்கட்டும், ஸீதாராமா, நாளைக்கு அத்திம்பேர் வரப்போகிருரே உனக்குத் தெரியுமோ?"

"அத்திம்பேரா? டாக்டர் கோபினுத் வருகிருரா? கோமதியும் வருகிருளா?"

"கோமதி, குழந்தை ராதா எல்லாரும்தான் வருகிருர்கள். அவர்களோடு மாப்பிள்ளையும் வருகிருராம்—"

"மாப்பிள்ளையா?"

"காந்திமதிக்குப் பார்த்திருக்கிற மாப்பிள்ளை, அத்திம்பேரின் சிறிய தாயின் பிள்ளைதான் அவர்—இஞ்சினியரிங் காலேஜில் படிக்கிருராம்"

"எப்போ கடிதம் வந்தது?"

"நேற்றுத்தான் வந்ததாம்—அப்பா ஆபீஸ் அட்ரஸுக்கு. இப்போது என்னிடம் அப்பா கடிதத்தைக் காண்பித்தார்."

"நாளைக்கே வருகிருரா!"

"நாளைக்குப் புறப்படுகிருராம் நாக்பூரிலிருந்து. அதுவும் அவ்வளவு நிச்சயமாய் எழுதவில்லை. இந்த வாரத்திற்குள் கட்டாயம் வந்து விடுகிருர். தன்னுடன் ஜகன்னுத் என்ற தன் அத்தை பிள்ளையையும் அழைத்து வரலாம் என்று எழுதியிருக்கிருர்."

"அத்தை பிள்ளையா? சிறிய தாயார் பிள்ளையா?"

"ஆண்ட்" என்று எழுதியிருக்கிருர். அதை எப்படி வேண்டுமானுலும் வைத்துக் கொள்ளலாம்."

"ஆனுல் உனக்கு அந்த ஜகன்னுத்தைப்பற்றித் தெரியாதோ?"

"எல்லாம் இந்த ஒரு வாரத்திற்குள்தான் பிரஸ்தாபம். அத்திம்பேர் தன்னுடைய "கஸின்" ஜாதகத்தை வாங்கி அனுப்பி ஒரு வாரம்தான் ஆகிறது. அவர்கள் ஜாதகம் பார்க்கப்போவதில்லை என்றும் எழுதிவிட்டார். அப்பா, ஜாதகத்தைப் பார்த்துச் சம்மதத்தை உடனே தெரிவித்தார். இதை எல்லாம் வீட்டில் பிரஸ்தாபிக்கு முன்னமேயே விரைவில் கார்யம் முன்னேறி வருகிறது."

"எதிர்பாராதது, வெகு துரிதமாய் நடக்கிறதும், நாம் உத்தேசிப்பது தடைப்பட்டு நிற்பதும் வழக்கம்தானே." என்ருன் அரை வேதாந்தியான ஸீதாராமன்.

"அப்பா ஒரு செக் எழுதிக் கொடுத்திருக்கிருர். அதை மாற்

றிப்பணத்தை ஆபீஸில் தன்னிடம் கொண்டுவந்து கொடுக்கும்படி சொன்னுர்."

"யார் பேருக்கு?"

"வழக்கம்போல் உன்பேருக்குத்தான், எப்போதும்போல் நீதான் பாங்குக்குப் போகவேணும். பணத்தை என்னிடம் கொடுத்துவிடு. நான் அப்பா ஆபீஸுக்குப்போய்விட்டுக் காலேஜுக்கு வருகிறேன். நான் லேட்டாக வருவேன் என்று வாத்யாரிடம் சொல்லு."

"நான் பாங்குக்குப் போவதானுல் எனக்கும் லேட்டாகுமே!"

"முதல் மணிக்கு உனக்கு அட்டெண்டன்ஸ் கொடுக்கும்படி சங்கரிடம் சொல்லிவிடுகிறேன்."

"செக் எவ்வளவு ரூபாய்க்கு?"

"ஆயிரம் ரூபாய்க்கு"

"எதுக்கு திடீரென்று ஆயிரம் ரூபாய்? இவ்வளவு பெரிய செக் இதுவரையில் என்பேரில் போட்டதில்லையே!"

"நாளைக்கு நிச்சயமாகப் போகிற விவாக சம்பந்தமாக ஏதாவது செலவுக்குத்தான் இருக்கும் என்று நினைக்கிறேன். அப்பாவை இப்போது கேட்கக் கூடாது. பிற்பாடு கேட்டால் சொல்லுவார். சரி நாழியாகிறது நீ சாப்பாட்டிற்கு 'ரெடி' பண்ணிக்கொள்."

* * * * * *

காலேஜுக்குப் போகும்போது ஸீதாராமன் பாங்கியில் செக்கை மாற்றி ராமனுதனிடம் பணத்தைக்கொடுத்தான். ராமனுதன் அப்பா ஆபீஸுக்குப் போனுன். ஸீதாராமன் காலேஜுக்குப்போனுன்.

ராமனுதன் காலேஜுக்குப் போகும்போது மணி 12½ ஆகிவிட்டது. அவன் முக்கக்களை பிரகாசமாயிருந்தது. கையில் தங்கச்சங்கிலியுடன் தங்க ரிஸ்டு வாட்சும், விரலில் வைரமேதிரமும், மார்பில் வைரப்பித்தான்களும் ஜ்வலித்தன. அவன் கிளாஸுக்குள் வருவதை ஸீதாராமன் கவனிக்கு முன் ரோஸ்லிண்டு பத்மா என்னும் மாணவி கவனித்தாள். அவளுடைய அழகிய கண்கள் ராமனுதனின் மேற்கூறிய ஆபரணங்கள் மீது குறிப்பாய் பாய்ந்து பின் சென்றன. ராமனுத்னின் கண்களும் பத்மாவைத் தான் முதலில் தேடின. ராமனுதன் ஒரு மூலையில் மெதுவாய் வந்து அமர்ந்துகொண்டான். உட்கார்ந்ததும் ஸீதாராமனைப்பார்த்துப் புன்சிரிப்புச்சிரித்தான். பத்மாவை மறுபடி கடைக்கண்ணுல் ஆராய்ந்தான். பத்மா உறுதியுடன் சிலையாக மாறிவிட்டாள். ஸீதாராமன் கவனிப்பதை அவள் உணர்ந்தாள்போலும். உபாத்யாயர்கள் அதிகமாய் ராமனுதனைக் கண்டிப்பதில்லை. அவன் வம்புக்குப்போக யாரும் யோசிப்பார்கள். அவன் துணிகரமாக பதில் சொல்லுவதுடன் பல மாணவ, மாணவிகளையும் கட்டுப் படுத்தும் செல்வாக்குடையவன். இவ்விதச் செல்வாக்கைக் கருதுபவன் படிப்பில் முன்னேறுவது குறைவுதான். ஆனுல் அது ஒரு சுவபாவம். அதற்கும் சில சமயம் பெருமை உண்டு.

காலேஜில் ஷேக்ஸ்பியர் நாடகம் ஒரு கொண்டாட்டத்தின் போது நடத்த எண்ணினுர்கள். அதில் ரோஸலிண்ட் என்ற கதா நாயகி வேஷத்தைப் பத்மா ஏற்றுக்கொண்டாள். ராமனுதன் கதா நாயகன் வேஷத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டான். இச்செய்தி தெரிந்தோ, என்னமோ பத்மா தான் இஷ்டப்படாமல்விலகிக்கொள்ள விரும்பினுள். இந்தக் குறிப்பறிந்து 'டைரக்டர்'' கதா நாயகன் பார்ட்டுக்கு வேருெருவரை முன்நிறுத்தினுர். பத்மா, ரோஸலிண்ட்டாக நடித்துப் பெரும் புகழும், பரிசும் பெற்ருள். இதன் முன்னே பின்னே பத்மாவுக்கும், ராமனுதனுக்கும் மனஸ்தாபம் எதுவும் இருந்ததாகவாவது, இருப்பதாகவாவது யாரும் ஊகிக்கக் காரணம் இல்லை. மற்ற பெண்கள், பிள்ளைகள் காலேஜில் நடந்து கொள்வது போல்தான் இவ்விருவரும் நடந்துகொண்டார்கள். ஸீதாராமனுக்குக் கூடத் தொடர்ந்து விமர்சிக்கக் கூடிய யாதொருசந்தேகத்திற்கும் இடமளிக்கக்கூடிய நடவடிக்கைகள் இவ்விருவரிடையே இருந்ததாகத் தோன்றவில்லை. அன்றுமட்டும் அவன் கவனித்த நயனபாஷை அர்த்தமற்றதாயிருக்கமுடியாதென்று அவனுக்குப் 'பளீர்' என்று மனதில் ஒரு மின்சார வெளிச்சத்தை வீசியது. ராமனுதனின் ஷர்ட் பித்தான்களின் வைரங்கள் கண்ணைக் கவர்ந்தன. பாங்குக்குப் போகும்போது ராமனுதன் அவைகளை தரித்துக் கொண்டிருந்ததையும், இல்லாததையும், தான் நிச்சயமாய் ஞாபகப்படுத்திக்கொண்டு சொல்லமுடியாத நிலைமைக்கு அவன் வருந்தினுன். செக்கில் கை ஒப்பமிட்டுத்தான் பணத்தை வாங்கி அந்தப் பெரும் தொகையை உடனே ராமனுதனிடம் கொடுத்துவிட்டது தன் மீது தவறு, அஜாக்கிரதை, குற்றம், மோசடி முதலிய அநர்த்தங்களைச் சுமத்தாமலிருக்குமா என்று அவன் சந்தேகப்படவாரம்பித்தான். செக்கையும் வெங்கிடசுப்பையரிடமிருந்து வாங்கவில்லை: பணத்தையும் அவரிடம் கொடுக்கவில்லையே, என்று ஆராய்ந்து பார்க்கும்போது அவன் பதறினுன். எவ்வளவு துரிதத்தில் ஒரு பெரிய பொறுப்புள்ள காரியம் நடந்துவிட்டது என்று நினைக்கத் திகைத்துப் போனுன். இந்நடவடிக்கைகளின் மேல் தோற்றத்திற்கும் உள்

தத்துவத்திற்கும் வேறுபாடு இருக்குமோ என்று ஏங்கினுன். தான் என்றும் காப்பாற்றி வந்த நிதான புத்தியை ஏன் இழந்தோம் என்று மனம் குழம்பினுன். அவனுடைய உடலில் திடீரென்று உஷ்ணம் விசிரி அடித்தது. முகம் வியர்த்தது. நாக்கு உலர்ந்தது. புத்தி இருள் சூழ்ந்தது, ஹ்ருதயம் படபடவென்று அடித்துக் கொண்டது. கண்கள் வெறித்துச் சூன்யத்தை நோக்கின. கிளாஸ் முடிந்து உபாத்தியாயர் எழுந்து சென்ருர். பையன்கள் "இண்டர்வெல்"லை உத்தேசித்து தட தடவென்று காலரியில் சப்தம் செய்து கொண்டு வெளியே செல்லவாரம்பித்தார்கள். ஸீதாராமன் தன் நிலைமையைச் சமாளித்துக் கொண்டு, ராமனுதன் உட்கார்ந்திருந்த விடத்தைத் திரும்பிப் பார்த்தான். ராமனுதன் அங்கு தென்படாததாலும் கிளாஸ்ரூம் அநேகமாய்க் காலியாகிவிட்டபடியாலும் ஸீதாராமன் வெளியே வந்தான். வராந்தாவில் ராமனுதனின் இனிமையான த்வனி ஒலித்தது. ஆங்கிலமும், தமிழும், சிரிப்பும் வீராப்பும் கலந்து பெருகின. அவன் வேறு சில பையன்களுடன், தான் தன்னிஷ்டப்படி வருவதையும், போவதையும் உபாத்தியாயர்கள் பார்த்துக் கொண்டு பார்க்காததுபோல் இருந்து விடுவதைப்பற்றி அட்டகாசமாய் விவரணம் செய்து கொண்டிருந்தான். அச்சிறு கோஷ்டி அந்த உயர்தர ஹாஸ்ய கட்டங்களையும், அவைகளுக்கேற்ற அபினயங்களையும் உத்ஸாகமாய் ரஸித்துக்கொண்டிருந்தது. ஸீதாராமனும் அந்தக் கோஷ்டியில்கலந்துகொண்டான். அவன் கவலைகள் உடனே மறைந்தன.

சில நிமிஷங்களில் ராமனுதனும், ஸீதாராமனும்கைகோத்துக் கொண்டு டிபனுக்குச் சென்ருர்கள்.

(தொடரும்)

கானமும் காட்சியும்

"நீலம்"

நல்ல ஜாதிக்குதிரை; ஆனுல் மகா முரடு. இதை எப்படி அடக்கி ஒடுக்கி ஜேணத்தைப் போட்டு சவாரி செய்வது? பலரை அதுக்குக் கிழே சரிந்து சாயச் செய்துவிடுகிறது. ஆனுல் திறமைசாலி குதிரையை அடக்கி ஒட்டிவிடுகிருன் அதே மாதிரி சங்கீதம் பரிமளிப்பதற்குச்சாரீரசம் பத்திருக்க வேண்டும்.

சென்ற வாரம் திங்களன்று காலை ஸ்ரீமான் எஸ். அனந்தகிருஷ்ணன் சென்னை ரேடியோவில் காலை நேரத்தில் கௌளை ராக உருப்படியோடு அரைமணி நேரம் பாடிய போது மேற்சொன்ன எண்ணங்கள்தான் மனதில் எழுந்தன.

ஸ்ரீமான் அனந்தகிருஷ்ணன் ஞான பலம் பெற்றிருக்கும் இளம் பாடகர்களில் ஒருவர். உழைப்பாளி. சாரீரம் பாரியானது. அவர் மனதில் உதிக்கும் கற்பனைகளை நளினமாகச் சித்தரிக்கும் சக்தி அதற்கு அவ்வளவாக இல்லை. இருப்பினும் அவர் அவரது சாரீரத்தின் இடக்கையெல்லாம் ஒரு சீரான முறையில் உருப்படுத்தியிருக்கிருர். அதைக் கட்டுப்பாடாகத் தம் வசப்படுத்தியிருப்பதும் விசேஷம். துடிப்பாகவும் விருவிருப்பாகவும் இவரது பாட்டின் நடை அமைந்துளது. ஹரிகாம்போஜி ராக ஆலாபனை செய்த பின் "எந்தரா நீதனு" உருப்படியை பாடி சில ஆவர்த்தங்கள் மிடுக்காக ஸ்வரமும் பாடினுர். ஆனுல் ராக ஆலாபனையை மூர்ச்சனையோடுமட்டும் நிறுத்திக் கொண்டிருந்தால் கமாஸ் ராகத்தின்வாசனைசற்றுஅதிகமென்ற எண்ணம் ஏற்படாமல் செய்திருக்கலாம். ஸ்வர ஆவர்த்த சந்தர்ப்பத்தில்பக்கவாத்தியக்காரர் சற்று பாவ பூர்வமாக ப் பாடகருக்கு உதவியிருக்கலாகாதா? அது நடக்கவில்லை.

அஸாவேரியில் ஸ்ரீ அனந்தகிருஷ்ணன் பாடிய அருணுசலக் கவியின் கிருதி சாதாரணமாக விருந்தது.



ரூ. 1400-ல் ஒரு அழகான சிறுவீடு அலுமியத்தால் செய்யப்பட்டது லண்டன் கைத்தொழில் காட்சியில் வைக்கப்பட்டிருந்தது சமீபத்தில்.

மன்னனை ஆண்ட மங்கை

ஸ்ரீமதி லட்சுமி அம்மா...

இதுவரையில் . . .

[எட்டாம் நூற்றாண்டிலே ராஜஸிம்ம பாண்டியன் ஒரு சக்கிரவர்த்தியாக ஆட்சி செலுத்தி வந்தான். இவன் கங்கராஜனை வென்று அவனுடைய மகளான பூசுந்தரியை மணந்து பட்ட மகிஷியாக்கிக் கொண்டிருந்தான். தெற்கே சேரனையும் வென்று தயாள குணத்துடன் அவனுக்கு வேண்டிய உதவிகளும் செய்திருந்தான். எனினும், சேரன் பாண்டிய சக்கிரவர்த்திக்கு விரோதமாய்க் கலகம் செய்து கன்னியாகுமரியை ஒட்டியிருக்கும் நாஞ்சில் நாட்டைத் தனதாக்கிக் கொண்டான். பாண்டியன் மீண்டும் படையெடுத்துப் போய்ச் சேரனை அடக்கி, அவனிடம் மறுபடியும் தயாளமாக நடந்துகொள்ள வேண்டுமென்று தீர்மானித்து அவனைத் தனக்கு ஒரு சேனாபதியாகவும், மந்திரியாகவும் ஆக்கிக் கொண்டான். சேரனோ கெட்ட எண்ணத்தை விட்டுவிடவில்லை: ஒரு பௌத்த பிட்சுவுடன் சூழ்ச்சி செய்து, பாண்டிய வீர மன்னனுக்கு அஹிம்ஸா தர்மப் பிரசாரம் செய்யும் வியாஜத்தால், பாண்டி நாட்டில் குழப்பம் உண்டாக்கவும், பாண்டியனுள்ளத்தைக் கெடுக்கவும் முயல்கிறான். இந்நிலையில் இராஜ புரோகிதரான செல்வநம்பி ஒரு பண்டித சபைகூட்டி மன்னனுக்கு ஆறுதல் அளிக்க எத்தனிக்கிறார். இச் சபைக்கு எப்படியாவது ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து விஷ்ணு சித்தரை அழைத்து வரவேண்டுமென்று அரசனும், அரசியும், ஒருவருக்கொருவர் தெரியாத நிலையில் மாறுவேடம் பூண்டு போய்க் காரியசித்தி பெறுகிறார்கள். இது பௌத்த பிட்சு முதலானவர்களுக்குப் பொறாமையுண்டாக்குகிறது.]

13

அரசியின் நடனம்

'சிலையா, சித்திரமா, பெண் தானா?' என்ற சந்தேகம் ஏற்படும்படி இமையாமல் அசையாமல் இரண்டு மூன்று நிமிஷநேரம் அப்படியே நின்றாள்.

பல்லவி

தேவாதி தேவன் கண்டீரே, ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி

தேவாதி தேவன் கண்டீரே!

என்று மோகன ராகத்தில் பாடத்தொடங்கிய பின்பு 'சிலை உயிர்பெற்றுவிட்டது! சித்திரத்திலே ஜீவ உணர்ச்சி பொங்கிப் பாட்டாக வருகிறது!' என்று தோன்றியது.

அமுதவல்லியும், ஆனந்தவல்லியும், கீதவல்லியும், வேதவல்லியும் பக்கவாதியங்களுடன் நடனராணியின் பாட்டை இன்ப அலைகளாய் அமுத அலைகளாய்ப் பொங்கிப் பரவச்செய்தனர்.

ஆம், அந்த நடனராணி ராணி பூசுந்தரிதான். ராஜஸிம்மபாண்டியனும், மந்திரி மாறங்காரியும், தளபதி வில்லியும், செல்வநம்பியும் ராணியின் சில தோழிகளும் பார்த்துக்கொண்டிருக்க, அந்தப்புரத்திலே அந்த நடனம் நடைபெறுகிறது.

அரசி நடனமாடி அரசர் பார்த்தே நீண்டகாலமாகிவிட்டது.

அறம் தழைப்ப, மெய்ஞ்ஞானம்
யாவர்களும் அறிந்து உய்ய;
மறம்தீய வேரோடு
மடிய, வஞ்சம் பாழாக

விஷ்ணுசித்தர் எழுந்தருளப்போகிறார் என்றும்,

திங்கள் வதனத்
திருஅனைய தேவகிபால்
தங்கிப் பிறந்(து), ஆயர்
தம்பால் வளர்ந்தபிரான்;
ஆராயும் வேதம்
அயர்வெய்த, அண்டர் கையில்
ஏரார் அணைகயிற்றால்
கட்டுண்ட எம்பெருமான்—

அருளால் விஷ்ணுசித்தர் வெற்றி சூடுவார் என்றும், கருத்தமைய விருத்தமும் பல்லவியும், அனுபல்லவியும், சரணங்களும் ஆனந்தமாய்ப் பாடினுள் ஆனந்தவல்லி. பூசுந்தரி அபிநயம் பிடித்தாள்.

இன்னிசைகளுக்கிடையே சங்கீத சரஸ்வதி தான் இப்படி உருவெடுத்துவந்து ஏதோ ஒரு தெய்விக பாஷையால் விஷ்ணுசித்தரை எதிர் நோக்கியிருக்கும் வெற்றியை வெளியிடுகிருளோ என்ற பிரமை ஏற்பட்டது அரசருக்கும்கூட.

அத்தகைய வெற்றிக்கு ஒரு முக்கிய காரண ரான செல்வநம்பியின் ஊரையும், பேரையும், பெருமையையும் ஆனந்தவல்லி பாடினுள்.

நாவகாரியம் சொல் இலாதவர்
நாள்தொறும் விருந்(து) ஓம்புவார்,
தேவகாரியம் செய்து, வேதம்
பயின்றுவாழ்திருக் கோட்டியூர்

என்று திருக்கோஷ்டியூரைப் பாடிவிட்டு, அந்த ஊர்ச் செல்வரான செல்வநம்பியையும், அவரைச் சேவகம் கொண்டு தமிழ்நாட்டுக்கு நன்மை செய்ய உளம்கொண்ட அவ்வூர்ப் பெருமாளையும் பாடினுள்:

நளிர்ந்தசிலன், நயாசலன்,
அபிமானதுங்கனை நாள்தொறும்
தெளிந்தசெல்வனைச் சேவகம்கொண்ட
செங்கண்மால்திருக் கோட்டியூர்

இப்பாடல்களின் கருத்தைக் கண்ணிகளாகவும் பல்லவி அனுபல்லவிகளாகவும் ஆனந்தவல்லி பாட, பூசுந்தரி அந்த இசைமயமான காற்றிலே படர்ந்ததொரு பூங்கொடிபோல் ஒரு கணம் தோன்றினுள். தோன்றி, அடுத்த கணமே 'இசைக்காற்றில் எவ்வளவு மனேஹரமாக இசைந்து இயங்குகிறது பூங்கொடி!' என்று நினைக்கும்படி ஆடத்தொடங்கினுள்.

விரைவில் பூங்கொடி மின்னற்கொடியாகி நடனம் செய்யத் தொடங்கிவிட்டது, கிண்கிணிகள் கிண்கிண் என்று ஒலிசெய்ய.

அரசனும், மந்திரி மாறங்காரியும் வில்லியும் செல்வநம்பியை நோக்கினுர்கள், 'எல்லாம் உம்முடைய பாக்கியம்தான்!' என்று சொல்வது போல. அவரோ பூசுந்தரியை நோக்கினுர், 'எல்லாம் அவளுடைய பாக்கியம்தான்!' என்று சொல்வதுபோல்,

நளிர்ந்தசிலன், நயாசலன்,
அபிமானதுங்கனை நாள்தொறும்
தெளிந்தசெல்வனை

என்று விஷ்ணுசித்தர் தம்மைப் பாராட்டியிருக்கும் பகுதியை ஆனந்தவல்லி பாடும் போதும், பூசுந்தரி அபிநயிக்கும்போதும், செல்வநம்பி வெட்கித் தலைகுனிந்திருந்தார்.

விஷ்ணுசித்தரின் வாழ்க்கைக் குறிப்புக்களையும் ஆனந்தவல்லி பாடினுள்.

தோட்டம், இல்லவள், ஆத்தொழு, ஓடை
துடவையும் கிணறும், இவையெல்லாம்
வாட்டம் இன்றிஉன் பொன்னடிக்கீழே
வளைப்பகம் வகுத்துக்கொண்டிருந்தேன்

[இல்லவள்—இல்லாள். ஆத்தொழு—பசுமாட்டுத்தொழு. துடவை—விளைநிலம். வளைப்பகம்—சூழ்ந்திருக்கும் இடம்.]

என்று விஷ்ணுசித்தர் தமது வரலாற்றைத் தாமே பாடியிருக்கும் பாட்டைப் பாடிவிட்டு, அதன் பொருளைக் கண்ணிகளாகவும் பாடினுள் ஆனந்தவல்லி.

எம்பிரான்! என்னை ஆளுடைத்தேனே!
ஏழையேன் இடரைக் களையாயே

[ஆளுடைத்தேனே— ஆட்கொண்ட தேன் போல் இனியனே.]

என்றும்,

ஒப்பிலேன் ஆகிலும் நின்னடைந்தேன்
ஆனைக்குநீ அருள் செய்தமையால்

என்றும், விஷ்ணுசித்தர் முறையிட்டுக் கொண்டதையும்,

பீதக ஆடைப் பிரானுர்
பிரமகுரு ஆகிவந்து—

அருள்செய்ததையும் தாமே பாடியிருக்கிறுர். அந்தப்பாடல்களையும் அவற்றைத் தழுவிய கண்ணிகளையும் ஆனந்தவல்லி பாட, பூசுந்தரி அபிநயித்தாள்.

நீல கமலக்கண்களில் உள்ளம் அலைவீச, விஷ்ணுசித்தரின் கடல்போன்ற பக்தியை வெளியிட முயன்றுள். மந்தமாருதத்தில் அங்குமிங்கும் அசையும் அல்லிமலர்போலக் கைகளும், விரல்களும் அசைந்து அசைந்து, விஷ்ணுசித்தரின் பிரார்த்தனையையும், பகவானின் அனுக்கிரகத்தையும் வெளியிட முயன்றனர். ஏன், பூசுந்தரியின் மேனி முழுவதும் சலனங்களாலும், பாவங்களாலும் விஷ்ணுசித்தரின் பெருமையைப்பேசுவதுபோலத் தோன்றியது.

'என்ன பக்திரஸம்! என்ன கவிதாரஸம்!' என்று பாராட்டினுர் செல்வநம்பி. அந்த அபாரமான கற்பனைத்திறன், அமைச்சர் மாறங்காரியையும் சேனுபதி வில்லியையும் ஆச்சரியக்கடலில் ஆழ்த்திவிட்டது. அரசனும் தன் மனைவி நடிக்கிருள் என்பதை மறந்து, அந்த நடனத்தையும் மறந்து, விஷ்ணு

சித்தரின் பக்திமயமான மனோலோகத்தில் சஞ்சரிப்பதுபோல ஒரு பிரமையை அடைந்து தன்னையும் மறந்திருந்தான்.

பூசுந்தரி தானும் பாடிக்கொண்டே ஆடி வரும்போது தன்னையும் மறந்ததுபோல் ஆடத் தொடங்கினாள்.

மார்வம் என்பதோர் கோயில் அமைத்து,
மாதவன் என்னும் தெய்வத்தை நாட்டி,
ஆர்வம் என்பதோர் பூவிடவல்லார்

[மார்வம்–மார்பு.]

என்று விஷ்ணுசித்தரின் ஒப்பற்ற பக்தியைப் பாடினாள். பிறகு,

பொன்னைக்கொண்டு உரைகல்மீதே
நிறம்எழ உரைத்தாற்போல்,
உன்னைக்கொண்டு என் நா அகம்பால்
மாற்(று)இன்றி உரைத்துக்கொண்டேன்,
உன்னைக்கொண்டு என்னுள் வைத்தேன்,
என்னையும் உன்னில் இட்டேன்!
என் அப்பா!...............

என்று,அப்பால்பாடமுடியாமல் உணர்ச்சியிலே தன்னை முழுக்க இழந்து ஆடலானாள். அரசன், மந்திரி, தளபதி, புரோகிதர் ஆகிய இவர்களின் உள்ளமும் ஏதோ ஒரு அதிசய லோகத்தில் கூத்தாடுவது போலத் தோன்றியது.

அப்பால் யசோதை வளர்த்த பிள்ளையை விஷ்ணுசித்தரும் வளர்த்துவிட்ட அதிசயத்தை அவர் பாடல்களைக் கொண்டே மெய்ப்பித்துக் காட்டி சோகம் சிங்காரம், ஆச்சரியம் முதலான பாவங்களை, மோகனமாய் மிளிர்ந்த கண்களிலும், மாறி மாறி வந்த முக பாவங்களிலும், சுடர்போல் ஜொலித்த மேனியின் அசைவுகளிலும் பிரதிபலிக்கச் செய்தாள் பூசுந்தரி. வீணாகானம்போலக் கொஞ்சிய குரல் பாவனைகளுக்கு இசைந்தபடியெல்லாம் உதவி வந்தது.

‘இப்படித் தொடர்ச்சியாக விஷ்ணுசித்தரின் பாடல்களுக்கு அபிநயம் பிடித்து ஆடிக் கடைசியாக மங்களம் பாடி முடித்தாள்.

ஆதிமாதவ வீரர்க்கு மங்களம்,
அச்சுதர்அவ தாரர்க்கு மங்களம்
வேதவேதராம் சிலர்க்கு மங்களம்,
விஷ்ணுசித்த சுவாமிக்கு மங்களம்

என்று மங்களம் பாடியபின்,

மாதுதாமரைப் பெண்ணுக்கு மங்களம்
மதுரைமன்னர்க்கு மங்களம் மங்களம்

என்று முடிவுரை பாடி நிறுத்தினாள்.

நாட்டியம் முடிந்த பின்புதான், கண்ணன் வளர்ந்த கோகுலத்திலும், விஷ்ணுசித்தரின் மனோலோகத்திலும் சஞ்சரித்துக் கொண்டிருந்த உள்ளங்கள் மீண்டு வந்ததாகத் தோன்றியது,அந்த நாலு ரஸிகர்களுக்கும். ‘அம்மா! நீ மதுரை மகாராணி மட்டும் இல்லை, கலையுலகத்திற்கும் மகாராணிதான்!’ என்றார் செல்வநம்பி. மந்திரி மாறங்காரி அரசரை நோக்கி, ‘மகாராணி விஷ்ணுசித்தரை அவருடைய ஆனந்தப் பூங்காவனத்திலே பார்த்து மீண்டதால், இந்த நாட்டியக்கலை இப்படி ஒரு

புதிய சோபையும் பெற்றிருக்கிறதோ? மகாராஜாவே! உம்முடைய லட்சியக்கனவு நிறைவேறுவது நிச்சயம்' என்றார். தளபதிவில்லி, 'இப்படிப் பட்ட நடன சூட்சுமங்களை நான் இதற்கு முன் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை. நவரஸபாவங்களும் எல்லாவற்றுக்கும் மேலாகப் பக்திக் காதலும் எவ்வளவு அற்புதமாகக் காட்டப் பெற்றன!' என்றான்.

பிறகு செல்வநம்பி அரசனை நோக்கி அதிசயத்துடன், 'மகாராணி ஸ்ரீ வில்லிபுத்தூருக்குப் போய் வந்தாளா?' என்று கேட்டார்.

அதற்கு அரசன், 'அது எனக்கும் அதிசயமாகத்தான் இருந்தது. நான் ஸ்ரீவில்லிபுத்தூரில் பார்த்ததும் திகைத்துப்போனேன்' என்று பதில் சொல்லிவிட்டு, அரசி கோபிகை வேடத்தில் வில்லிபுத்தூருக்குப்போய் விஷ்ணு சித்தரைத் தரிசனம் செய்து, அவருடைய தேவிக்கும் பணி செய்து வந்ததைச் செல்வநம்பிக்கு உத்ஸாகமாய்த் தெரிவித்தான்.

'அப்படியானால் தாங்களும் அங்கே போயிருந்தீர்களோ, ராஜதூதனோடு? மிகவும் சந்தோஷம்' என்றார் செல்வநம்பி.

'அடியேன் ராஜதூதனாகவே போயிருந்தேன்' என்று அரசன் பதில் சொன்னதும், அந்தப் பிரேமையை அறிந்துகொண்ட செல்வநம்பிக்கு மகிழ்ச்சி கடல்போலப் பொங்கிவிட்டது. 'அரசே! ஸ்ரீ கிருஷ்ணபகவான் தங்கள் மீது கடாட்சம் வைப்பது நிச்சயம். விஷ்ணுசித்தருக்கு வெற்றி எவ்வளவு நிச்சயமோ, அவ்வளவு நிச்சயமாகத் தங்களுக்கு அமைதியும் ஆறுதலும், ஆனந்தமும் ஏற்படப்போகின்றன' என்று சொல்லிக்கொண்டே ஆசனத்திலிருந்து எழுந்து நின்றார் செல்வநம்பி.

நடுநிசியாகிவிட்டது என்பதற்கு அறிகுறியாக அரண்மனை-மணி முழங்கிற்று, 'நேரமானதே தெரியவில்லையே; எத்தனை நாழிகைகள் நிமிஷங்கள்போலக் கழிந்து விட்டன!' என்று சொல்லிக்கொண்டே மந்திரி மாறங்காரியும் எழுந்தார். இவர்களோடு வில்லியும் அரசனிடம் விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டான்.

நாளை இரகசிய மந்திராலோசனை-மண்டபத்தில் சந்திக்க வசதிதானா?' என்று அரசன் செல்வநம்பியைக் கேட்க, அவர், 'ஆஹா, அப்படியே செய்யலாம். விஷ்ணுசித்தர் எப்போது வரக்கூடும் என்று தெரியுமா?' என்று கேட்டார். அரசன் அவருடன் பேசிக்கொண்டே வந்தான்.

'அப்பெரியார் திருமாலிருஞ்சோலை போய்ச் சில தினங்கள் தங்கிவருவார் என்று தகவல்





கிடைத்திருக்கிறது' என்று அரசன் பதில் சொல்லும்போது, நால்வரும் அந்தப்புரத்திற்கு வெளியே சிங்காரப் பூங்காவனத்திற்குள் வந்து விட்டார்கள்.

சந்திரன் தலைக்கு மேலே ஒளிர்ந்தது. நிலவு அதிக வெளிச்சமாயில்லை; இருள் கலந்த மங்கிய ஒளியாகவே இருந்தது. பூமரங்களின் உச்சிகள் அந்த வெளிச்சத்தில் மின்னிக்கொண்டும், காற்றில் சலசலவென்று அசைந்துகொண்டும் இருந்தன. அவற்றின் இருண்ட சாயை அவர்கள் போகும் வழியில் இடையிடையே விழுந்து அசைந்துகொண்டிருந்தது,

'வாழ்க்கைப்பாதையும் இப்படித்தான். இருளும் ஒளியும் கலந்ததாக இருக்கிறது. தெய்வ அருளை நம்பியவண்ணம் நடந்து செல்லவேண்டும். விஷ்ணுசித்தரைப்போன்ற குருவே சரியான வழிகாட்டி' என்றார் செல்வநம்பி.

அவர்கள் நால்வரும் பூங்காவனத்தின் ஒரு வாசல் கதவை அடைந்தார்கள். அங்கே உஷாராய் அம்புகோத்த வில்லுடன் நின்றுகொண்டிருந்த காவற்காரன், 'யார்?' என்று அதட்டினான். அரசன் ஒரு சமிக்ஞை செய்ய, அவன் பிறகு ஒரு பேச்சும் பேசாமல், யாதொரு சத்தமும் செய்யாமல், அப்படியே சிலைபோல நின்றுவிட்டான். அரசன் வேறொரு சைகை செய்ததும், கன்னங்கரேல் என்றிருந்த தாடியும் மீசையுமாக நின்ற அக்காவலாளி அந்த வாசற் கதவைத் திறந்தான்.

பூங்காவனத்திற்கு வெளியே நால்வரும் கொஞ்ச நேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். வில்லிபுத்தூர்க் கோயில்-பட்டரான ஞானப்பிரானுக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறதென்று செல்வநம்பி சொல்லி, தாம் மதுரைக்குப் புறப்படுவதற்குமுன் கோஷ்டியூரில் நடந்ததைச் சுருக்கமாக அரசனிடம் தெரிவித்தார்.

'ஞானப்பிரானுக்குபைத்தியமா? ஞானப்பைத்தியமாகத்தான் இருக்கும்!' என்றான் அரசன்.

'கண்ணன் நடனமாடிய காளியன் தன்னைத் துரத்தி வருவதாக ஒரு பிரமை இடையிடையே ஏற்படுகிறது. அந்தப்பயம் அதிகரிக்கும்போது ஓட்டம் பிடிக்கிறாராம். என் கதா காலட்சேபத்தைக் கேட்பதற்கு அவரும் அவருடைய தேவியும் வந்திருந்தார்கள். நான் காளிய நடனம் என்ற கிருஷ்ண லீலையைப்பிரஸ்தாபித்ததும் அவர் ஓட்டம் பிடித்தார். ஜனங்களில் சிலர் துரத்திப்பிடித்து அவரை என்னிடம் கொண்டுவந்தார்கள். நான் "கிருஷ்ணபக்தியால் தீராத நோயும் தீர்ந்துபோகும்; உம்முடைய மனநோயை நீரே தீர்த்துக் கொள்ளலாம்" என்றேன். அவர் முகம் மலர்ந்தது. ஆனால் காளிய நடன லீலையின் உட்பொருளைச் சொல்லி நான் ஆறுதல் அளிக்க முயன்றதும், அவர் பயந்து கூச்சலிட்டுக்கொண்டு, வழி மறித்தவர்களையும் திமிறிக்கொண்டு, ஒரே ஓட்டமாய் ஓடிப்போய் விட்டார். அவர் மனைவியாருக்கு ஆறுதல் சொல்லி அவரைத் தேடவும் ஆள் அனுப்பி விட்டு இங்கே புறப்பட்டு வந்தேன் என்றார் செல்வநம்பி.

'விஷ்ணுசித்தரின் அருளால் என்மனநோய் தீர்ந்துபோவதோடு ஞானப்பிரானின் மனநோயும் தீர்ந்துபோகும். விஷ்ணுசித்தருக்கு ஞானப்பிரான்மீது விசேஷ அபிமானம் உண்டென்பது எனக்குத்தெரியும். அன்று நான் சமர்ப்பித்த பரிசுகளையெல்லாம் விஷ்ணுசித்தர் ஞானப்பிரானுக்கே வழங்கிவிட்டார்' என்றான் அரசன்.

அப்போது மாறங்காரி அரசனை நோக்கி, 'விஷ்ணுசித்தர் துரோகிகளையும் மன்னித்து அவர்களுக்கும் அருள் செய்வார். ஞானப்பிரானின் நோயும் தீர்ந்துபோகும் என்பதுதான் என் நம்பிக்கையும்' என்றார்.

செல்வநம்பியும், அரசனும் மந்திரி மர்மமாகச் சொன்ன விஷயத்தை விவரமாக அறிந்துகொள்ள விரும்பினார்கள். ஆனால் மந்திரி 'இரவு வெகு நேரமாகிவிட்டது. இதுவும் நமது

இரகசிய மந்திராலோசனையில் பேசிக்கொள்ள வேண்டிய விஷயம்தான். ஆனால் இது சாமானியத் துரோகம்தான். பௌத்தபிட்சுவின் பெருந்துரோகத்தைக் குறித்தும் அப்போது பேசிக்கொள்ளலாம்' என்று சொல்லிவிட்டு, சிறிதுதூரத்தில் 'சிறு மரமோ மனிதன் தானா?' என்று சந்தேகிக்கும்படி நின்றுகொண்டிருந்த ஓர் உருவத்தை நோக்கிச் சைகை காட்டி 'மனக்கிலேசம்' என்று உரக்கச் சொன்னார். 'காயக்கிலேசம்' என்று உடனே பதில் வந்தது.

அப்போதுதான் அரசனும், செல்வநம்பியும் வில்லியும் அந்தத் திசையை நோக்கினார்கள். அந்த உருவம் பளிச்சென்று பதில் சொல்லி அசைந்து கொடுத்து, 'நான் மரமல்ல, மரம் போன்ற மனிதனுமல்ல!' என்று ருசுப்படுத்துவதுபோல் விரைந்து வந்து, இந்நால்வரும் நின்றுகொண்டிருந்த இடத்திற்கு அருகே, வெகு வினயமாக நின்றது. மொட்டைத்தலையும் காவியாடையுமாக இருந்த அந்த ஆசாமியைப் பார்த்ததும் அரசன், 'யார் இந்தப் பிட்சு?' என்று கேட்டான். செல்வநம்பியும் 'இப்படி ஒரு பௌத்த பிட்சுவைச் சிநேகம் பண்ணிக் கொண்டிருக்கிறாரா நமது அமைச்சர்?' என்று திகைத்தார்.

மாறங்காரி சிரித்துக்கொண்டே, "காயக் கிலேசம்" என்ற இந்தப் பிட்சுவின் உடம்பைக் கவனித்துப் பாருங்கள் என்றார். அந்த மங்கிய நிலவொளியிலும் 'ஆசாமி வலிமையும் உறுதியும் வனப்பும் வாய்ந்த தேகக்கட்டுள்ளவன்' என்று தெளிவாகத் தெரிந்தது. அவன் பூசியிருந்த சந்தனப் பூச்சும் அந்த உடம்பில் சோபையுடன் திகழ்ந்தது.

அரசனுக்கும், செல்வநம்பிக்கும் அதிசயம் அதிகரித்தது. 'இது என்ன அக்கிரமம்—அரையிலே காவியும் நெஞ்சிலே சந்தனமும்? கபட சந்யாசி! இதுதான் பௌத்த தருமமோ?' என்று கேட்டான் அரசன்.

'என்ன, காயக்கிலேசம்? ஏன் இந்த அக்கிரமம்? சொல்லு' என்று அதட்டுவதுபோல் கேட்டான் அமைச்சரும். அதற்கு அவன் பதில் சொன்னான்: 'மொட்டைத் தலையும் முழுக் காவியுமாய் எதிர்ப்பட்டால் அபசகுனம் என்று ஜனங்கள் மனக்கிலேசம் அடைவார்களே! அதற்காகத்தான் காயக்கிலேசம் இந்தக் கட்டைமீது சந்தனம் பூசிக்கொண்டிருக்கிறது! வழியிலே ஒரு பெருமாள் கோவிலில் கிடைத்த பிரசாதம்—மறுக்கலாமா என்றுதான் அந்தச் சந்தனத்தைப் பூசிக்கொண்டேன். "உடம்பிலே பூசிக்கொள்ள நல்ல சந்தனமும் தந்து, உயிரையும் மனமும் தூய்மையும் பெறச் செய்கிறான் பகவான்!' என்று விஷ்ணுசித்தர் சொல்லக் கேட்டிருக்கிறேன். தப்பிதம் செய்திருந்தால் தயவுசெய்து மன்னித்தருளவேணும்."

'இவர் தனியாக இருக்கிறாரே எவ்வளவு நல்ல இனிமையான ஞானம் பேசுகிறார்!' என்றான் அரசன்.

'பாகவதரே! உம்மை நமஸ்கரிக்கிறேன்' என்றார் செல்வநம்பி.

மந்திரி செல்வநம்பியை நோக்கி, 'இவன் தங்கள் அடியவர்களில் ஒருவன். இவனை நாளை நமது மந்திராலோசனையில் முக்கியமான சாட்சியாக உதவப்போகிறான்' என்று சொல்லிவிட்டு, 'எவ்வளவோ நேரமாகி விட்டதே!' என்றார். அப்பால் மந்திரியும் புரோகிதரும் வில்லியும் அந்தப் புதியவனையும் அழைத்துக்கொண்டு புறப்பட்டார்கள்.

* * * * *

அரசன் திரும்பி அந்தப்புரத்திற்கு வரும் வழியில் அரசி ஆச்சரியமாக நடனமாடினாள். களைத்துப்போய் உறங்கிக்கொண்டிருப்பாள் என்று எண்ணியிருந்தான். ஆனால் ராணி இவன் திரும்பிவரும்வரை விழித்துக்கொண்டுதான் இருந்தாள். அரசன் அளவற்ற ஆனந்தத்துடன் அரசியை அணைத்து முத்தமிட்டுக்கொண்டு பாண்டிய அரசாட்சியின் முக்கிய அறிகுறியான முத்துமாலையைத் தன் கழுத்திலிருந்து எடுத்து அவள் கழுத்தில் அணிந்தான். அணிந்து, 'இனி இந்நாட்டுக்கு அரசன் வேண்டாம், அரசியே போதும்! நான் இனி விஷ்ணுசித்தரின் அடியவர் கூட்டத்தைச் சேர்ந்து தொண்டாற்றுவேன் என்றான்.

அந்தத் தூய அன்பையும்.பக்தியையும் காதலையும் கண்ட அரசியும் மனமுருகி அரசன் முகம் நோக்கி 'உங்களுடைய அன்புமாலையை என் அகம் அணிந்து இன்புற்றிருக்க இந்த முத்து மாலையால் எனக்கு என்னபயன்? இல்லாத பெருமை இனி வந்து விடப்போகிறதோ? தங்கள் கழுத்தை அலங்கரிக்கப்போகும் துளசி மணிமாலை என் கழுத்திற்கும் அழகு தராது என்றா நினைக்கிறீர்கள்? இன்னும் என்னை நீங்கள் தெரிந்துகொள்ளவில்லையா? இதுதானா மெய்யன்பு? 'என்றான்' தழுதழுத்த குரலில்.

அரசனோ பதில் சொல்லத் தெரியாமல் அந்த ஆனந்த பரவசத்திலே கண்களை இறுக மூடிக்கொண்டான். 'காதல்-உலகத்திலே என்னை ஆண்டு வந்த மங்கை பக்தியுலகிலும் என்னை ஆளப்பிறந்தவள் தான்!' என்ற எண்ணத்துடன் அப்படியே உறங்கிப்போய்விட்டான். அவளும், 'அரசனின் இதய அரங்கிலே முடிவில்லாத நடனம் புரியும் பாக்கியத்தை நான் ஒருபோதும் இழக்கமாட்டேன். இத்தகைய அரசன் முடிதுறந்தாலும் அரசு போய்விடுமா? குருவின் அடிமலர்களை முடிமலராகக்கொண்டு அடியவர் கூட்டத்திலும் அரசு பெறக்கூடியவர் அல்லவா?' என்ற எண்ணங்களுக்கிடையே, நித்திரையில் ஆழ்ந்தாள்.

(தொடரும்)



சமீபத்தில் லண்டனில் கப்பல் தொழிலாளர் வேலை நிறுத்தம் நடந்ததல்லவா? 15,000-பேர் வேலை செய்யவில்லை. இதனால், உலகிலேயே மிகப் பெரியதான லண்டன் துறைமுகம் சோபையின்றி சுணங்கிப்போயிற்று. 11-பேர்களை சஸ்பெண்டுசெய்ததால் இவ் வேலைநிறுத்தமேற்பட்டது. வேலை நிறுத்தத்தால் பாதிக்கப்பட்டு நின்ற கப்பல்களையும், துறைமுகத்தையும் விமானத்திலிருந்து எடுக்கப்பட்ட படம்.

இந்தியாவில் மதுவிலக்கு அமுல் நடப்பதுபோலவே கஞ்சா விலக்கும் சீனவில் நடக்கிறது. சமீபத்தில் ஷாங்கேயில் கஞ்சா, அதை வைத்து ஊதும் ''கைக்குழாய் பெட்டிகள் முதலியன போலீசாரால் திரட்டிக் குவிக்கப்பட்டு பெரிய ஹோமம்போலத் தீயிட்டுக் கொளுத்தப்பட்டது. இது கஞ்சாவை ஒழிக்கும் தினத்தன்று நடந்தது.

மூனிச்சில் சர்வதேச இளைஞர்கள் மகாநாடு நடந்தது. இதில் 21 தேசங்கள் கலந்து கொண்டன. இந்தியாவிலிருந்தும் பிரதிநிதிகள் போயிருந்தனர். மகாநாட்டு முகாமுக்கு வெளியே இந்திய இளைஞர்கள் ஜெர்மானிய நண்பர்களோடு உல்லாசமாகப்பேசி விளையாடிக்கொண்டிருந்தபோது எடுத்த படம்.

இலங்கையிலிருந்து சென்ற ஒலிம்பிக் ஆட்டக் கோஷ்டி, ரிச்மண்ட் பார்க்குக்குச் சென்றபோது தங்களுடைய சாப்பாட்டை கூடவே எடுத்துச்சென்றனர். உணவு வகையில் தேங்காய்களும் உண்டு. படத்தில் நடுவேயிருப்பவர் பையில் அவற்றைக் காணலாம்.

உங்கள் மாத பலன்



மேஷ ராசி

(அசுவனி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)

இந்த ராசிக்காரர்களுக்கு இம்மாதம் முக்கியமாகத் தென்படும் குறைபாடுகள் தேக ஆரோக்கியம், குடும்ப விஷயம், வியாபாரம் அல்லது உத்தியோகம் இவற்றைப் பொறுத்ததாயிருக்கும். அவற்றில் திருப்திகரமான நிலைமை இல்லாமலிருப்பதாகும். லக்னாதிபதியான செவ்வாய் 6-வது இடத்தில் இருப்பதால் எதிர்பாராத விதமாக ஆகஸ்ட் முற்பகுதியில் வயிற்றுக்கோளாறுகள் ஏற்படுமெனக் காண்கிறது. மற்றும் சிலருக்கு இந்த கிரஹ அமைப்பு உத்தியோகத்தில் கோளாறுகள் ஏற்ப்டுமென்பதை அல்லது விரோதமான சூழ்நிலைமை ஏற்படுமென்பதைக் குறிக்கலாம். முடை ஏற்பட்டு அவசரத்துக்காகப் பணம் கைமாற்று வாங்க நேரிடும். சனி ஸிம்மத்துக்குப் போகும் தருணம் இது. எனவே வியாபாரிகளானால் அவர்களது வாழ்க்கை மனோ பாவம் மாறுதல் அடையும். ஊழியர்களானால் வேலையில் மாறுதலோ அல்லது உத்தியோக மாற்றமோ ஏற்படும். 8-வது இடத்தில் குரு இருப்பதால் அதிகாரிகளின் ஆதரவு சுலபமாகக் கிட்டாது. ஏமாற்றம் ரொம்பக் கடுமையாயிருக்குமென்று சொல்வதற்கில்லையென்றாலும் உத்தியோகத்தில் அனுகூலங்கள் எதுவுமிராது. உறவினர்களுடன் கொஞ்சநாட்களுக்கு சௌஜன்யமாயிருக்க முடியாது. தூர இடத்துக்குக் கடிதப் போக்குவரத்து நடத்துவதால் சந்தோஷகரமான உறவு ஏற்படும். வியாபாரிகள் எதிர்கால வியாபாரத்தைப் பொறுத்து திட்டமான மனமாறுதலைக் காண்பர். குழந்தைகளுடைய விஷயங்கள் நன்கு நடந்துவரும். மனைவியின் தேக சுகம் பாதிக்கப்படும். முக்கியமாக வியாபாரத்திலுள்ளவர்களுக்குக் கடிதப் போக்குவரத்து லாபகரமாயிருக்கும். பழைய வியாபார வாடிக்கைக்காரர்களின் ஆதரவு கிட்டும்.

ஜூலை 18, 23, 26, 27, 28, ஆகஸ்ட் 2, 3, 5, 9, 11, 13 தேதிகள் இவர்களுக்கு அதிர்ஷ்டத்தைத் தரும் தினங்கள்.

விருஷப ராசி

(கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோஹிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் முடிய)

விருஷப ராசிக்காரர்கள் இந்த மாதத்தில் குறைப்படவே இடமில்லை. பெரிய கிரஹங்களெல்லாம் நல்லிடம் பெற்றிருக்கின்றன. இந்த நிலைமை வாழ்க்கையை உல்லாஸமாகவும், சுலபமாகவும் நடத்துவதற்கு உதவிகரமாகும். உறவினர்கள், சகபாடிகள், முதலாளிகள் ஆகிய அனைவரும் இந்த ராசிக்காரர்களிடம் பரிவுகொண்டு நல்லுணர்ச்சியோடு நடந்துகொள்வார்கள். இவர்களது கவர்ச்சிகரமான குண, உரு விசேஷங்கள் உச்சத்தை அடைந்து அனுகூலத்தைத் தரும். பண விவகாரங்கள் எல்லாம் முதல் பகுதியில் எவ்வித சிக்கலுமில்லாமல் சுலபமாயிருக்கும்; இரண்டாம் பகுதியில் இந்த நிலைமை குழப்பமடையும். ஆனால் இதற்காக கலங்கக்கூடாது. விரைவில் நிலைமை சீர்படும். செவ்வாய், சனி இவர்களிருக்கை காரணமாக எதிர் பார்ப்பதற்கதிகமாகச் செலவேற்படும். ஜூலை கடைசீ வாரத்திலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக சுபிட்சத்தைத்தரும் வகையில் அபிவிருத்திபெறும். முதல் பகுதியிலேயே பண சகாயங்கள் கிட்டும். இந்த ராசிக்காரர்களுக்கோ அல்லது அவர்களது மனைவிக்கோ தேகசுகம் திருப்திகரமாயிராது. இரண்டாம் பகுதியில் குழந்தைகளின் ஆரோக்கியம் பாதிக்கப்பட்டு அதனால் கவலைகள் ஏற்படும். நிரந்தரமான முறையில் குடும்பத்தில் சில்லரையான மாறுதல்களேற்படும். வயோதிகர்களானால் கடன்களைத் தீர்ப்பர். இளைஞர்களாயின் ஆடம்பரத்தை உத்தேசித்துக் கடன் வாங்குவர். சில சிநேகத் தொடர்புகளும், பண விவகாரங்களும் பிணைந்து புதிய சம்பவங்கள் நிகழும் மாதமிது. வியாபாரிகளு

1948-ம் ஞு ஜூலை மாதம் 16வ முதல் ஆகஸ்ட் மாதம் 16வ வரையில் பொதுவாக ஒவ்வொரு ராசிக்காரர்களுக்கும் பலன்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ராசியைத் தெரிந்துகொள்வதற்குதவியாக நட்சத்திரங்களும், பாதங்களும் பக்கத்திலேயே கொடுக்கப்பட்டிருக்கின்றன.

க்கு நல்லகாலம். பழயவாடிக்கைக் காரர்களுடன் திரும்பவும் வியாபாரத்தை நடத்துவது லாபத்தைத்தரும். கூட்டுவியாபாரத்தில் சில்லரை மாறுதலேற்படலாம்.

ஜூலை 18, 23, 28, ஆகஸ்ட் 2, 8, 9, 10, 14 தேதிகள் இவர்களுக்கு நலம் தரும் நாட்கள்.

மிதுன ராசி

(மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர்வஸு 3-ம் பாதம் முடிய.)

இந்தமாதம் 26-ந்தேதியோடு இந்த ராசிக்காரர்களின் 7½ நாட்டு கோசர சனியின் கட்டம் தீர்ந்து போகிறது. இதிலிருந்து இந்த ராசிக்காரர்களின் அலுவல்களெல்லாம், எந்தத்துறையிலாயினும் சரி சுலபமாக நடைபெறும். உத்தியோகத்தில் விசேஷ அனுகூலமுண்டு. ஸிம்மராசிவழியாகச் சனி செல்லும் கட்டமான 2½ வருஷகாலம்வரையிலும் மேலதிகாரிகளின் ஆதரவு தொடர்ந்திருந்துவரும். சகோதரர்கள் விவகாரங்களைப் பற்றிக் கவலைப்படும்படி இருக்கும். கட்டுக்கு மீறி செலவு தலைக்கு மேல் போய்விடும். உபநயனம், கல்யாணம் போன்ற சுபவைபவங்கள் நிகழும். குடும்பவாழ்க்கை கவலையைத் தருவதாயிருக்கும். எந்தவிதமான உதவிக்கும் நண்பர்களை நம்பவேண்டாம். அவர்கள் விசுவாசமாக நடந்துகொள்ளமாட்டார்கள். ஜூலை 26, ஆகஸ்ட் 9-ந்தேதி வாக்கில் பண விஷயத்தில் அநுகூலமேற்படும். ஆகஸ்ட் 9-ந்தேதியில் ஏதேனும் கஷ்டங்கள் ஏற்படலாம். ஆகஸ்ட் 5-ந்தேதி வாக்கில் எதிர்பாராத விதமாக மனசுணக்கம் ஏற்படக்கூடும். வெற்றி வருமென எதிர்பார்ப்பது அபஜெயமாகிவிடும். கீழ் ஜாதி நபர்களால் பண லாபம் கிடைக்க வழி உண்டு. சிலர் உல்லாஸத்துக்காகப் பணத்தைச் செலவிடநேரும். எதிர்பாராத பிரயாணம் ஒன்று சம்பவிக்கும். கோர்ட் விவகாரங்களில் வெற்றி கிட்டாது. வியாபாரம் இந்த சமயத்தில் தரமாயிராது.

ஜூலை 17, 18, 20, 27, 28, ஆகஸ்ட் 1, 3, 8, 11, 13, தேதிகள் இவர்களுக்கு வசதிதரும் நாட்கள்.

கடக ராசி

(புனர்வஸு கடைசி பாதம் முதல் புஷ்யம், ஆயில்யம் முடிய)

இந்த மாதத்தில் இந்த ராசிக்காரர்களுக்கு உத்தியோக, குடும்ப விவகாரங்களால் மனநிம்மதியிராதென்பதைக் கிரஹங்களின் நிலைமை குறிப்பிடுகிறது. பண விஷயத்தில் கொஞ்சம் அபிவிருத்தி உண்டு. செவ்வாய் 3-வது இடத்தில் இருப்பதால் குளிர்ந்த இடமொன்றுக்கு மாறிப் போக இடமுண்டு. இல்லையானால் வேலையில் மாறுதலாவது ஏற்படும். இதே செவ்வாயினால் தேகசுகமும் பாதிக்கப்படும். வயிற்றுக்கோளாறால் வருந்த நேரும். சூழ்நிலைமை சுமுகமாயிராது. எனவே பொறுமையோடிருக்கமுடியாது. இருப்பினும் இதனால் அதிகக்கஷ்டமேற்படாது 12-வது இடத்திலுள்ள கிரஹங்கள், சுற்றியிருப்பவர்களால் கவலைகளேற்படுமென்பதைக் குறிக்கின்றன. இரண்டாம் பகுதி பரவாயில்லை. நல்ல காரியங்களுக்காகச் செய்யும் செலவுகள் அதிகரிக்கும். தஸ்தாவேஜுகளாலோ, கடிதங்களாலோ தவிர்க்கமுடியாத கவலைகள் ஏற்படும். சிலருக்கு தூரதேசப்பிரயாணம் ஏற்படலாம். நண்பர்கள், உறவினர்கள் இவர்களை மனதுக்குப் பிடித்தமில்லாதபோதிலும் கண்யமாயும், அன்போடும் நடத்தவேண்டும். தொலைவிலுள்ள குமாரர்களிடமிருந்து நல்ல சேதி வரும். வியாபாரிகள் தங்களுடைய பெரிய பேரங்களை சுத்தமாக வைத்துக் கொள்ளவேண்டும். ஏனெனில் இதில் சங்கடங்களுக்கு இடமுண்டு. விரோதமாயிருப்பவர்களிடமிருந்தும் உதவி கிட்டும்.

ஜூலை 18, 23, 26, 28 ஆகஸ்ட் 2, 3, 9, 10, 14 தேதிகள் இவர்களுக்கு ஏற்றவை.

ஸிம்ம ராசி

(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய.)

இந்த ராசிக்காரர்களுடைய கிரஹ நிலைமை ஒரே சீராக இல்லை. லக்னத்திலும் அதைச் சுற்றியும் பாபக்கிரஹங்களிருக்கின்றன. 4, 11-ல் சுபக்கிரஹங்கள். எனவே பலன்கள் கலந்து கட்டியாகவே இருக்கும். எந்தவிதமான முக்கியத்வமுமின்றி சாதாரணமான நிலைமையிலேயே நிலைமை இருந்து வரும். இருப்பினும் இரண்டாம் பகுதியைவிட முதல் பகுதி பண விஷயத்துக்கு ஓரளவு அனுகூலம். காரியாலயத்தில் உபாயமாக வேலையில் மாறுதல் ஏற்படும். முதல் பகுதியில் நண்பர்கள் ரொம்ப உதவிகரமாயிருப்பர். ஆயினும் மன நிம்மதியிராது. சூழ்நிலைமை, உத்தியோகம், குடும்பம் ஆகிய இரு துறைகளும் கஷ்டத்தை உண்டுபண்ணுவதாக ஒருவித பயமிருந்து வரும். செலவைக் கட்டுப்படுத்த முடியாது. சொத்து அல்லது வீட்டுப் பிரச்னையையொட்டி இரண்டாம் பகுதியில் சிலருக்குப் பிரயாணம் நேரலாம். மனைவியின் சுகவீனத்தால் குடும்

1948-ம் வருஷம் ஜூலை 16-ந்தேதியுள்ள கிரஹ நிலை

	ராகு		உரானஸ் சுக்கிரன் புதன்
			சூரியன் சனி
	சந்திரன் குரு	கேது	நெப்டியூன் செவ்வாய்

பத்தில், சந்தோஷமாயிருக்க முடியாது. முக்கியமான செலவுகளுக்காக சிலருக்குக் கடன் வாங்க நேரிடும். வீடு கட்டுவதுபற்றியோ, அல்லது ஜாகையைப்பற்றியோ சிரத்தை கொள்ள நேரிடும். இவற்றில் சர்வஜாக்கிரதையாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் வருந்த நேரும். வியாபாரிகளுக்கு முதல் பகுதி சரியாயிருக்கும். பழைய வியாபாரமும், பழைய வாடிக்கைக்காரர்களும் வியாபார வாழ்வில் மனதிற்கு உவப்பாகத்தோன்றும். கடன் வாங்குவதோ, கொடுப்பதோ இம்மாதத்தில் வைத்துக்கொள்ளாமல் ஒத்திவைக்கவேண்டும். ஆகஸ்ட் 5, 9–ந்தேதி வாக்கில் எந்தவிதமான நடவடிக்கையும் லாபகரமாயிராது.

ஜூலை 21, 24, 26, 28, 31, ஆகஸ்ட், 1, 3, 9, 13 தேதிகள் இவர்களுக்கு அனுகூலம்.

கன்யா ராசி

(உத்திரம் 2-ம் பாதம் முதல் ஹஸ்தம், சித்திரை 2-ம் பாதம் முடிய.)

இந்த ராசிக்காரர்களின் சுபிட்சத்துக்கு உதவிகரமாக பெரிய கிரஹங்கள் இம்மாதம் அமையவில்லை. ஏதேனும் கவலைப்படும்படி தேகசுகம் அடிக்கடி கெடும். எதிர்பாராத இனங்களுக்காக வெல்லாம் செலவேற்பட்டு கட்டுப்படுத்த முடியாமற் போகும். உறவினர்களால் அனாவசியமான கவலைகளேற்படும். கொஞ்சகாலம் வரையில் தூர பந்துக்கள் சொல்லும் அவதூறான வதந்திகளால் மன அமைதி பங்கமடையும். சகோதரர்கள் அல்லது சகோதரிகள் விவகாரங்களில் அனாவசியமாகத் தலையிட்டு சிரத்தை செலுத்த நேரிடும். இடவசதியைப் பொறுத்து ஏதாவது கவலைகளேற்படும். பண விஷயத்தில் ஏமாற்றங்களிராது. கடன் வாங்குவதோ, கொடுப்பதோ இத்தருணத்தில் கூடாது. பழைய பாக்கியை வசூலிப்பது கஷ்டம். அளவுக்கதிகமாக காலதாமதம் ஏற்படும். சில இனங்களில் பாக்கியை வாராக்கடன் என்று கருதி கைவிடவும் நேரலாம். இம்மாத நிகழ்ச்சிகளோடு ஒரு பிரயாணமும் நேரலாம். குழந்தைகளால் கவலை உண்டு. குடும்பத்திலும், வெளியிலும் தகராறு வைத்துக்கொள்ளக்கூடாது. சனி, ராகு, செவ்வாய் தசை நடப்பிலுள்ளவர்களானால் இம்மாதம் கஷ்டப்படுவர். உறவினரில் யாரேனும் காலமாவார். மனைவியின் தேகசுகம் அடிக்கடி பாதிக்கப்படும். வியாபாரிகளுக்கு இந்த சந்தர்ப்பம் ஏற்றதல்ல. செல்வாக்குள்ளவர்களின் ஒத்துழைப்பைக் கோரி அதைப்பெறுவது நலம். அனுதாபத்தைச் சம்பாதித்துக்கொண்டு ஆதரவுக்கு வருவோரிடம் ஏமாந்துபோகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

ஜூலை 17, 23, 24, 27, 28, ஆகஸ்ட் 2, 5, 9, 10, 14 தேதிகள் இவர்களுக்குச் சிலாக்கியம்.

துலா ராசி

(சித்திரை, 3-ம் பாதம் முதல், சுவாதி, விசாகம் 3-ம் பாதம் முடிய.)

துலாராசிக்காரர்களுடைய கிரஹங்கள் எல்லாம் இம்மாதம் நன்கு இடம் பெற்றுள்ளன. இது வாழ்க்கையில் அனுகூலங்களைப்பயக்குமென்பதைக் குறிப்பதாகும். எல்லாவிஷயத்தையும் எடுத்துக்கொண்டு பார்க்கையில் துலாராசிக்காரர்களுடைய வருங்கால நிலை மிக்க உன்னதமாயிருக்குமெனக்காண்கிறது. நண்பர்கள், நட்பு, கூட்டுவியாபாரம் இவற்றிற்கெல்லாம் இது தரமான மாதம். கல்யாணமாகாதவர்களுக்குக் கல்யாணமாகும் கட்டமிது. உத்தியோகத்திலிருப்பவர்களானால், மேலதிகாரிகளின் ஆதரவேற்பட்டு ஊதிய உயர்வையோ அல்லது விரும்பிய ஸ்தானத்தையோ அடைய முடியும். 12–வது இடத்தில் செவ்வாயிருப்பதால் செலவு படு கடுமை. லாபத்தைத் தரும் கிரஹமான சூரியன் 10–ல் இருப்பதால், பணமுடையைச் சுலபமாகசமாளிக்க முடியும். பழைய சிநேகிதர்கள் சுமுகமாகவிருந்து இம்மாதத்தில் ஆச்சர்யகரமான காரியங்களைச் செய்வர். சிலருக்கு பண அனுகூலங்கள் கிட்டும். எதிரிகளிடமிருந்து கூடப் பணலாபம் கிடைக்கும். முதியவர்ஒருவர் இந்தராசிக்காரர்களுடைய கொள்கை, தீர்மானங்கள் இவற்றை மீறிக்கொண்டு ஆதிக்கம் செலுத்தவந்துகுறுக்கிடலாம். வியாபாரிகளுக்கு நல்ல சமயம். இவர்கள் இப்போது ஹேஷ்யங்களைச்செய்வதென்பது அறவே கூடாது. புதிய வியாபாரத்தை ஆரம்பம் செய்வதற்கோ அல்லது புதிதாக கூட்டுப் போடுவதற்கோ இது சரியான மாதமில்லை.

ஜூலை 16, 23, 28, 31, ஆகஸ்ட் 1, 3, 9, 10, 13 தேதிகள் இவர்களுக்கு சிரேஷ்டம்.

விருச்சிகராசி

(விசாகம் 4-ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)

இம்மாதம் இந்த ராசிக்காரர்களுக்கு அதிருஷ்டகரமான சக்திகள் நிலவுமென்த்தோன்றவில்லை. உத்தியோகத்தில் அதிகப்படியான கிலேசங்களும், வேலைப் பளுவுமிருந்துவரும். பக்கத்திலுள்ள நிலைமை உற்சாகத்தைத் தருவதாயில்லை. குடும்பத்திலும் சந்தோஷம் பாதிக்கப்படும். பண விஷயத்தில் இம்மாதம் அதிருஷ்டகரமாயிருக்கும். நண்பர்கள் மூலமாயும், உறவினர்களாலும் லாபமுற இடமுண்டு. கல்யாணமானவர்களானால் மனைவியின் மூலம் லாபத்தை அடைவர். வயோதிகர்கள் அதாவது பெற்றோர், அவர்களைப் போன்றவர்களிடமுள்ள உறவு சௌஜன்யமாயிராது. நண்பர்களின் தொகை பெருகும். இவர்களில் சிலரிடம் விரோதமான உணர்ச்சி கொள்ளவும் நேரும். நண்பர்களிடம் தாராளமனோபாவத் துடனிருப்பினும் அவர்கள் அதற்கேற்றபடி இருக்கமாட்டார்கள். சச்சரவுகளை விலக்க வேண்டும். தூர இடத்துக்குச் செல்லும்படி ஒரு பிரயாணம் சித்திக்கலாம். இம்மாதம் மேலதிகாரியின் ஆதரவிருக்குமெனத் தோன்றவில்லை. கோர்ட் வழக்குகள் திருப்திகரமாயிராது. முதியவர் ஒருவருடைய ஆதிக்கம் எரிச்சலை உண்டுபண்ணும். வியாபாரத்திலுள்ளவர்கள் தங்களுடைய நடவடிக்கைகளை வியாபகப்படுத்திக்கொள்ள இது சிறந்த சந்தர்ப்பம். ஏற்கனவே செய்த வியாபாரத்தின் மூலம் லாபம் வரும். பழைய வியாபார உடம்பாடுகள் செழிப்புறும்.

ஜூலை 18, 26, 27, 31, ஆகஸ்ட் 1, 3, 8, 11, 15 தேதிகள் இவர்களுக்கு திருப்திகரமான சுபதினங்கள்.

தனுர்ராசி

(மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் முடிய.)

கிரஹங்களின் அதிருப்திகரமான அமைப்பினால் தனுர்ராசிக்காரர்களுக்கு இம்மாதம் பாப சக்திகள்தான் மேலோங்கியிருக்கும். பொதுவாக எல்லா விஷயங்களிலும் மன அமைதியிராது. குடும்பத்தில் மகிழ்ச்சியில்லை. உத்தியோகத்தில் கீழ் பதவிக்கு மாறும்படியோ, ஏமாற்றத்தில் சிக்கும்படியோ நேரும். மேலதிகாரிகள் அல்லது பெரியவர்களுடன் சௌஜன்யமிராது. புதிய செலவினங்கள் ஏற்படும். ஒரு பிரயாணம் நேரவும் இடமுண்டு. புதிதாக விவாஹமானவர்கள் மனைவியின் மூலம் லாபமுறுவர். மண வாழ்க்கை சுவை தரும் வண்ணமிருக்கும். இந்த மாதம் பொறுமையோடு, முரண்டிக் கொள்ளாமல் அமைதியாக வேலை செய்வதுதான் அனுகூலம். ஹேஷ்யம் லாபகரமாயிராது. சூரியன், குரு இவர்களிருக்கும் ஸ்தானம் காரணமாக ஜலகண்டம் நேருமென்பதற்கான அறிகுறிகள் காண்கின்றன. எனவே, ஆறு, கடல் இவற்றில் ஸ்நானத்துக்குப் போகாமலிருப்பது நல்லது.

ஜூலை 18, 21, 26, 28 ஆகஸ்ட் 1, 3, 7, 11, 13 தேதிகள் இவர்களுக்கு உத்தமம்.

மகர ராசி

(உத்திராடம் 2-ம் பாதம் முதல் திருவோணம், அவிட்டம் 2-ம்பாதம் முடிய.)

ஏகாதச ஸ்தானத்தில் (11-ல்) குரு இருப்பதொன்றைத் தவிர மற்றெல்லா கிரஹங்களும் இம்மாதம் மகர ராசிக்காரர்களுக்குச் சாதகமாயில்லை. 6, 7, 8-ல் உள்ள பெரிய கிரஹங்கள் காரணமாக இம்மாதத்தில் வாழ்க்கையைப்பற்றிய நோக்கம் மகிழ்ச்சிகரமாயிருப்பதற்கில்லை. தவிர்க்கமுடியாத மனவேதனையும். மறைமுகமாக நடக்கும் சில்லரை விஷமங்களும்தான் அதிகமாயிருக்கும். பித்தம் காரணமாக ஏற்படும் வியாதிகளால் ஆரோக்கியம் திருப்திகரமாயிராது. காலிலும் சில்லரையான கோளாறுகள் ஏற்படும். குடும்பத்தாரிடையே சண்டை பூசல்களிருக்கும். வியாஜ்ய விவகாரங்கள் தொடரும்; இது விரோதமாகவும் முடியும். நண்பர்கள் எதிரிடையாயிருப்பர். புதிதாகவும், செலவைத்தரும்படியாயுமுள்ள நண்பர்களின் பழக்கம் நீடிக்கும். நேர்முகமாகவோ, மறைமுகமாகவோ பண லாபத்தைத்தரும் வகையில் உத்தியோகத்தில் சற்று மாறுதலேற்படலாம். தூரதேசப் பயணம் ஏற்படும். பெரிய அளவில் ஹேஷ்யம் செய்து வியாபாரத்தில் இறங்குபவர்கள் நன்கு சிந்திக்கவேண்டும். இல்லையானால் எதிர்பாராத நஷ்டமே ஏற்படும். பழைய வியாபார உடம்பாடுகள் லாபகரமாயிருக்கும். புதிய வியாபார கூட்டு அனுகூலகரமாகக் கைகூடும்.

ஜூலை 17, 26, 31, ஆகஸ்ட் 1, 8, 11, 13 தேதிகள் இவர்களுக்கு விசேஷம்.

கும்ப ராசி

(அவிட்டம் 3-ம் பாதம் முதல் சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் முடிய)

கொஞ்சகாலம் வரையில், கும்ப ராசிக்காரர்களுக்கு, நடக்கும் விவகாரங்களெல்லாம் குழப்பத்தைத் தரும்படியாகவும், எரிச்சலை உண்டாக்கும்படியாகவும் இருக்கும். நிறைவேறும் என்று மனதில் கொள்ளும் நம்பிக்கைகள் எல்லாம் நிச்சயமற்றதென்று கருதும்படியான நிலைமையை இம்மாதத்தில் ஸஞ்சரிக்கும் கிரஹங்கள் அறிவுறுத்துகின்றன. 7-வது இடத்துக்கு லக்னாதிபதி வருவது, வியாபாரம், உத்தியோகம் இவற்றிலுள்ள தகராறுகளைச் சரிப்படுத்தி விரைவில் அவைமறைந்து போகும் நிலைமை பிறக்குமென்பதை குறிக்கிறது. பொறுமையே பூஷணம். சகபாடிகளிடமிருந்து நேரடியாகவும், மறைமுகமாகவும் எதிர்ப்புகளிருந்து வரும். இருப்பினும் வெற்றி பெறுவது நிச்சயம். சகலவிதமான சங்கடங்களையும் உண்டாக்கக்கூடிய சந்தர்ப்பங்களிருந்தபோதிலும் அவை எதுவும் அனுபவத்தில் நிகழாது. புதிய உத்தியோக நடவடிக்கைகளைப்பற்றிக் கவனம் ஈடுபட்டிருக்கும். இரண்டாம் பகுதியைவிட முதல்பகுதி நல்லது. ஊழியர்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவும், வேலையில் ஏற்படும் மாறுதலால் மகிழ்ச்சியும் உண்டாகும். பணம் அபாரமாகச்செலவானாலும் வரக்கூடிய கஷ்டங்களைச் சுலபமாகச் சமாளிக்கலாம். சிலருக்குக் கடன் வாங்கியே தீரும்படியிருக்கும். வியாபாரிகளானால் அவர்களுக்கு இம்மாதம் நல்லதல்ல. இவர்களுக்கு முன்னேற முடியாதபடி தடைகளிருக்கும். சகோதரர்களில் ஒருவரைப்பற்றி கவனம் செலுத்த நேரும்.

ஜூலை 26. 28, 31, ஆகஸ்ட் 1, 3, 8, 11, 13 தேதிகள் இவர்களுக்கு உகந்தவை.

மீன ராசி

(பூரட்டாதி 4-ம் பாதம் முதல்; உத்திரட்டாதி, ரேவதி முடிய)

பொதுவாக மீன ராசிக்காரர்களுக்கு பிரகாசமான நிலைமை இம்மாதம். அதிருஷ்டம் இந்த ராசிக்காரர்களுக்கு அனுகூலமாகி தடைகள் விலகி, சுணக்கம் மறைந்து அபிவிருத்தி ஏற்படும். பெரிய கிரஹங்களான சனி, குரு இவ்விருவரும் நேரான கதியிலிருப்பதால் கஷ்டமேற்படும் சமயத்தில் உதவி புரிவர். 6-வது இடத்தில் சனி இருப்பதால் செலவு அதிகமேற்படும். வேலைக்காரி, வேலைக்காரர் இவர்களால் கவலை ஏற்படும். செவ்வாய் 7-ல் இருப்பது அதிகப் பணத் தேவையைக் குறிக்கும்; அல்லது எதிர்பாராத செலவுகள் செய்ய நேரும். முதல் பகுதியில் குடும்ப சுகம் அதிகமென்று சொல்லவேண்டும். சிலருக்கு இந்த கட்டத்தில் ஆண் குழந்தை பிறக்கும் அல்லது புத்திரன் சுபிட்சம் மேலோங்கும். வியாபாரிகளுக்கு ஏற்ற காலம். குடும்ப மாறுதல்களுக்கு இடமுண்டு. புதியவியாபாரங்கள் லாபகரமாயிருக்கும். பழைய நண்பர்கள் இந்த ராசிக்காரர்களுக்கு எதிராக ஒன்று சேருவார்கள்.

ஜூலை 21, 23, 27, 31 ஆகஸ்ட் 3, 12, 13 தேதிகள் இவர்களுக்கு உயர்தரம்.

ஸ்ரீ பி. வி. ராவ்,
5, வாசுதேவ்புரம்,
ஐஸ் ஹவுஸ் ரோடு,
திருவல்லிக்கேணி,



புதன் என்பவன் ஒரு பெரிய அறிவாளி. சமயோசித புத்தி நிறைந்தவன். அவன் பல புதுப் பொருள்கள், விளையாட்டுக் கருவிகள், தொழில் கருவிகள் பலவும்கண்டுபிடித்தான். அவை மக்களுக்கு மிகவும் ' உதவின. மனிதர் யாவர்க்கும் வாழ வசதி செய்தான். கேட்டவைகளைக் கண்டுபிடித்து உதவுவான் அது அவன் வழக்கம் அவன் புகழ் நாடு எல்லாம் பரவியது.

ஒருநாள் சில தூதர்கள் அவனிடம் வந்தனர். "உம்மை அரசர் அழைத்துவர ஆணையிட்டார். தயவு செய்து உடனே வருக" என்றனர். புதனும் அவர்களுடன் அரண்மனை சென்றான். அரசனைச் சபா மண்டபத்திலே கண்டான். மரியாதையுடன் வணங்கி நின்றான். அரசன் காட்டிய ஆசனத்திலே அமர்ந்தான்.

"மிதக்கும் கோட்டை ஒன்று கட்ட வேண்டும். அதில் பல வழிகளும், அனேக அறைகளும் தேவை. அது அழகாக இருத்தல் அவசியம். உள்ளே சென்றவர் வெளிவர வழி அறியாதவாறு மயங்க வேண்டும். தேவையான பொருள் தருவேன். உடனே ஆரம்பியுங்கள். அக் கோட்டைக்குப் பட்டத்து ராணியின் பெயரிட ஆசை" என்றான் மன்னன்.

கூடியவரை உழைக்கிறேன் கொஞ்சமும் வஞ்சகம் நினைக்கமாட்டேன். நானும், என் மகனும் நல்ல வேளையில் வேலையை துவக்குவோம்" என மகிழ்வுடன் பேசினான் புதன்.

பல ஆட்கள் புதனின் ஏவலுக்கு அடங்கி நடந்தனர். வேலை மும்முரமாக நடந்தது. சிக்கனமாக, உறுதியாக அழகாக 'மிதக்கும் கோட்டை' உருவாகி வந்தது. பல நாட்கள் சென்றன; மாதங்கள் மறைந்தன.

புதனின் மகன் ஞானம் என்பவன். ஒருநாள் இருவரும் கோட்டையைச் சுற்றிப் பார்த்தனர் எல்லா வேலையும் முடிந்து விட்டது. ஆனால் உள்ளே புகுந்த புதனும், ஞானமும் வழி தவறி விட்டனர்; செய்வது அறியாது திகைத்தனர். வெளியேவர பலவிதமாக முயன்றனர்; முடியவில்லை.

'மகனே, தப்பிப்போக ஒரே வழி உண்டு. நாம் பறந்து சென்றால் தான் பிழைப்போம்" என்றான் புதன். ஞானம் சம்மதித்தான்.

உடனே அவர்கள் மெல்லிய இறகு. கட்டை, இவைகளைத்தயார்செய்தனர். இறக்கைகளைத் தயாரிக்க முற்பட்டனர்.

> "பறவை போலத் திரியவே
> இறக்கை இரண்டு செய்யவே
> விறகும் இறகும் சேர்க்கவே
> விசையும் வைத்துப் பார்க்கவே
> பட்டம்போல உயரமாய்
> இஷ்டம்போல திரியலாம்......"

இறக்கைகள் ஞானத்திற்குப் பொருத்தப்பட்டன. அவைகளைக் கண்டு அவன் குதூகலித்தான். அந்தோ! அவை அவனுக்கு உதவுமோ?



ஏனெனில் அவை சற்றுப் பெரியவை. புதன் பெரும் அறிவாளி தான். இருந்தும் மகனைவிடப் பெரிய இறக்கைகளை செய்து விட்டான் அவைகள் எதிரே அவன் மிகச் சிறுவனாகத் தோன்றினான்.

"பெரியதாக இருந்தால் என்ன? பறந்து



பார்க்கஆசை!'' மற்றசிறுவர்களைப் போல அவனுக்கும் ஆவல்அதிகமாயிற்று.

ஞானம் பறக்கவேண்டிய நாளும்நேரமும் நெருங்கியது. "மகனே! நாம் விரைவில் வெளியே போவோம் பறவை போல எளிதாகப் பறக்கலாம், நீ முன்னால் பறந்து போ நான் உன்னிடம் வந்து சேருவேன்'' என புதன் கூறினான். ஞானம் விடைபெற்றுக்கொண்டான். சுலபமாக மேலே எழும்பினான். காற்றிலே—வானத்திலே உயரப் பறந்தான்.

ஆரவாரத்துடன் வட்டமிட்டான். பிறகு கொஞ்சம் கொஞ்சமாகக் கீழே இறங்கினான்.

"அப்பா! பறவைபோல் பறக்க வழி செய்தாய். என் இறக்கையின் உதவிக்காக—செய்த உமக்கு வணக்கம். என்றும்இல்லாத ஆனந்தம் கொண்டேன். இன்றிரவு உம்முடனே இருக்கிறேன். நாளைக்காலை மறுபடி பறக்கிறேன்'' என ஞானம் சொன்னான். இரவு கழியவே இல்லை அவனுக்கு! அன்றிரவு நீண்டு போனதாக எண்ணி, ஏங்கினான்.

"குமாரா! நீ அதிக உயரத்தில் பறக்காதே. சூரியனின் வெப்பம் அதிகமாயிருக்கும். உன் இறக்கையிலுள்ள மெழுகு உருகிவிடும். உனக்கு ஆபத்து உண்டாகும். தாழவும்பறக்காதே கடல் நுரையும், காற்றும், இறக்கைகளை நனைக்கும் நனைந்த இறக்கைகள்வேலை செய்யாது. நீ பறக்க சிரமப்படுவாய் என்றான் புதன்''.

ஞானம் 'விர்' எனப் பறந்தான்—பாய்ந்தான்—புரண்டான். சூரியனையும் பிடிப்பது சுலபமாக இருக்குமோ? என்று எண்ணினான்.

பூமி.—ஆம் அது சிறியது. கொடுமையாளர் நிறைந்தது. துன்பம் கவிந்து இருக்கிறது. எங்கும் இருட்டு, பயம், அடிமைத்தனம்!

ஆகாயம்.—ஆஹா! இன்பத்திற்கு இருப்பிடம். பூரண விடுதலை பெற்றது. எங்கும் ஒளி, அன்பு, தயை நிறைந்த இடம்.

ஞானம் பூவுலக நினைவை இழந்தான். தன் தந்தையை—அவர் புத்திமதியை—மறந்தான். சூரியனை நோக்கிப் பறந்தான். வேகமாகச் சென்றான். அந்தோ! ஒரு மாறுதல் நேர்ந்தது. பெரிய இறக்கைகள்கழல ஆரம்பித்தன. மெழுகுஉருகியது இறக்கைகள் தொங்கிவிட்டன. ஞானம் அவைகளை அசைக்கவும் முடியவில்லை.

கீழே, கீழே, கீழேபோனான். பாவம்! கடலிலே குப்புற விழுந்தான் ஞானம். இறக்கையின் கனம் அவனைக் கீழே தள்ளின! அவன் இறந்து போனான். பெரிய இறக்கைகள் மிதந்தன; அவனும் கடல் நீரிலே மிதந்தான்.

சமுத்திர அரசன் வருணன் என்பவன். அவன் மகள் ஒருத்தியின் பெயர் நிவாரணி. அவள் தன் தோழிகளுடன் விளையாடிக்கொண்டிருந்தாள். ஞானம் மிதப்பதைக் கண்டாள். அவன் இறக்கைகளை அகற்றினாள். தன் அரண்மனைக்கு அவனை எடுத்துச் சென்றாள். தன் மந்திரசக்தியால் ஞானத்திற்கு உயிர் வரச்செய்தாள். ஞானத்தை மணந்து கொண்டாள். அவனும் அங்கேயே தங்கிவிட்டான். நிவாரணியின் சேடிகள் ஆடினர், பாடினர், களிப்பினால் ஆரவாரம் செய்தனர். —இன்னும் செய்துகொண்டே இருக்கின்றனர். அவர்கள் ஆரவாரமும் கூச்சலும்; அலையாகவும், இரைச்சலாகவும் இன்னும் மோதுகின்றன.

'புதன் என்ன ஆனான்' என்று யாருக்கும் தெரியாது. ஆனால் ஞானம் மட்டும் நிவாரணியுடன் சுகமாக வாழ்கிறான்.

மாதர் மஹா சபை

- குந்தமம்

'.....பாவம், கேட்பதற்கு
ரொம்பவும் பரி
தாபமாகத்தான் இருக்கிறது,'
என்று சரோஜா சொல்லிக்
கொண்டிருக்கையில் அங்கே
பானு வந்து சேர்ந்தாள்.

'நானும் பார்க்கிறேன். ஒரு
நாளாவது சந்தோஷம், ஆனந்
தம் இந்தமாதிரியான வார்த்
தைகள் மருந்துக்காவது காதில்
விழவேண்டுமே! எதையெடுத்
தாலும் கஷ்டம், துக்கம், பரி
தாபம், இதே வார்த்தைகள்
தானா?' என்றாள் பானு.

'என்னடியம்மா செய்கிறது.
வரவர வாழ்க்கையே அந்த
மாதிரியான நிலைமைக்கு வந்து
விட்டது. கலி முற்றிவிட்ட
தோவியோ?' என்றாள் ருக்கு
வின் மாமியார்.

'ஏன், யாருக்கு அப்படிப்
பட்ட கஷ்டம் வந்துவிட்ட
தாம்?' என்றாள் பானு.

'பக்கத்துத் தெருவிலே
கோகிலா என்று ஒரு பெண்
இருந்ததே தெரியுமா?' என்
றாள் சரோஜா.

'கோகிலா தெரியாதா?
வேளைக்குஒருவிதமான டிரெஸ்
செய்துகொண்டு வருமே?
நேற்று முன்தினம்கூட சபா
வுக்கு வந்திருந்ததே.'

'அவளே தான்'

'ஏன், அவளுக்கு என்ன
வந்துவிட்டதாம் திடீரென்று?'

'கொஞ்ச நாளைக்கு அக்ஞாத
வாஸம் செய்யவேண்டியகாலம்
வந்துவிட்டதாம்!

கிடக்கட்டும், சொல்லடி
விஷயத்தை.

சொல்வதென்ன, பேர்வழி
தலைமறைவாகப் போய்விட்
டாள்.

'அப்ஸ்காண்டிங்' என்றாள்
விமலா.

'என்னது' காணமற்போய்
விட்டாளா? அவள் அகமுடை
யான் இருக்கிறானேலியோ?'
என்று பரபரப்புடன் கேட்
டாள் பானு.

'அகமுடையான் இராம
லென்ன? இஞ்சிதின்ற குரங்கு
மாதிரி பேந்தப்பேந்த விழித்
துக்கொண்டிருக்கிறது என்
றாள் சரோஜா.

'ஏன், என்னவாம் திடீ
ரென்று. இதெல்லாம் ஏதாவது
ஒருவருக்கொருவர் சண்டை
போட்டுக்கொண்டார்களாமே?

'அப்படி ஒன்றும் நடை
பெற்றதாகவும் தெரியவில்லை.

'பின் என்னவாம்?

நேற்று முன்தினம் கோகிலா
சபாவுக்கு வரும்போது, தன்
னுடன்கூட ஒருவனை அழைத்
துக்கொண்டு வந்தாளே ஞாப
கம் இருக்கிறதா?

'ஞாபகம் இல்லாமென்ன?
நான் கூடயார் என்று கேட்
டேன். தன்னுடைய மாமா
வின் பிள்ளை என்று சொன்
னாளே, அவனுடன் தான் போய்
விட்டாளாம்.'

'அப்படியானால் மாமாவின்
வீட்டுக்குப்போயிருப்பாள்.'

'அவன் மாமாவின் பிள்ளையும்
இல்லையாம் ஒன்றுமில்லையாம்.
யாரோ மூன்றாவது பேர்வழி
யாம்.'

'இதென்னடியம்மா நீ சொல்
வது விசித்திரமாக இருக்கிற

தே! நாலைந்து தினமாக அவளுடைய வீட்டிலிருந்துகொண்டிருக்கிறான். மாமாவின் பிள்ளையில்லாமல் மூன்றாவது பேர்வழியாக இருந்தால் அதனுடைய அகமுடையான் எப்படி அவனை வீட்டில் வைத்துக்கொண்டிருப்பான்? மூன்றாவது பேர்வழிமாதிரி அவன் பழகவில்லையே. அவளுக்குத் தம்பியோ தமையன் மாதிரியோ அல்லவா பழகினான்?'

அதுதான் வேடிக்கை. அன்றாடம் உலகத்தில் விதம்விதமான அதிசயங்கள் நடைபெறவில்லையா? அவைகளில் இதுவும் ஒன்று.'

'நீ சொல்கிறது எனக்கு ஒன்றும் விளங்கவில்லையடியம்மா. கொஞ்சம் புரியும்படியாகத்தான் சொல்லேன்.'

'உனக்கு எவ்வளவு தெரியுமோ, அவ்வளவுதான் எங்களுக்கும் தெரியும்.'

'கோகிலாவின் அகமுடையானுக்கே கூட அவ்வளவுதான் தெரியுமாம்' என்றாள் ருக்கு.

'கொல்லடி. இருக்கட்டும்' என்றாள் பானு.

'அதான் சொல்லியாகி விட்டதே. நேற்றுகாலை கோகிலாவின் அகமுடையான் வழக்கப்படி ஆபீஸ் போயிருக்கிறான். மாலையில் வீட்டுக்குத் திரும்பியிருக்கிறான். கதவு பூட்டியிருந்தது. கிளப்புக்கோ, சபாவுக்கோ போயிருக்கிறாள் என்று பேசாமல் இருந்துவிட்டான். ராத்திரி மணி எட்டாயிற்று, ஒன்பதாயிற்று, பத்தாயிற்று, பதினொன்றும் ஆயிற்று, கோகிலா வரக்காணோம். அப்புறம் தேட ஆரம்பித்தான். சின்ன குழந்தையா எங்காவது இடம் தெரியாமல் போய்விட்டது என்பதற்கு! எங்கு தேடினாலும் அகப்படவில்லை. வீட்டில் அவள் நகை, புடவைகள் ஒன்றுகூட இல்லையாம்' என்று சரோஜா சொல்லி முடிப்பதற்குள், 'இது ஏதோ முன் ஏற்பாடாக நடந்திருக்கிறது. மாமாவின் பிள்ளை என்று சொன்னாளே அவன் வீட்டில் இருக்கிறானா?' என்று கேட்டாள் பானு.

'சரிதான்போ, அவளை விட்டுப் பிரிந்திருக்க அவனுக்குப் பைத்தியமா பிடித்திருக்கிறது? அவளை அழைத்துக்கொண்டு போகத்தானே அவன் வந்திருந்தான்? வந்தான் கூட, நாலு நாளைக்கு இருந்தான். அழைத்துக்கொண்டு போய்ச்சேர்ந்தான்' என்றாள் சரோஜா.

'அவன் தான் அழைத்துக்கொண்டுபோனான் என்று எப்படிச் சொல்லிவிடமுடியும்?' என்றாள் பானு.

'நமக்குப் பிராப்தம் இவ்வளவுதான். இனி நான் தங்களவள் என்பதை மறந்துவிடவும். என்னைத்தேடவும் வேண்டியதில்லை என்று கடிதம் ஒன்று எழுதி வைத்துவிட்டுப் போயிருக்கிறாளாம் என்றாள் சரோஜா.



'ஆனால் எனக்கு மாத்திரம் ரொம்ப நாளாகவே ஒரு சந்தேகம் இருந்து வந்தது. அந்தப் பெண் இருந்த ஒரு போக்கில் அது குடும்பத்துக்கு லாயக்காக இருக்கும் என்று எனக்குத் தோன்றவில்லை. அது வீட்டில் எங்கே சேர்ந்தாற்போல் ஒரு மணி நேரம் தங்கியிருந்தது சொல்பார்க்கலாம். வேளைக்கொரு விதமான டிரெஸ் செய்துகொள்வதும், கடைக்கும், கடைத்தெருவிற்கும் ஸினிமாவுக்கும், சங்கீதக் கச்சேரிகளுக்கும் போவதற்குத் தா

னே அதற்குச்சரியாய் இருந்தது. அந்தப் பையனின் தாயார், தகப்பனார் மாத்திரம் சொன்னார்களாம்.' நமக்கு முன்பின் தெரியாத இடம். பெண்ணைப் பார்த்தால் அடக்க ஒடுக்கம் இருப்பதாகத் தெரியவில்லை, அதெல்லாம் 'இப்படி' ஊர் சுற்றிக்கொண்டு வேடிக்கையாய்ப் பொழுதைப போக்கிக்கொண்டிருக்கக் கூடியதுகள். நம்ம குடும்பத்துக்கு அதெல்லாம் சரிப்பட்டு வராதுடா அப்பா, நமக்குத் தகுந்தது நம்ம கல்யாணிதான் (பையனுடைய மாமாவின் பெண்) என்றார்களாம். ஆனால் பையன் ஒரே பிடிவாதமாய்க் கோகிலாவைத்தான் பண்ணிக்கொள்வேன் என்று சொல்லிவிட்டானாம். அதற்குமேல் என்ன செய்வது? அவன்பாடு எப்படியாவது போகிறான் என்று அவன் இஷ்டத்துக்கு விட்டுவிட்டார்களாம். அவன் இஷ்டப்படியே அந்தப்பெண்ணைக் கலியாணம் செய்துகொண்டானாம். அவ்வளவுதான். அன்றிலிருந்து தனிக்குடித்தனம். மாமியார், மாமனாரை வீட்டு வழி வரவிடுகிறதில்லையாம் என்றாள் பானு.

'இதெல்லாம் யார் சொல்லிவிட்டார்கள் உனக்கு?' என்றாள் ருக்கு.

'கொஞ்ச நாளைக்கு முன் அந்தப் பையனுடைய பாட்டி வந்திருந்தாள். இதையெல்லாம் அவள் கதையாய்ச் சொன்னாள் என்றாள் பானு.

'நான் சொன்னால் பத்தாம் பசலி கர்நாடகம் என்று பரிகாசம் செய்ய வந்து விடுவீர்கள். நம்ம பெரியவர்கள் தெரியாமலா செய்தார்கள்?' என்றாள் ருக்குவின் மாமியார்.

'மாமிக்குப் பழய ஆசார அனுஷ்டானங்களின் பெருமைகளை எடுத்துச் சொல்ல இந்தமாதிரி சமயங்கள்தானே வேண்டும். உம். ஆகட்டும்,' என்றாள் விமலா.

'நான் சொன்னால் உங்களுக்கு வேடிக்கையாகத்தான் இருக்கும். ஒவ்வொரு விஷயத்திலும் நம்ம பெரியவர்கள் எவ்வளவு தீர்க்க திருஷ்டியுடன் சில ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள் என்பதை இந்த மாதிரியான சந்தர்ப்பங்களில் யோசித்துப் பார்த்தால்தான் அவர்களுடைய விவேகம் எப்படிப்பட்டதென்பது தெரியும். வாழ்க்கைக்கு எவ்வளவு அத்யாவசியமான விஷயங்களோ அவற்றையெல்லாம நீங்கள் வேடிக்கையாக நினைத்துப் பரிகாசம் செய்ய வந்து விடுகிறீர்கள்' என்றாள் ருக்குவின் மாமியார்.

'பூர்வ பீடிகையெல்லாம் கிடக்கட்டும் மாமி. நீங்கள் சொல்ல வந்ததைச் சொல்லி முடியுங்கள். சீக்கிரம் இன்றைக்கு எல்லோரும் பொழுதோடு பீச்சுக்குப் போய் வரலாம் என்று யோசித்திருக்கிறோம் என்றாள் பானு.

'முன் காலங்களிலெல்லாம் பந்துக்கள் தவிர, வேறு இடங்களில் கலியாணம் செய்யமாட்டார்கள். பிள்ளை வீட்டாருடையவும், பெண் வீட்டாருடையவும யோக்யதைகள், குணாதிசயங்கள் ஒருவர்க்கொருவர் நன்றாகத் தெரியும். பிள்ளையைச் சேர்ந்த மனுஷ்யாள், பெண்ணைச் சேர்ந்த மனுஷ்யாள யார் யார் என்று தெரியும். அத்துடன் இப்பொழுதுதான் ஒருவேளைக் கல்யாணமாகப் போய்விட்டது. அப்பொழுதெல்லாம் ஐந்து நாளைய கல்யாணம். கல்யாணத்தில் நான்காவது நாளாகிய 'பச்சை'யன்று நம்ம பெரியவர்கள் செய்திருக்கும் ஒரு ஏற்பாட்டின் அழகை என்னவென்று சொல்வது! அன்று கல்யாணப்பிள்ளையையும் பெண்ணையும் பந்தலில் உட்கார வைத்துவிட்டு பெண்ணினுடைய புக்ககத்து மனுஷ்யாளையும், பிள்ளையினுடைய வேட்டகத்து மனுஷ்யாளையும் அதாவது அவர்களுடையமாமா, மாமாவின் மனைவி, மைத்துனர், மைத்துனி, அத்தை, அத்திம்பேர், மற்றும் இதர நெருங்கிய பந்துக்கள் எல்லோருடைய பெயரையும் சொல்லி பிள்ளைக்கும் பெண்ணுக்கும் அறிமுகப்படுத்தி வைப்பார்கள். அநேகமாய் அவர்களெல்லோரும் கல்யாணத்துக்கு வந்திருப்பார்கள். இதற்காகவே ஐந்து தினங்கள் கல்யாணம் என்று வைத்துக்கொண்டார்கள். பந்துக்களில் முதல் நாள் சிலருக்குவர ஒழியாவிட்டாலும், இரண்டாவது அல்லது ஐந்து நாட்களில் ஒரு நாள் வந்துவிட்டுப் போகலாமல்லவா? அப்பொழுது பந்துக்கள் அறிமுகமாகி விடுவார்கள். அப்பொழுது இதற்கெல்லாம் வசதி ஏது? காலையில் வண்டியில் வந்து இறங்க வேண்டியது. மாலை வண்டிக்குக்



"..... என்ன ஸார். பீச்சுக்குக் கிளம்பிட்டாப் போலேருக்கு. பாத்தாலே தெரியறதே......"

கிளம்பிவிட வேண்டியது. ஒரு வேளைக் கல்யாணம். பெண்ணுக்கும் பிள்ளைக்கும், பிள்ளைக்கும் கூடத் தங்களை ஒருவருக்கொருவர் சரியாக ஞாபகம் வைத்துக் கொள்ள முடியாத அவ்வளவு அவசரம். அப்படி இருக்கையில் மாமனையும், மைத்துனனையும் யார் கண்டார்கள்? அதனுடைய பலன் தான் இது. பெண், தன்னுடைய மாமன் என்று சொன்னால் முன் பின் சம்பந்தமில்லாத இடத்தில் பிள்ளைக்கு என்ன தெரியப் போகிறது பாவம்! என்ன இருந்தாலும் நம்ம பெரியவர்கள ஏற்படுத்தியுள்ள விதிகள் ஒவ்வொன்றிலும் எவ்வளவோ அர்த்த புஷ்டியிருக்கிறது. அதனுடைய அருமைபெருமைகளைத் தெரிந்துகொள்ள சக்தி—பொறுமை இல்லாத இந்த காலத்தில் சிலர் அக்ஞஜனங்கள் வீணிற்காவது பரிகாசம் செய்துகொண்டு திரிகிறார்கள் என்றாள் ருக்குவின் மாமியார்.

அத்துடன் மாத்திரமில்லை. முன் பின் தெரியாத இடத்தில் தனிக்குடித்தனம் வேறு வந்துவிடுகிறதுகள். இவர்களைப் பற்றி வீட்டிலிருக்கும் மற்ற குடித்தனக்காரர்களுக்கே தெரியாது. அப்படிப்பட்ட இடத்தில் பிறத்தியாரைப்பற்றி அவர்களுக்கு, அதாவது இவர்களுடைய மாமன் மைத்துனர்களைப்பற்றி அவர்களுக்கு என்ன தெரியப்போகிறது!' என்று சொல்லிவிட்டுச் சிரித்தாள் பானு.

'அந்தப் பெண் புறப்பட்டுப் போய் விட்டதைப்பற்றிக்கூட அந்தப்பிள்ளைக்கு அவ்வளவாக வருத்தமில்லையாம். நகை நட்டு, ரொக்கம் எல்லாவற்றையும் சுருட்டிக் கொண்டுபோய் விட்டதில்தான் வருத்தமாம்.' என்றாள் சரோஜா.

'பாட்டு,கூத்து,அழகு என்று கோடித்துக் கோடித்து தங்களுக்குத் தகுதியில்லாததைப் பண்ணிக் கொள்கிறதுகளே அதனுடைய பலன் இது' என்றாள் பானு.

'பண்ணிக்கொண்டால் என்ன? எத்தனை குடும்பங்கள் நன்றாக இல்லை; வரவர காலம் கெட்டுப்போய் விட்டது. சரி. நீங்கள் பீச்சுக்குப் போவதானால் நேரமாய் விட்டது' என்று எழுந்தாள் ருக்குவின் மாமியார்.

—❀—



படத்தில் பயந்தாப்போல் நிற்கும் இரு குழந்தைகளும் படுதூஷ்டன்கள்! அப்பா, அம்மாவை கதிகலங்கச்செய்து, போலிஸ் கோஷ்டியார் ஓயாமல் தேடி அலையும்படிவிட்டு இரவு முழுதும் ஒரு காட்டில் ஸஞ்சரிக்கப் போய்விட்ட அண்ணனும் தங்கையுமே அவர்கள். சாட்டையும் கையுமாக குழந்தைகளை மிரட்டிக் காரணம் கேட்கிறார் தந்தை ஜோஸப் வோஜ்ஸியாக், மற்றொருபுறம் குழந்தைகளின் தாயார். குழந்தைகளின் பயந்த பாவத்தைக்காட்டும் படம்.

மெய் விளங்கிய அன்பர்கள்

பெரிய புராணப் பூங்கோயிலில்

9

மலை, நாடு, நகரம்

★

பி. ஸ்ரீ.

அருளையே மேனியாகக்கொண்டு மங்கை பங்கராய்ச் சிவ பெருமான் தூய வெண்ணிற முடைய கைலையங்கிரியில் வீற்றிருப்பதாகப் புராணம் சொல்லுகிறது. அந்த மலைச்சிறப்புடன் சேக்கிழாரும் தமது பெரிய புராணத்தை ஆரம்பஞ்செய்கிறார்.

அம்மலையின் அடியிலே ஓர் ஆசிமத்தில் வசிக்கும் உபமன்னிய முனிவர் ஒரு சமயம் பேரொளி ஒன்று கண்டு, தேவாரம் பாடிய மூவருள் ஒருவரான சுந்தரமூர்த்தி சுவாமி தமிழ் நாட்டிலிருந்து கைலையங்கிரிக்கு வருவதாகத் தெரிந்துகொண்டாரா். பிறகு அம்முனிவர் மற்ற முனிவர்களுக்குச் சுந்தரமூர்த்தி சுவாமியின் தவப்பெருமையையும், தென்னாட்டின் பெருமையையும் சொன்னாராம்.

சேக்கிழாரின் நோக்கம்

சுந்தரமூர்த்தி சுவாமிக்குத் திருவாரூர் தியாகராஜாவே முதல் முதல்,

> தில்லைவாழ் அந்தணர்தம்
> அடியார்க்கும் அடியேன்

என்று அடியெடுத்துக்கொடுத்தாராம் அந்த வாக்கைப் பின்பற்றியே சுந்தரமூர்த்தி சுவாமியும் 'திருத்தொண்டத்தொகை' என்ற பாடல்களால் நாயன்மார்களையும், அவர்களுடைய சிறப்பையும் மிகவும் சுருக்கமாக வெளியிட்டிருக்கிறாராம். அதன் வழி நூலாக நம்பியாண்டார் நம்பி என்ற பொயார் தொண்டர்களின் பெருமையை ஓர் அந்தாதிவாயிலாகச் சிறிது விவரிக்கிறார். திருத்தொண்டத்தொகையின் விரிவைச் சொல்ல விரும்பும் சேக்கிழார், நம்பியாண்டார் நம்பியின் வழிநூலைத்தழுவித் தாம் தெரிந்துகொண்ட விஷயங்களையும் சேர்த்து அடியார்களின் வரலாற்றைத் தமது திருத்தொண்டர் புராணம்' என்ற 'பெரிய புராண'த்திலே விரித்துரைக்கிறார்.

காவிரி வளம்

கைலைமலைச்சிறப்பை அடுத்துத் 'திருநாட்டுச் சிறப்பு' வருகிறது. இச்சிறப்பு சோழநாட்டின் சிறப்பே காவிரி பல முகங்கொண்டு ஓடி வளஞ்செய்யும் இந்நாட்டைச் சேக்கிழாரின் வாக்குவளம் விசேஷ நாட்டபிமானத்துடன் சிறப்பித்துப் பேசுகிறது.

தமிழகத்திலுள்ள சேர, சோழ பாண்டிய நாடுகள் என்ற மூன்று நாடுகளிலும் சோழநாடு மிகவும் செழிப்பானது. இச்சோழநாட்டின் நீர்வளம் கருதி இதை நீர் நாடு அல்லது 'புனல்நாடு' என்று விசேஷமாய்க் குறிப்பிடுவதும் உண்டு. இத்தகைய வளத்திற்குக் காரணமான காவிரியைச் சேக்கிழார் உலக அன்னையாகிய உமையம்மையின் கருணைக்கு ஒப்பிடுகிறார்:

> அண்ணல்பா கத்தைஆ—
> ளுடைய நாயகி
> உள்நெகிழ் கருணையின்
> ஒழுக்கம் போன்றது.

[அண்ணல்-சிவபெருமான்; பாகத்தை ஆளுடைய நாயகி—அப்பெருமானுடைய ஒரு பாகத்தில் வீற்றிருக்கும் தேவி.]

இயற்கைவளமும் குடிவளமும்

இத்தகைய காவிரிவள நாட்டைத் தமிழகத்தின் 'நெற்களஞ்சியம்' என்று சொல்வதோடு, தமிழ்நாட்டின் 'பூந்தோட்டம்' என்றும் இந்நாளிலும் சொல்வதுண்டு. சேக்கிழாரும் நெல்வளத்தைப் பலவிதமாக வருணிப்பதுடன், தென்னை, பனை, நாரத்தை, அரசு, ஆச்சா முதலான மரங்களின் நிறைவையும், மாதவி, வகுளம், சண்பகம், முதலான மலர்களின் பொலிவையும் வருணித்திருக்கிறார்.

இயற்கைவளத்துடன் குடிவளமும் மலிந்திருக்கிறது சோழவள நாட்டிலே.

> மங்கல வினைகள் எங்கும்;
> மணம்செய்கம் பலைகள்
> [எங்கும்;
> பங்கய வதனம் எங்கும்;
> பண்களின் மழலை எங்கும்;
> பொங்கொளிக் கலன்கள் எங்கும்
> புதுமலர்ப் பந்தர் எங்கும்;
> செங்கயல் பழனம் எங்கும்;
> திருமகள் உறையுள் எங்கும்;

[மங்கல வினைகள்—மங்களமான காரியங்கள். மணம்செய் கமபலை-கலியாண முழக்கம். பங்கயம்—தாமரை. பண்—இசை; இராகம். பொங்கு ஒளிக்கலன்கள்—ஜொலிக்கும் ஆபரணங்கள். உறையுள்—வாழும் இடம்.]

சோழநாட்டு நன்மக்கள் குதூகலமாக நல்லின்பவாழ்வு வாழ்கிறார்கள். அடுத்த பாட்டிலும் சேக்கிழார், இன்பமும் மகிழ்வும் எங்கும் என்று அந்த வாழ்வைக் குறிப்பிடுகிறார்.

போகமும் யோகமும்

இன்பவாழ்வுடன் உயர்ந்த ஆத்ம வாழ்வும் வாழ்கின்றார்களாம். யோகமும், போகமும் ஒருங்கே காணப்படுகின்றனவாம்.

யோகமும் தவமும் எங்கும்;
ஊசலும் மறுகும் எங்கும்;
போகமும் பொலிவும் எங்கும்;
புண்ணிய முனிவர் எங்கும்.

[ஊசல்—ஊஞ்சல். மறுகு—தெருக்கள்.]

சாதிகளும் அன்புநெறியும்

சேக்கிழார் காலத்துச் சோழநாட்டில்—அதாவது கி.பி பன்னிரண்டாவது நூற்றாண்டில் தமிழ் நாகரீகம் மகோன்னத நிலையில் இருந்தது என்பதில் ஐயமில்லை. சாதி வேற்றுமைகளும் அக்காலத்தில் வேரூன்றியிருந்தன. அவை தத்தம் நெறியிலிருந்து பிறழாமல் நிலவிவந்தன என்கிறார் சேக்கிழார் தாம் கண்டதைக் கண்டபடியே,

சாதிகள் நெறியில் தப்பா

[தப்பா—தப்பாமல் நிலவின.]

என்று வருணித்தபோதிலும், அன்புநெறியில் வேற்றுமைகளெல்லாம் மறைந்தொழியும் என்பதே இவ்வாசிரியர் கருத்து. இக்கருத்தை இந்நூலில் மிகவிரிவாய்க் காணலாம்.

திருவாரூர்ச் சிறப்பு (செவிவிருந்தும், கண்விருந்தும்)

சோழநாட்டின் சிறப்பைச் சொல்லி ஆசிரியர் அந்நாட்டின் பழமையான திருவாரூர் 'தொல்நகர்' என்ற நகரத்தின் சிறப்பையும் சொல்லுகிறார்.

மாதர் ஆடல்
மணிமுழ வோசையும்
கீத ஓசையும்
கிளர்வுற் றதே!

[மணி-மணிச்சிலம்பு. முழவு-மத்தளம். கிளர்வுற்றது—எழுந்தது.]

என்றும்,

பல்லி யங்கள்
பரந்த ஒலியுடன்
செல்வ வீதிச்
செழுமணித் தேரொலி,
மல்லல் யானை
ஒலியுடன் மாவொலி
எல்லை யின்றி
எழுந்துள எங்கணும்.

[பல்லியங்கள்-பலவகை வாத்தியங்கள். மல்லல்—வளப்பமுடைய. மா—குதிரைகள்.]

என்றும், அந்நகரின் ஒலிவிசேஷங்களை எடுத்த எடுப்பில் வருணித்து, அவ்வூரின் சிறப்பைப் பேசுகிறார்.

திருவாரூரின் மாடமாளிகைகளையும், கூடசாலைகளையும், உயர்ந்த சிகரங்களோடுகூடிய மண்டபங்களையும், கோபுரங்களையும், நீண்ட பலகணிகளோடு கூடிய பெரிய சபைகளையும், அழகான திண்ணைகளையும் ஆசிரியர் வருணித்துவிட்டு, ஆடல்மாதர்களில்

ஒருத்தியும் சுந்தரமூர்த்தி சுவாமிகளை மணந்து இல்வாழ்க்கை நடத்தியவருமான பரவையார் பிறந்த மாளிகையைக் குறித்துப் பேசுகிறார். கடல்போன்ற கடைத் தெருக்களையும் குறிப்பிடுகிறார்.

திருவாரூரின் அரசியல் கொள்கை

இப்பழம்பதியின் பழைய மன்னர்களில் ஒருவராக மனுநீதி கண்ட சோழரைக் குறிப்பிட்டு, அவர் தமது அரசரான அநபாயச் சோழரின் குலமுதல்வர் என்கிறார். மனுநீதி கண்ட சோழரின் கதை பிரசித்தமானது. அவர் மகன் தேரேறி வீதியில் உலாவி வரும்போது ஒருநாள் ஒரு பசுங்கன்று தேர் உருளையில் அகப்பட்டு உயிர் துறந்ததையும், மனுவென்னும் பேர் தாங்கிய அந்த நீதிமன்னர் தமது ஒரே புதல்வனை வரவழைத்து மரண தண்டனை விதித்து, அத்தண்டனையைத் தாமே நிறைவேற்றியதையும் அறியாதார் யார்? இக்கதையைச் சோழமன்னர்களின் நீதி நெறியை வற்புறுத்துவதற்காகவும், திருவாரூரின் சிறப்பை வற்புறுத்துவதற்காகவும் சொல்லுகிறார் சேக்கிழார். அந்த மனுநீதி கண்ட சோழரை 'மன்னுயிர்கட்கெலாம் கண்ணும் ஆவியும் ஆம் பெருங்காவலான்' என்று குறிப்பிட்டு ஒரு லட்சிய மன்னனாகக் காட்டுகிறார்.



மனுநீதிகண்ட சோழரின் கதை சேக்கிழார் கேட்ட ஒரு பழங்கதையாக இருக்கவேண்டும். அக்கதையின் உட்பொருளிலும் லட்சிய நீதியிலும், இவருக்குள்ள ஈடுபாடு,

ஒருமைந்தன் தன்குலத்துக்(கு)
உள்ளான்என் பதும்உணரான்,
தருமம் தன் வழிச்செல்கை
கடன்என்று, தன்மைந்தன்
மருமம், தன் தேராழி
உறஊர்ந்தான் மனுவேந்தன்;
அருமந்த அரசாட்சி
அரிதோ,மற்(று) எளிதோதான்?

[தருமம் தன் வழிச்செல்கை—தருமத்தின் வழியே நடப்பது. மருமம்—மார்பில். தேராழி—தேர்ச்சக்கிரம். உற—பொருந்த]

என்ற பாட்டாக வெளிப்படுகிறது.

அற்புதங்கள்

திருவாரூர்த் தியாகேசப்பெருமானின் அருளால் பசுவின்கன்றும் அரசிளங்குமாரனும் மீண்டும் உயிர்பெறுகிறார்கள்.

முன்னவனே முன்நின்றால்,
முடியாத பொருள் உளதோ?

என்று சேக்கிழாரைப்போன்ற மெய்யன்பர்கள் திருப்தி அடைந்து கடவுளின் கருணைத் திறத்தை வியந்து ஓதுகிறார்கள். அறநெறியில் நின்று எத்தகைய இடையூறுகளையும், இன்னல்களையும் பொறுத்துக்கொண்டு மேல் நோக்கிச் செல்ல வேண்டும் என்பதற்கும், அப்படி முன்னேறும் அன்பர்களுக்கெல்லாம் ஆண்டவன் அருள் புரிவான் என்பதற்கு இத்தகைய கதைகளைச் சான்றாகக் காட்டுகிறார்கள். இத்தகைய நிகழ்ச்சிகளை 'அற்புதங்கள்' என்கிறோம். இயற்கைச் சட்டத்தை மீறும் அற்புதங்களை விஞ்ஞான உலகம் ஒப்புக்கொள்வதில்லை; எனினும் பக்தியுலகம் இன்றும் நம்பி வருகிறது.

இப்படி இறைவன் அருள்புரியும் பெருமை வாய்ந்த திருவாரூரின் சிறப்பை எப்படிச் சொன்னாலும் அளவிட்டுரைக்கமுடியாது என்கிறார் சேக்கிழார். இந்தத் திருவாரூருக்கு அறவடிவமான சிவபெருமானின் பூங்கோயில் அகமலராக—அதாவது நெஞ்சத் தாமரையாக இருக்கிறதாம்.



மதுரை ஜர்னலிஸ்டு ஸ்ரீ டி. கே. ஆத்மாராமுக்கும், சௌ. சரஸ்வதிக்கும் சமீபத்தில் விவாகம் நடைபெற்றது.

அடுந்த அக்டோபர் மாதத்தில் தாயாகப்போகும் எலிஸபெத் இளவரசி தமது தந்தை (பிரிட்டிஷ் மன்னர்) யோடும், தாயாரோடும் சமீபத்தில் நடந்த டர்பி குதிரைப்பந்தயத்தைப் பார்க்கச்சென்றார்.



காஞ்சிபுரம் வக்கில் ஸ்ரீ கே. எம். துரைசாமி அய்யங்கார் குமாரன் சி. கே. எம். சீனிவாசனுக்கும் தின்னனூர் மிராசுதார் ஸ்ரீ எல். வி. தேசிகாச்சாரியர் பெண் சௌ. சரோஜாவுக்கும் சமீபத்தில் விவாகம் நடந்தது.

அட்டைப்படம்

★

மதுவரக்கன் சம்பூர்ணமாக மறைந்தொழியும், காலம் வெகுதூரத்தி லில்லை அவனுடைய ஆட்ட பாட்டங்கள் எல்லாம் இன்னும் இரண்டு, மூன்று மாதங்களோடு நம் மாகாணத்தில் சமாப்தி யாகிவிடும். ஜில்லா ஜில்லாவாகத் துரத்தப் பட்டு இறுதியில் மாகாணத்திலிருந்தே அவன் துரத்தப்படுகிறான். தடம் தடமாக வந்திறங்கும் இந்தக் களெல்லாம் இனி படத்தோடு சரி. சென்னை சர்க்கார் நிர்வாகத்தில் புதுக்கோட்டையில் இம்மாத முதல் மது விலக்கு வந்துவிட்டது. எஞ்சியுள்ள ஜில்லாக்களில் இவ்வருஷத்தில் பூர்ண மதுவிலக்கு ஏற்பட்டுவிடும்.

டிப்போக்கள்:—மதுரை, கோயம்புத்தூர், கும்பகோணம், பம்பாய்.

ஜோதிஷ வித்வான்
V. S. சேஷாத்ரியாச்சாரியார்

45, பரோடா தெரு, தியாகராயநகா, சென்னை 17.

ஒரு ஜாதகம் விவரமாகப் பார்க்க.......................ரூ. 5.
எதிர்காலத்தைப்பற்றிய மூன்று கேள்விகளுக்கு...ரூ. 2.
மேல் கேள்வி ஒன்றுக்கு..............................அணா 12.
ஜாதகம் அல்லது கடிதம் எழுதும் நேரம் தேவை.
ஒரு ஜாதகம் கணிக்க.......................................ரூ. 3.
பிறந்த ஊர், தேதி, மணி தேவை. வி. பி. சார்ஜ் பிரத்யேகம்.

குஷ்டத்திற்கு மருந்து இல்லையா ?

இதோ லக்ஷிமி பிரசாதம்

(லெப்பர் கியூர்)

18 குஷ்டங்களையும் வெண் குஷ்டம், செவ்வாய் மேகம், வெள்ளை, வெட்டை நிவாரணத்திற்கு எல்லாம் சாப்பிடக்கூடிய அமுர்தம்

40 நாட்களில் குணம்

தலைமை ஆபீஸ் : வால்டேர், ஆர். எஸ். | லக்ஷிமி & கோ., 2/135, பிராட்வே, மதராஸ்.



பிரசித்தி பெற்ற

‘காஸினோ ஸ்னோ’

உங்கள் முக பருவைப் போக்கி சருமத்தை மிருதுவாக்கி முகத்தைப் பொலிவுடன் பிரகாசிக்கச் செய்வது காஸினோ ஸ்னோவே வாங்கும்பொழுது “காஸினோ” மார்க்கைப் பார்த்து வாங்குங்கள்.

CHANDRA TRADING CO.,
93, ACHARAPPAN ST., G.T. MADRAS.

“சுதேசமித்திரன்” வாரப்பதிப்பு
சந்தா விவரம்

★

(சந்தாவை முன்னதாகக் கட்டவேண்டும்)

	இந்தியா சிலோன்	வெளிநாடு
1-வருஷம்	13 0	18 0
6-மாதம்	7 0	9 8
3-மாதம்	3 12	5 0

தனிப்பிரதி அணா 4

3 மாதத்திற்கு குறைந்து சந்தா ஒப்புக்கொள்ளப்படமாட்டாது.
மானேஜர்: “சுதேசமித்திரன்” ஆபீஸ், மவுண்ட்ரோட், மதராஸ்.

ஸ்ரீமத்பகவத்கீதை

★

சென்னை ஸம்ஸ்கிருத காலேஜ் உபாத்தியாயராய் இருந்த கீர்த்தனாசார்ய

ஸி. ஆர்.
ஸ்ரீனிவாஸய்யங்கார் பீ. ஏ.
எழுதியது.

மூலத்துடனும், அத்வைத வசிஷ்டாத்வைத பாஷ்யச் சுருக்கத்துடனும், இதுவரையில் வெளியிடாத பல ரகஸ்யங்கள் அடங்கிய முன்னுரையுடனும், கண்ணனுடைய கருத்திற்கிணங்க எழுதப் பட்டது.

★

முழுகாலிகோ பயிண்டு செய்தது.

விலை ரூ. 3-8-0

(தபால் செலவு 0-8-0)

இன்னும் இதர புத்தகங்களும் கிடைக்கும்.

★

எமது எல்லா புத்தக சாலைகளிலும் கிடைக்கும். நேரில் விஜயஞ் செய்து தேவைக்கு ஆர்டர் செய்யவும். எல்லா ‘மித்திரன்’ ஏஜண்டுகள் மூலமும் பெற்றுக்கொள்ளலாம்.

புத்தக ஜாபிதாவுக்கு எழுதவும்.

மானேஜர்,

சுதேசமித்திரன் ஆபீஸ்
மவுண்ட்ரோடு, மதராஸ்.

சக்தி ஆரூடம்!

ரேடியோ புகழ் ஸ்ரீமதி திருக்கோவிலூர் S. அலமேலு எழுதுகிறுர்:—

"தாங்கள் எனக்கு மேமீ 27-ந் தேதியிலிருந்து ஜூன்மீ 3-ந் தேதிக்குள் ரூ. 1000 கிடைக்குமென்று கூறியபடியே ரூ. 1000 கிடைத்தது."

1 முதல் 3 கேள்விகள் ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணு 8. 1 வருட பலன் ரூ. 5. ஜாதகம் கணிக்க ரூ. 2. சக்தி கவசம் ரூ. 7-8-0. வி.பி.பி. தனி. ஜாதகம் or கடிதம் எழுதும் நேரம் தேவை. **N. B.** வெளிநாட்டிற்கு முன் பணம் தேவை.

சக்தி ஹோம், விருத்தாசலம், P. O. (S. I)

பாத்ருடுவின் "பால சஞ்சீவினி"

Regd)

குழந்தைகளின் சுரல், குலே, ஜுரக்கட்டி வியாதிகளை சொற்ப காலத்தில் நிச்சயம் குணமளிக்கும் சிறந்த மருந்து இது ஒன்றுதான். அசல் விஜயநகரம் மருந்து. போலிகளைக்கண்டு ஏமாருதீர்கள்.

Dr. பிள்ளா பாப்பய்யா பாத்ருடு & பிரதர்,
11, தெற்கு மாட வீதி, மயிலாப்பூர்.

கும்பகோணம் கிளை:—
7, சாரங்கபாணி கோவில் கீழவீதி

திருச்சி கிளை:—
15, புகழிய பிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்டு.

டாக்டர் பால்ஸ் லோடஸ் ஹனி மிக அற்புதமான மூலிகை—கண்ணில் பூ விழுதல், கிளாகோமா, மற்றும் கண் உபாதைகளை மாயமாக குணமாக்கி பார்வையை அதிகரிக்கச்செய்யும். விலை புட்டி 1-க்கு ரூ. 2—8—0.

டாக்டர் பால்ஸ் நயம் கஸ்தூரி : பரிசுத்தத்திற்கு உத்தரவாதம். தோலா விலை ரூ. 80. அரைக்கால் தோலாவிற்குக் குறைந்து சப்ளை செய்ய முடியாது.

வீட்டிலேயே வாசனை தைலங்கள் தயாரித்தால் பணம் மிச்சமாகும்: கீழ்க்கண்ட மோஹினி பியூர் செண்டுகளில் ஏதேனும் ஒன்றை தேங்காய் எண்ணெய், மணிலா, ஆமணக்கு அல்லது நல்லெண்ணெயில் சேர்த்தால், மலிவான விலையில் சிறந்த வாசனைத் தைலம் கிடைக்கின்றது. இலவசமாக எண்ணெயை சிவப்பாக்கும் ஆல்கானட் வேர்கள் அனுப்புவோம்.

மோஹினி பியூர் செண்ட் ரகங்கள்.

1. சம்பக் செண்ட்	ரூ. 2-0.	8. ரோஜா செண்ட்	ரூ. 1-8.
2. கியோரா	,, 2-0.	9. சுரங்கி	,, 1-8.
3. காஸ்	,, 2-0.	10. லில்லி	,, 1-0.
4. போகுல்	,, 1-8.	11. லோடஸ்	,, 1-0.
5. ஜாஸ்மின்	,, 1-8.	12. ஆரஞ்சு	,, 1-0.
6. கதம்பம்	,, 1-8.	13. மோதியா	,, 1-0.
7. ஹேனு	,, 1-8.	14. கோலோன்	,, 1-0.

அரை அவுன்ஸ் புட்டிகளில். பாக்கிங், போஸ்டேஜ் வி. பி. பி. தனி.

S. PAUL & Co., Perfumers, (Dept. S W.) 4, Hospital St., **Calcutta 13.**

முக்கிய அறிவிப்பு

மந்தார விடு இலை, தையல் இலை

சகாயமான விலைக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் எங்களிடம் கிடைக்கும்.

S. மாணிக்கம்செட்டி கோ.,
6—7, ஆதியப்ப நாயக்கன் தெரு
மதராஸ் 1.

ஏஜண்டு இல்லாத இடங்களுக்கு ஏஜண்டுகள் தேவை.

கூடிய சீக்கிரம் எதிர்பாருங்கள்

மாணிக்கபஸ்பம் சிவபுரிபுகையிலை
மீனம்பாளையம் ரோஸ் புகையிலை
வாசனை பட்டை புகையிலை

வெளிவந்து விட்டது!

வாசனை பாக்குத்தூள்
காலணுவுக்கு இரண்டு.

சென்னைக்கு
சில்லரை விற்பனையாளர் தேவை.
வெளியூர்களுக்கு ஏஜண்டு தேவை.

தயாரிப்பவர்:
மாணிக்க விலாஸ்
11 பீட், மதராஸ் 1.



501 ஸோப்பால் வெளுக்கப்பட்டது.

தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி, லிமிடெட்.

காங்கிரஸ் மகாசபை சரித்திரம்

முதல் பாகம் கைவசமில்லை
இரண்டாம் பாகம் ,, ரூ. 2.
மூன்ரும் பாகம் ,, ரூ. 2.
(தபால் செலவு அணு 10.)
மூன்பணம் அனுப்பவேண்டும்.
V. P. P. அனுப்புவது கிடையாது.
"சுதேசமித்திரன்" புத்தகசாலை,
மவுண்ட்ரோட், சென்னை.

வெட்டுகள், காயங்கள், புண்கள் & ரணங்கள்

உலகப் புகழ்பெற்ற
ஜாம்-பெக் உபயோகித்தால்
குணமடையும்



உலகின் மிகச் சிறந்த கிருமிநாசி மருந்து ஜாம்-பெக் அதன் மருந்து எண்ணெய்கள் சருமத்துக்குள் புகுந்து வேலை செய்வதால்வேகமாகவேநிவாரணமளிக்கும் பாதிக்கப்பட்ட கிரந்திகளுக்கு ஜாம்-பெக் சமனமூட்டி விஷம் திண்டப்பட்டு கிருமி நிறைந்த சருமத்தை சுத்தப்படுத்தி குணமாக்கும் மிருகக்கொழுப்பில்லாததற்கு உத்தரவாதம்

எப்போதும் உபயோகியுங்கள்

சருமநோய்கள், காயங்கள், பூச்சி கடிகள், புண்ணுகி வலிக்கும் கால்கள், தசை வலி தேக குளிர்ச்சி இவற்றிற்கு சிறந்தது.

Zam-Buk

சமனமூட்டி நிவாரணமளிக்கும் கிருமிநாசி மருந்து

ஏஜண்டுகள்: மெஸர்ஸ் தாதா & கம்பெனி பி டி மதராஸ்.

மறக்க முடியாத உண்மை!
நாகரீக வாழ்விற்கு அடிப்படையானது
அழகு மிகுந்த ஆடைகளே !!

தொழில் முறையில் அனுபவம் வாய்ந்தவர்களைக் கொண்டு கண்களைக் கவரும் கலர்களில் வனப்பு மிகுந்த ஜரிகை வேலைப்பாடுகளோடு தயாரிக்கப்பட்ட

பட்டு

புடவைகள் **வேஷ்டிகள்**

எங்கள் வசம் ஏராளமாயிருக்கின்றன.

C. R. பாலுசாமி அய்யர்

115, நைனியப்ப நாய்க்கன் தெரு, மதரூஸ்.	9, ஜடாமுனி கோவில் தெரு, மதுரை

போன் நெ. 3432.

THE TRUTH IN YOUR HOROSCOPE

YOUR REAL LIFE TOLD FREE

Would you like to know what the Stars indicate for you, some of your past experiences, your strong and weak points. etc? Here is your chance to test FREE the skill of Pundit Tabore India's most famous Astrologer, who by applying the ancient science to useful purposes has built up an enviable reputation? The accuracy of his predictions and the sound practical advise contained in his Horoscopes on business, speculations, Finance Love affairs, Friends Enemies, Lotteries, Travels. Changes Litigation Lucky Times, Sickness etc., have astounded educated people the world over. GEORGE MACKEY of New York believes that Tabore must possess some sort of second sight.



To popularise his system Tabore will send you Free your Astral-Interpretation if you forward him your full name (Mr. Mrs. or Miss). address and date of birth (English Calendar) all clearly written by yourself. No money wanted for Astrological Work, Postage etc., but send about 6 Annas (Stamps) for stationery, testimonials and other interesting literature. Tabore believes in fair dealings and all work for which he receives any payment is on the basis of satisfaction guaranteed or full money refunded. You will be amazed at the remarkable accuracy of his statement about you and your affairs. Please write and correspond in ENGLISH only. Write now as this offer may not be made again. No personal interviews, all consulations by mail only. Address: **PUNDIT TABORE (Dept. 337), Upper Forjett Street: Bombay 26.**

காங்கிரஸ் மகாசபை சரித்திரம்

முதல் பாகம் கைவசமில்லை

இரண்டாம் பாகம்	,,	ரூ. 2.
மூன்றாம் பாகம்	,,	ரூ. 2.

தபாற் செலவு அணு 10.

முன்பணம் அனுப்பவேண்டும்.

V. P. P. அனுப்புவது கிடையாது.

மானேஜர்:
"சுதேசமித்திரன்" புத்தகசாலை,
மவுண்ட்ரோட், மதராஸ்.

தந்தி விலாசம்: "கோகுல்" ஸ்தாபிதம் 1909. டெலிபோன் நே. 57

டி. எஸ். ஆர். & கோ.,

கும்பகோணம்.

(பிராஞ்சு: மன்னார்குடி)

சந்தனாதித் தைலம் - அரைக்கீரை விதைத் தைலம்

கோகுல் கூந்தல் தைலம்

கூந்தலுக்கு வளர்ச்சியையும், குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றவை.

வத்திகளுள் சிறந்தது "கோகுல்" வத்திகள்

பல காய்கறி ஊறுகாய், கோகுல் வாசனைப் பாக்கு

முதலிய இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

ஸோல் ஏஜெண்டுகள்:—

புஷ்பவனம் ஸ்டோர்ஸ்,
பைகிராப்ட்ஸ் ரோட்,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

(கோவை & பாலக்காடு ஏஜெண்டு)

B. Balapattabi Chettiyar,
246, Vysyal St.,
COIMBATORE.

சகல விதமான பட்டு & நூல் ஜவுளிகளுக்கு
கைராசியும் நம்பிக்கையுமுள்ள
புதிய ஜவுளிக்கடை

ராம்ராஜ்யா ஹால்

N.R. ராமசந்திர செட்டி & கோ, கடைவீதி... சேலம்

டெலிபோன்: 2246. தந்தி: கிளாவர் பீடி



லேட் கான்சாகிப் எம். முஹமது உமர்சாகிபுவின்குமாரரான முஹமத் நூருல்லா என்று பெயர்கொண்ட நான் இவ்வியாபாரத்தை மிகவும் அபிவிருத்தி செய்துள்ளேன். மிகச் சிறந்த புகையிலையையும், உயர்தரமான சரக்குகளையும் உபயோகித்தே

ஸ்பேட் கிளாவர் பீடிகள்

தயாரிக்கப்படுகின்றன. இந்த பீடிகளின் ரகமும், மணமும் குணமும் என் தகப்பனார்காலத்திலிருந்ததைப் போன்றேசிறப்பாகவிளங்குகின்றது.

முகம்மது நூருல்லா
ஸோல் புரொப்ரைட்டர்,
ஸ்பேட் கிளாவர் & ஆர்டீன் பீடிகள்
37, மண்ணடி, மதராஸ்.

உங்கள் எதிர்காலம்

பணநிலைமை, தொழிலில் மாறுதல், காதல், கலியாணம், குடும்பம் பிரயாணம், எதிர்பாராத லாபநஷ்டம், படிப்பு, ஆரோக்கியம், அதிருஷ்டநாள், எண், நிறம் மற்றும் எதிர்காலத்தில் உங்களுக்கு ஏற்படக்கூடிய பலன்கள் எழுதி அனுப்பப்படும். ஜாதக நகல் அல்லது முழுப்பெயர், சுமார் வயது, செய்யும் தொழில் கடிதம் எழுதும் நேரம் குறிப்பிடவும். ஒன்று முதல் 5 கேள்விகளுக்கு பதிலளிக்க ரூ, 2. மேல் ஒவ்வொரு கேள்விக்கும் அணா 8: ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன் எழுத ரூ 6. வாரப் பலனுக ரூ 20. ஜாதகக் குறிப்பும் சுருக்கமான பொதுப்பலனும் எழுதி அனுப்ப ரூ 5. தபால் செலவு தனி.

வி. கே. கிருஷ்ணமாச்சாரியார்,
Astrologer & Journalist, MADRAS 5.

Printed and Published by S. Chakrapani Iyengar at the "Swadesamitran" Press, Victory House Mount Road, Madras. Editor: C. R. Srinivasan, B. A.

ரீடா

அழகிய கேசத்தை வளர்க்கிறது

ரீடா, கூந்தல் ஆரோக்கியத்தில் ஒரு புது முறை. அது கூந்தல் வேர்களுக்குத்தேவையானஇயற்கை போஷாக்குகளை யூட்டி, பொடுகு வழுக்கையைத் தடுத்து அபார வசீகரத் தோற்றமுள்ள பட்டுப்போன்ற மிருதுவான கூந்தலை அடர்த்தியாக வளரச்செய்கிறது. அது பறட்டையான கூந்தலுக்கு பள பளப்பு அளிப்பதுடன் இஷ்டத்திற்குகந்தவாறு கூந்தலை படியவைப்பதற்கும் சிறந்தது. ஒரு புட்டி ரீடா வாங்கி உங்கள் கூந்தலுக்கு புத்துயிரளித்து புது அழகு பெறச் செய்யுங்கள்.

எங்கும் கிடைக்கும், ஒரு புட்டி விலை அணா 15.

ஹிந்தி, ஆந்திரா, தமிழ், கன்னட சினிமா நக்ஷத்திரங்களெல்லோரும் போற்றுகின்றனர்.

லலிதா பவர்:—மிகச்சிறந்த கூந்தல் டானிக். தேவையுள்ளோர் அனைவருக்கும் ரீடாவையே சிபார்சு செய்வேன். நம்தாய் நாட்டில் இவ்வளவு அருமையான சரக்குகளை தயாரிப்பதுபற்றி பெருமையடைகிறேன்.

சாரதா ஜுன்னர்கார்:—எனது சமீபத்திய அனுபவம் இது. கூந்தல் உதிர்வதை நிறுத்துவதற்கு ரீடாவைப்போன்ற அற்புத டானிக் வேறு கிடையாது. கேசத்தைப் பட்டுப்போல் மிருதுவாக்கி பளபளப்பூட்டும் அற்புத மூலிகைகள் இந்த தைலத்தில் இருக்கின்றன. கேச டானிக்குகளில் ரீடா மிகச்சிறந்தது என்பது உறுதி.

கே. ஈச்வர்லால்:—நான் ஒருமுறை ரீடா உபயோகித்தேன். அது முதல் என் குடும்பம் முழுவதும் ரீடாவையே உபயோகித்து வருகிறோம். தைலங்களில் ரீடா ஹேர் டானிக் மிகச்சிறந்தது என்பதை நண்பர்கள் அறிவது திண்ணம்,

சுஷில் குமார்:—நான் ரீடா கூந்தல் டானிக்கை உபயோகித்திருக்கிறேன். என் கூந்தல் வளர்ச்சிக்கு அது உதவிபுரிகிறதாகக் கண்டேன். மயிர் உதிர்வதை நிறுத்துவதற்கும், மூளை குளிர்ச்சிக்கும் நான் இதை யாவர்க்கும் சிபார்சு செய்கிறேன்.

ஜயந்த்:—நான் கடந்த சில மாதங்களாக ரீடா கூந்தல் டானிக்கை உபயோகித்ததில் அது சிறந்த தைலம் என கண்டேன், ஸ்திரீகளின் கூந்தல் வளர்ச்சிக்கு ஏற்ற டானிக். ஆடவர்களின் கூந்தலைப் பாதுகாக்க சிறந்த டானிக்.

கண்ணாம்பா:—ரீடா எல்லாவிதத்திலும் சிறந்தது என மகிழ்ச்சியுடன் கூறுகிறேன். அது உண்மையாய் அவ்வளவு பயனுள்ளது.

புஷ்பவல்லி:—ஒரு வருஷ காலமாக என் மயிர் உதிர்ந்துகொண்டே இருந்தது. ரீடா உபயோகித்ததிலிருந்து மயிர் கொட்டுவது நின்றது. ரீடா என் கூந்தல் அழகைப் பாதுகாக்க உதவி புரிந்தது. ரீடா ஒரு சிறந்த கூந்தல் டானிக் என்பதே என் அபிப்பிராயம்.

சூர்ய குமாரி:—ரீடா நறுமணமுள்ளது, அதை தடவிக்கொண்டால் குளிர்ச்சியூட்டுகிறது. நான் இனி ரீடாவையே உபயோகிக்கவேண்டுமென்று தீர்மானித்திருக்கிறேன்.

கிருஷ்ணவேணி:—நான் சிலகாலமாக குளிர்ச்சியாக இருக்கும் நறுமண ரீடாவை உபயோகித்து வந்தேன். மயிர் உதிர்வதை தடுக்கவும் புது கேசத்தை வளர்க்கவும் ரீடா மிகச் சிறந்த டானிக் என்றே கூறுவேன். அந்நியநாடுகளிலிருந்து வரும் கூந்தல் டானிக்குகளைவிட ரீடாசிறந்தது என்பதே என் அபிப்பிராயம்.

வசுந்தரா தேவி:—நான் ரீடா உபயோகித்ததில் அடர்த்தியான கூந்தல் வளர்ச்சிக்கும், பாதுகாப்பும் அது சிறந்த கூந்தல் டானிக் என்று நிரூபித்துவிட்டது.

ஆர். பத்மா:—என்னை அழகூட்டும் என்னுடைய நீண்ட கருத்த கூந்தலுக்கு ரீடாதான் காரணம். அது எவ்வளவு சீக்கிரத்தில் பலனை அளிக்கிறது! அது என் கூந்தலை மிருதுவாக்கியதுடன் அடர்த்தியான வளர்ச்சியையும் அடைந்திருக்கிறது. கூந்தல் அழகுக்கு ரீடாவையேதான் அனைவருக்கும் சிபார்சு செய்வேன்.

ராஜம்மா:—கடந்த இரண்டு மூன்று மாதங்களாக நான் ரீடா உபயோகித்ததில் எவ்வித கூந்தல் சம்பந்த உபத்திரவங்களுக்கும் அது இணையற்றது என்று அறிந்தேன். அதில் கூந்தல் வளர்ச்சிக்குத் தேவையானதும் கேச உபத்திரவங்களைத் தடுப்பதுமான மருந்துகள் இருக்கின்றன. அடர்த்தியாக அழகான கூந்தல் வளர்ச்சி விரும்பும் ஸ்திரீகள் அனைவருக்கும் ரீடா சாலச்சிறந்தது என்றே கூறுவேன்.

லக்ஷிமிபாய்:—சில காலமாக ரீடா நான் உபயோகித்ததில் அது ஈடு இணையற்றது என்று எனக்குத் தோன்றுகிறது.

வி. என். ஜானகி:—நான் பல நாட்களாக ரீடா கூந்தல் டானிக்கை உபயோகித்திருக்கிறேன். அது கூந்தல் வளர்ச்சிக்கும் கூந்தல் பாதுகாக்கவும் சிறந்த டானிக்.

எ. ஆர். சகுந்தலா:— நான் அனேக நாட்களாக ரீடா உபயோகிக்கிறேன். அது அளிக்கும் பயன் ஏராளம்.

ரீடா ஹேர் டானிக்

தரகரை நம்பினால் . . .

நீங்கள் மோசம் அடைவீர்கள்

வைரம் வாங்குவதில் மிதமிஞ்சி ஜாக்கிரதையுள்ளவர் வியாபாரியின் நாணயத்தை நம்பாமல் மூன்றாம் மனிதரை நம்பினால் ஏமாற்றமடைவர்.

தரகர் தன்னுடைய நலனுக்கே பாடுபடுவார். சுய நலனுக்காக தனக்கு **சகாவான** வியாபாரியிடமே விகிதம் நிர்ணயித்துக்கொள்வார்.

அதிகமான வரும்படி கிடைக்கும் **இடத்திற்கே** அவர் வியாபாரத்துக்கு சிபார்சு செய்வார். அதனால் உங்களுக்கு சிறந்த ரகம் கிடைக்காது. உங்கள் நலன் பாதிக்கப்படும்.

★ புகழ் பெற்ற வியாபாரிகளிடம் நேருக்கு நேர் வியாபாரம் செய்வதே உங்களுக்கு நலனைத் தரும்.

ஸூரஜ்மல்ஸ்

50 வருஷப் புகழ்பெற்ற
வைர வியாபாரிகள்.

313, நேதாஜி ரோட், :: சென்னை.